



Follow us

# தமிழன்

THAMILAN தமிළන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 472 பிலவ வருடம், மாசி மாதம் 23ஆம் திகதி திங்கட்கிழமை (07.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 03, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30





# சுயாதீனமாக செயற்பட பங்காளிகள் தீர்மானம்!

## ஆளுங்கட்சிக்குள் தீவிரமடையும் முறுகல்

**யோ.தர்மராஜ்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச, உதய கம்மன்பில மற்றும் அமைச்சராகவுள்ள வாசுதேவ நாணயக்கார ஆகியோர் சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டார தகவல்கள், 'தமிழன்' நாளிதழுக்கு நேற்றிரவு தெரிவித்தன.

நாடாளுமன்றத்திலும் சுயாதீனமாக செயற்படுவதற்கான நடவடிக்கைகளை தீவிரப் படுத்தியுள்ளதால் நாளை ஆரம்பமாகும் சபை அமர்வில் சுயாதீனமாக செயற்படலாம் எனவும் தெரிவித்தன.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகளும் அரசாங்கம் பயணிக்கும் பாதை பிழையானது, பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு உரிய நடவடிக்கைகள்... 02 பக்கம்



தமிழ் முற்போக்குக் கூட்டணியினால் அரசாங்கத்துக்கு எதிராக ஹட்டனில் நேற்று மாபெரும் போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்துப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நாடாளு மன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அரசிலிருந்து வெளியேற சுதந்திரக் கட்சி முடிவு

## ஜனாதிபதியுடன் நாளை தீர்க்கமான பேச்சு

**யோ.தர்மராஜ்**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதற்கான யோசனை ஒன்று கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, தற்போதைய நிலைமை குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நாளை விசேட சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அரச தரப்பினால் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதுடன், கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேனவிற்கு... 02 பக்கம்

# மனிதாபிமானமற்ற அரசாங்கத்தை மாற்றியமைக்க அணி திரளுங்கள்

## சஜித் பிரேமதாச பதுளையில் கோரிக்கை



**டி.அசோக்குமார்**

இந்த அரசாங்கம் மிகவும் மனிதாபிமானமற்றதாகும். இந்த நிலைமையை மாற்ற நாட்டில் அரசியல் மாற்றம் தேவை. 02 பக்கம்

# இனி மின்தடை கிடையாது!

## அமைச்சர் லொக்குகே உறுதி



**யோ.தர்மராஜ்**

மின்சார உற்பத்திக்காக மின்சார சபைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்து, கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தத்திற்கமைய தேவையான எரிபொருளை மின்சார சபைக்கு வழங்கியுள்ளதுடன், இனியும் தட்டுப்பாடின்றி மின்சாரம் வழங்கப்படும் எனவும் வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று தெரிவித்தார். மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருள் மின்சார சபைக்கு வழங்கப்பட்டுள்ளதா என வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். » 02 பக்கம்

# விமல், கம்மன்பிலவுக்கு சபையில் 04ஆவது வரிசை

**யோ.தர்மராஜ்**

நாடாளுமன்றத்தில் முன் வரிசையில் அமர்ந்திருந்த விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரது அமைச்சுப் பதவிகள் பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து நாளை ஆரம்பமாகவுள்ள சபை அமர்வில் நான்காவது வரிசையில் அமர்வதற்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற வட்டார தகவல்கள் தெரிவித்தன. 02 பக்கம்

# பேக்கரி உற்பத்திகளுக்கு மோசமான பாதிப்பு



**1,000 வெதுப்பகங்கள் மூடப்பட்டதாக உரிமையாளர்கள் சங்கம் அறிவிப்பு** 02 பக்கம்

# சு.க. வெளியேறினால் பிரச்சினையில்லை

## அமைச்சர் திலும் அமுனுகம கருத்து

**யோ.தர்மராஜ்**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசிலிருந்து வெளியேறினால் எங்களுக்கு எவ்வித பிரச்சினையுமில்லையென போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். 02 பக்கம்

## உஷ்



எஸ்.பி. திஸாநாயக்கவுக்கும், திலும் அமுனுகமவுக்கும் அமைச்சுப்பதவிகள் வழங்கப்பட்டதால் அதிருப்தியில் இருக்கிறாராம் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே.

நல்லாட்சி காலத்தில் அவர்களோடு நின்ற எஸ்.பிக்கெல்லாம் பதவிகள் கொடுத்தால், இந்த ஆட்சியை ஏற்படுத்த பாடுபட்ட நாங்கள் வீதியில் நிற்பதா? என்று கேட்கிறாராம் லொஹான்.

அரசியலில் முடிவொன்றை எடுக்க வேண்டிவருமென அவர் தனது நண்பர்களிடம் கூறிப் புலம்பியதாக தகவல்.

# மலையக மக்களுக்காகவும் எமது குரல் ஓங்கி ஒலிக்கும்

## சாணக்கியன் எம்.பி. மாத்தளையில் தெரிவிப்பு

**எம்.எஸ்.எம்.மஸாஹிம்**

நாட்டில் வடக்கு, கிழக்கு மக்களுக்காக குரல் கொடுக்கும் அதேவேளை எங்கள் குரல் மலையக மக்களுக்காகவும் ஓங்கி ஒலிக்குமென நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மாத்தளை நகரில் தெரிவித்தார். 02 பக்கம்



# விமல், கம்மன்பிலவின் பாதுகாப்பை நீக்காதிருக்க பிரதமர் ஆலோசனை

**யோ.தர்மராஜ்**


அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சர்களுக்கான பாதுகாப்பை தொடர்ந்தும் வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 பங்காளிக் கட்சிகளும் இணைந்து 'முழு நாடும் சரியான பாதையில்' என்ற தொனிப்பொருளில் கடந்த 2ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாநாட்டில் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்ததையடுத்து, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கடந்த 3ஆம் திகதி அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர். 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



அடடே.. அப்படியெண்டா இவ்வளவு காலமும் சுயாதீனமில்லாமத்தான் இருந்திருக்குது விமல் டீம்...

# அரசுக்கு எதிராக முற்போக்கு கூட்டணி ஹட்டனில் மாபெரும் போராட்டம்











**(செ.தி. பெருமாள், க. கிஷாந்தன்)**

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு போராட்டம் ஹட்டன் நகரில் நேற்று (06) இடம்பெற்றது.

நாட்டில் தற்போது அத்தியாவசிய பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக நாட்டு மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதை சுட்டிக் காட்டியும் உரிய தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரியும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் ஹட்டன் நகரில் நேற்று பிற்பகல் 03 மணியளவில் மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஸ்ணன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டதோடு, இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோரும் கலந்து கொண்டனர். மேலும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் முக்கியஸ்தர்களும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, தொடர் மின் விநியோக துண்டிப்பு, அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றமும் தட்டுப்பாடும் இவற்றின் காரணமாக மலையக மக்களும் இந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய மக்களும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கருத்து தெரிவித்தனர்.

# இன்றுமுதல் பாடசாலைகள் ஆரம்பம்

**நா. தினுஷா**

அரச பாடசாலைகள் மற்றும் அரச அனுமதியுடைய தனியார் பாடசாலைகள் இன்று முதல் (07) மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்காக கடந்த பெப்ரவரி மாதம் 07ஆம் திகதியிலிருந்து பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

அதற்கமைய இன்றிலிருந்து கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும்போது எண்ணிக்கையின் அடிப்படையில், குழுக்களாக மாணவர்களை பாடசாலைகளுக்கு அழைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சகல பாடசாலைகளினதும் அதிபர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வகுப்பறையொன்றில் 20இற்கும் குறைவான மாணவர்கள் இருக்கும் பாடசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் வழமைபோல் முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மேலும் வாகுப்பறையொன்றில் 20 இற்கும் அதிகமான மாணவர்கள் கொண்ட பாடசாலைகளின் மாணவர்களை குழுக்களாக அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வகுப்பறைகளில் 40இற்கும் அதிக எண்ணிக்கையிலான மாணவர்களை கொண்ட பாடசாலைகளின் மாணவர்களை மூன்று குழுக்களாக பிரித்து கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அரசிலிருந்து வெளியேற...

எதிராக ஆளுந்தரப்பு பின்வரிசை உறுப்பினர்கள் கடும் விமர்சனங்களை முன்வைத்துவந்தனர்.

இதனால், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டுமென அடிமட்டத்தில் கடும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதுடன், பல தொகுதிகளில் அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும் என்ற யோசனைகளும் நிறைவேற்றப்பட்டன.

இந்நிலையில், அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட 11 பங்காளிக் கட்சிகளும் இணைந்து முழு நாடும் சரியான பாதையில் என்ற மாநாடு ஒன்றை கடந்த 02 ஆம் திகதி நடத்தியிருந்தன. இதனையடுத்து, அதற்கு தலைமைதாங்கியிருந்த முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

இந்த மாநாட்டில் கலந்துகொண்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேனவுக்கு எதிராக ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் கடும் விமர்சனங்களை முன்வைத்ததுடன், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசிலிருந்து விலகினாலும் எங்களுக்கு பிரச்சினை இல்லையெனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்றுமுன்தினம் (06) இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தில், அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும் என்ற யோசனை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், இனி எந்தவொரு தேர்தலிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மொட்டுச் சின்னத்தில் போட்டியிட முடியாது என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, தற்போதைய நிலைமைக்கு அமைய மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் குறித்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். அதன்படி, நாளை (08) பிற்பகல் 04 மணிக்கு இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக 10 யோசனைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்திடம் முன்வைத்திருந்தது. இந்த யோசனை முன்வைக்கப்பட்டு ஒரு மாதத்துக்கு பின்னரே ஜனாதிபதி இந்த சந்திப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

## சு.க. வெளியேறினால்...

இதேவேளை, அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச மற்றும் பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகிய இருவரையும் அரசில் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். அதற்கான சமரசப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் அமைச்சர்கள் இருவரும் பதவியிலிருந்து நீக்கப்பட்டது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை மட்டும் கருதி, சில தரப்புகளால் முன்வைக்கப்படும் யோசனைகளை எல்லாம் ஏற்றுச் செயற்பட முடியாது.

ஆனால், அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச மற்றும் பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில ஆகிய இருவரையும் அரசில் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். அதற்கான பேச்சுக்களை உடனடியாக முன்னெடுக்க வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதாக இருந்தால் வெளியேறட்டும். அதனை நாம் தடுக்கவில்லை. அது எங்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன வழமைபோல் தனது வேலையை விமல், கம்மன்பில போன்றவர்களுக்கும் காண்பித்துவிட்டார்.

பங்காளிக் கட்சிகளின் மாநாட்டுக்கு வருகை தந்த அவர், பங்காளிக் கட்சிகள் நடத்திய ஊடக சந்திப்புக்கு வரவில்லை. எனவே, நம்ப வைத்துக் காலைவாரிவிட்டார். யாரையேனும் சிக்கவைத்து விட்டு அவர் தப்பித்துக்கொள்வார். இது அவருடைய தந்திரமாகும் - என்றார்.

## பேக்கரி உற்பத்திகளுக்கு...

**கே. சுபானி**

எரிபொருள் தட்டுப்பாட்டால் நாடுமுழுவதும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேக்கரிகள் முடப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

எதிர்வரும் காலங்களில் மேலும் பல பேக்கரிகளை மூடும் நிலை உருவாகும் எனவும் அவர் கவலை வெளியிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு தற்போது சந்தித்துவரும் பாரிய பொருளாதாரப் பிரச்சினையால் பல தொழில்துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில், பேக்கரி உற்பத்தித் தொழிலும் மிக மோசமான பாதிப்பை சந்தித்துள்ளது.

பேக்கரி உற்பத்திப் பொருட்களுக்குத் தேவையான கோதுமை மா, முட்டை, பாம் எண்ணெய் உள்ளிட்ட மூலப்பொருட்களுக்கான விலை அதிகரித்துள்ளது.

இந்நிலையில் எரிபொருள் விலையேற்றம், தட்டுப்பாடு நிலவுவதுடன் தற்போது மின் வெட்டும் இடம்பெறுகிறது.

இதன் காரணமாக பேக்கரி உற்பத்திகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் நாடுமுழுவதும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பேக்கரிகள் முடப்பட்டுள்ளன.

இந்த அசாதாரண சூழல் தொடருமாயின், இனிவரும் காலங்களில் நாடுமுழுவதும் உள்ள பேக்கரிகள் மூடப்படும் சூழ்நிலையும் உருவாகும்.

ஏலவே, நாடுமுழுவதும் இரண்டில் ஒருபகுதியளவான எமது நடமாடும் சிற்றுண்டி வண்டிகளின் எண்ணிக்கையும் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொருட்களுக்கான விலையேற்றம் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு, மின் துண்டிப்பு உள்ளிட்ட காரணங்களால் பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் மக்கள் எமது உற்பத்திப் பொருட்களை வாங்காமலும் கூட விடலாம் என்றார்.

## விமல், கம்மன்பிலவுக்கு...

அமைச்சுப் பதவி கிடைத்தமைக்கு அமைய எஸ்.பி. திசாநாயக்கவுக்கு சிரேஷ்ட உறுப்பினர் அடிப்படையில் முன் வரிசையில் அமர்வதற்கு ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தின் பிரதான படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கடந்த 03ஆம் திகதி ஜனாதிபதியினால் அமைச்சு பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர். இதனால், இதுவரை நாடாளுமன்றத்தில் முன் வரிசையில் அமர்ந்திருந்த விமல் வீரவங்ச மற்றும் இரண்டாம் வரிசையில் அமர்ந்திருந்த உதய கம்மன்பில ஆகியோருக்கு நாளை (08) ஆரம்பமாகும் சபை அமர்வில் நான்காவது வரிசையில் அமர்வதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்சவுக்கு ஆளுந்தரப்பின் நான்காவது வரிசையில் 73 ஆவது ஆசனமும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கு 78ஆவது ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் அமைச்சராக பதவியேற்ற அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவுக்கு ஆளுந்தரப்பின் முன் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ஆளுந்தரப்பின் நான்காவது வரிசையில் அமர்ந்திருந்த இவருக்கு, நாளை (08) ஆரம்பிக்கும் சபை அமர்வில் முன் வரிசையின் இரண்டாவது ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, போக்குவரத்து அமைச்சராக பதவியேற்ற அமைச்சர் திலும் அமுனுகம, மூன்றாவது வரிசையிலிருந்து இரண்டாவது வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, தற்காலிகமாக பதவி விலகியிருந்த இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவுக்கும் இரண்டாம் வரிசையில் ஆசனம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## சுயாதீனமாக செயற்பட...

எடுப்பதில்லை என்பதை சுட்டிக்காட்டி, நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான யோசனைகளை முன்வைக்கும் முகமாக, முழு நாடும் சரியான பாதையில் என்ற தொனிப்பொருளில் மாநாடு ஒன்றை நடத்தியிருந்தது. இம்மாநாட்டில் உரையாற்றிய, முன்னாள் அமைச்சர்களான விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்ததுடன், நிதி அமைச்சரையும் கடுமையாக விமர்சித்தனர்.

இதனைத் தொடர்ந்து கூட்டுப்பொறுப்பை மீறியதாகவும் அரசாங்கத்திலிருந்து கொண்டே அரசை விமர்சிப்பதாகக் கூறி இருவரும் அமைச்சு பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர். இதில் அதிருப்தி அடைந்த 11 பங்காளிக் கட்சிகளும் விசேட ஊடக சந்திப்பை நடத்தி, இனி அரசில் இருக்கும் வரை ஜனாதிபதியின் கீழ் அமைச்சுப் பதவிகளை வகிக்க முடியாது எனவும் தெரிவித்தனர்.

குறிப்பாக, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை அமைச்சரவைக்கு செல்ல முடியாது எனவும் தெரிவித்தார். இதனையடுத்து, இனி 11 பங்காளிக் கட்சிகளும் இணைந்தே அனைத்து முடிவுகளையும் எடுக்கும் என பதவி நீக்கப்பட்ட விமல் வீரவங்ச தெரிவித்தார்.

அதற்கமைய, கடந்த இரு நாட்களாக அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பாக தீர்க்கமாக கலந்துரையாடப்படுகின்றன. அமைச்சர்கள் இருவரும் பதவி நீக்கப்பட்டதன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிடம் பேசிய, விமல் வீரவங்ச, தங்களுக்கு ஆதரவாக இருப்பீர்களா என வினவியுள்ளார். ஆம், உங்களுடன் எப்போதும் இணைந்து செயற்படுவோம் என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன பதிலளித்துள்ளார்.

இதன் பின்னர், பதவி நீக்கப்பட்ட அமைச்சர்கள் மற்றும் 11 பங்காளிக் கட்சிகளும் சுயாதீனமாக செயற்படுவதற்கு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். அதன்படி, அரசுக்கு அதிருப்தியுள்ளவர்களையும் இணைத்துகொண்டு சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த கூட்டணியுடன் இணைந்திருக்கும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, தன்னுடைய பதவியை இராஜினாமா செய்ய முடியாது என்றும், ஆனால், பங்காளிகளின் அனைத்து செயற்பாடுகளிலும் இணைந்தே செயற்படுவதாகவும் 11 கட்சித் தலைவர் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

அதன்படி, சுயாதீனமாக செயற்பட தீர்மானித்துள்ள இக்கூட்டணி, அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் தீர்மானங்களில் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தீர்மானங்களுக்கு சுயாதீனமான எதிர்ப்பை தெரிவிப்பதற்கும் சிறந்த செயற்பாடுகளுக்கு சுயாதீனமாக ஆதரவு வழங்குவதற்கும் தீர்மானித்துள்ளது.

இதேவேளை, அரசின் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்துள்ளவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது.

## இனி மின்தடை கிடையாது...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சார உற்பத்திக்காக மின்சார சபைக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்து கைச்சாத்திட்டுள்ளதற்கு அமைய தேவையான எரிபொருளை மின்சார சபைக்கு வழங்கியுள்ளோம்.

இனியும் தட்டுப்பாடின்றி எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று, துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த எரிபொருள் கப்பலிலிருந்த எரிபொருள் தரையிறக்கப்பட்டு அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் தடையின்றி விநியோகிக்கப்படுகின்றன.

மேலும், மற்றுமொரு எரிபொருள் தாங்கிய கப்பல் இன்று (07) இலங்கைக்கு வருகைத் தரவுள்ளதால், இந்த வாரத்தில் எரிபொருள் தட்டுப்பாடு கட்டுப்பாட்டுக்குள் வரும் என்ற நம்பிக்கையுள்ளது – என்றார்.

## மனிதாபிமானமற்ற...

அதற்காக அணிதிரள வேண்டியது அவசியமாகும். நாடு முழுவதும் மக்கள் இரவும் பகலும் வரிசையில் நிற்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் பதுளையில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்த கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐக்கிய மக்கள் சக்தி பாரம்பரிய கட்சி அல்ல. பாரம்பரிய எதிர்க்கட்சியும் அல்ல. புதிய பார்வை மற்றும் புதிய சித்தாந்தம் மற்றும் புதிய வேலைத்திட்டம் மூலம் நாட்டு மக்களை பலப்படுத்தும் மக்கள் மற்றும் மக்கள் சார்பான பொது அரசியல் சக்தியாக இது மாறியுள்ளது.

நாங்கள் அரசியலுக்கு அல்ல தேச சேவைக்கே முன்னுரிமை கொடுக்கிறோம். அதனால்தான் சுதந்திரத்துக்குப் பிறகு நமது நாட்டின் ஜனநாயகப் பயணத்தில் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் ஒரே எதிர்க்கட்சியாக நாங்கள் மாறியுள்ளோம்.

இன்று அரசாங்கத்தின் ஒரே தீர்வு பணத்தை அச்சிடுவதுதான். இன்று நாட்டின் மிகப் பெரிய தொழில் பணம் அச்சிடுதல் ஆகும். இந்த நாட்டில் எந்தப் பிரச்சினையும் இல்லை என மத்திய வங்கியின் ஆளுநர் கூறுகிறார். ஆம், நாட்டை ஆள்பவர், பிரதமர், அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அரசுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. அந்தப் பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டு விட்டன. ஆனால் இன்று நாட்டில் உள்ள பிரச்சினைகள் 22 மில்லியனாக இருக்கும் சாதாரண மக்களுக்குத்தான்.

சாமானியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வோ, பதிலோ இல்லை. ஆனால் மீண்டும், நாடு 1970-1977 போன்ற கசப்பான யுகத்தில் நுழைந்துள்ளது. அப்போது இருந்த வரிசைகளை மக்கள் மறப்பதில்லை.

அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது? அமைச்சர்களின் நாற்காலிகளை மாற்றி விளையாடுகிறது அரசாங்கம். அமைச்சர்களை நீக்கிவிட்டு மேலும் அமைச்சர்களை நியமித்தால் எல்லாம் சரியாகிவிடும் என்பதை நாட்டுக்கு காட்ட முயற்சிக்கின்றனர்.

இன்று மின்சாரம் இல்லாமல் மக்கள் அவதிப்படுகின்றனர். கல்வியைத் தொடர பரீட்சைகளை எதிர்கொள்ளும் எமது பிள்ளைகள் இன்று பரீட்சைகளை மட்டுமன்றி ஏனைய சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந்த அரசாங்கம் மிகவும் மனிதாபிமானமற்ற அரசாங்கம். இந்த நிலைமையை நிலையை மாற்ற நாட்டில் மாற்றம் தேவை. இன்று எமக்குத் தேவை மக்கள் வாக்குகளில் இருந்து ஒரு மாற்றம் என்பதை அரசுதான் உணர வேண்டும். மக்கள் துயர் துடைக்கும் மாபெரும் போராட்டத்தை எதிர்வரும் 15ஆம் திகதி கொழும்பில் இருந்து ஆரம்பிப்போம் என்றார்.

## விமல், கம்மன்பிலவின்...

இதனையடுத்து, இருவருக்கும் வழங்கப்பட்டிருந்த அமைச்சர்களுக்கான பாதுகாப்பை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக, சாதாரண நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படும் இரு பாதுகாவலர்களை வைத்துவிட்டு ஏனைய பாதுகாவலர்களை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இருவருக்கும் வழங்கப்பட்டிருந்த அமைச்சர்களுக்கான பாதுகாப்பை குறைக்காது தொடர்ந்தும் வழங்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஆலோசனை வழங்கியுள்ளார்.

## மலையக மக்களுக்காகவும்...

பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டுமென வலியுறுத்தி மாத்தளை நகரில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட கையெழுத்து வேட்டையில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

மலையக மக்களுக்காக 1949ஆம் ஆண்டிலிருந்தே இலங்கை தமிழரசுக் கட்சி குரல் கொடுத்து வந்துள்ளதென்பதை இந்நாட்டு தமிழ் மொழிபேசும் மக்களும் கல்விமான்களும் புத்திஜீவிகளும் நன்கு அறிவார்கள். இந்த உண்மையை சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் மறைத்து மக்களை திசைதிருப்ப முயற்சித்தாலும் இந்த சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளை மக்கள் இன்று அடையாளம் கண்டு அவர்களை அரசியலிலிருந்து ஓரங்கட்டிட தருணம் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் 1000 ரூபா சம்பளப் பிரச்சினையை கூட நாமே சர்வதேச மயப்படுத்தினோம். எனவே மலையக மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நாம் தொடர்ந்தும் குரல் கொடுப்போம், போராடுவோம்.

மாத்தளை மாவட்டத்தில் தமிழ் மொழிபேசும் தமிழ், முஸ்லிம் மக்கள் பரவலாக இருந்தபோதும் இம்மாவட்டத்திலிருந்து தமிழ் மொழிபேசக்கூடிய ஒருவரை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்து கொள்ள முடியாதுள்ளது. துரதிர்ஷ்டவசமாக இருக்கின்றது. இந்நிலை மாத்தளை மாவட்டத்தில் மாற்றம் பெற வேண்டும். இந்நிலையை மாற்றிட முற்போக்கான சிங்கள சகோதரர்களை இணைத்து கொண்டு செயல்பட்டால் மாத்தளை மாவட்டத்தில் தமிழ் மொழிபேசக் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை தெரிவு செய்து கொள்வது கடினமான காரியமல்ல. இது சுலபமான காரியம். இந்த இலக்கை நோக்கி இன்று முதல் நாம் செயல்பட்டால் அடுத்து வரும் பொதுத்தேர்தலில் நிச்சயம் மாத்தளை மாவட்டத்திலிருந்து ஒரு தமிழ் மொழிபேசக்கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவாகலாம்.

மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதற்கு எமது கட்சி அன்று கடும் எதிர்ப்பை தெரிவித்தது. அதனாலேயே தமிழரசுக் கட்சி கூட தோற்றம் பெற்றது. எனவே மலையகப் பகுதிகளில் நாம் தேர்தல்களில் போட்டியிடாவிட்டாலும் மலையக மக்களுக்காக நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றோம். மலையக தோட்ட மக்களின் 1000 ரூபா சம்பள பிரச்சினையை அரசோடு இணைந்திருக்கும் சில அரசியல்வாதிகள் ஓரங்கட்டப்பட்ட நிலையில் அதனை சர்வதேச மயப்படுத்தியவர்களும் நாங்கள் தான்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டத்தின் போது 10 கோரிக்கைகள் விசேடமாக முன்வைக்கப்பட்டன. அதில் ஒன்று மலையக தோட்டத் தொழிலாளர்கள் 1000 ரூபா சம்பளமும் உள்வாங்கப்பட்டடுள்ளது. நாம் அன்று மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000ரூபா சம்பள உயர்வு என்று அரசை வலியுறுத்தியபோது இன்றைய நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையும் வாழ்வாதாரப் பிரச்சினையும் உச்சக்கட்டத்தை அடைந்து ஒரு தனிமனித வருமானம் சூனியமாகி செல்லக்கூடிய கட்டத்தில் இந்த 1000 ரூபா என்பதை 2000 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென நாம் அரசை வலியுறுத்திக் கொண்டிருப்பதாகவும் இரா. சாணக்கியன் மேலும் தெரிவித்தார்.

இந்த கையெழுத்து வேட்டையில் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்

**07.03.2022 திங்கட்கிழமை மாசி 23**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**நட்சத்திரம்: பரணி**
அ.கா 3.51 - 08.03.2022
அதிகாலை 5.54 வரை

**பூர்வ பட்ச ஷஷ்டி**
இரவு 10.32 - 09.03.2022
அதிகாலை 12.31 வரை

**யோகம்: மாகேந்திரம்**
அ.கா 12.01 - 08.03.2022
அதிகாலை 12.01 வரை

**முற்கரணம்: பவம்**
காலை 9.46 வரை

**திதி: பூர்வ பட்ச பஞ்சமி**
இரவு 10.32 வரை

**பிற்கரணம்: பாலவம்**
காலை 9.46 -இரவு 10.32

**சுப நேரங்கள்**
காலை 6.21 - 7.21
மாலை 4.52 - 6.22

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
காலை 7.51 - 9.21

**குளிகை காலம்**
பிற்பகல் 1.52 - 3.22

**எமகண்ட காலம்**
காலை 10.51 - பி.ப. 12.22

**துர் முகூர்த்தம்**
பிற்பகல் 12.46 - 1.34
மாலை 3.10 - 3.58

லோகநாயகி ஸஹஸ்ர சீர்ஷ வதனா அன்னை ப்ரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி

**மேஷம்:** வேலைத்தளத்தில் கடுமையான பணிகளும் உங்களால் சிறப்பாக நிறைவேற்றப்படலாம். வணிகத்தில் புதிய அறிமுகம் உருவாவதோடு இலாபங்களும் கிடைக்கலாம். வேலைகளில் வல்லுனர்களுக்கு வருவாய் அதிகரிக்கலாம். சமூக மரியாதை மேம்படும்.

**ரிஷபம்:** குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம்.வேலைத்தளங்களில் மேலதிகாரிகளின் ஆதரவு தேவைப்படலாம். மாணவர்களுக்கு கல்வியில் அதிக ஈடுபாடு தேவைப்படலாம். உணவுப் பழக்கத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் நன்மை.

**மிதுனம்:** ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட வேலைகளில் உள்ளோர் நல்ல நிலை பெறலாம். வணிகத்தில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். புதிய முதலீடுகளில் அவசரம் தவிர்ப்பது நல்லது. உங்கள் பண்புகள் பாராட்டப்படலாம்.

**கடகம்:** இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும். புதிய தொழில் அல்லது வேலை இன்று தொடங்கலாம். சில எதிர்பாரா அழைப்புகள் மற்றும் வெகுமதி கிடைக்கலாம். இன்று பணிகளில் உற்சாகம் அதிகரிக்கலாம்.

**சிம்மம்:** பணப் பிரச்சினைகள் நீங்கத் தொடங்கலாம். பிறரை விமர்சனம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. பணியில் முதலாளியின் அதிருப்தி உண்டாகலாம். புதிய தொழில்நுட்பங்களின் கற்கைகளும் ஏற்படலாம்.

**கன்னி:** வேலைத்தளத்தில் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உண்டாகலாம். உங்கள் விருப்பங்களை பிறரை ஏற்க வற்புறுத்த வேண்டாம். உடல்நலத்திலும் கவனம் தேவைப்படலாம். உங்கள் தாராள செயல்களில் பிள்ளைகள் பாதிக்கப்படாமல் இருக்க கவனம் தேவைப்படலாம்.

**சந்திராஷ்டமம்: அத்தம் நட்சத்திரத்திற்கு இரவு 11.20 வரை சித்திரை நட்சத்திரம் பாதம் 1/2க்கு இரவு 11.20 - 08.03.2022 பிற்பகல் 12.31 வரை.**

**துலாம்:** காணி/வீடு/சொத்து வர்த்தகத்தில் இலாபங்கள் அதிகரிக்கலாம். பிறரை ஈர்க்கும் ஆளுமை வெளிப்படும். வாழ்க்கைத்துணையின் ஆதரவால் பயன் கிடைக்கலாம். புதிய வணிகத் திட்டங்கள் கிடைக்கப் பெறலாம். வாழ்க்கை முறை மற்றும் வளங்கள் மேம்படும்.

**விருச்சிகம்:** நிர்வாக பணி சம்பந்தப்பட்டவர்களுக்கு மேலதிக பதவி கிடைக்கலாம். தடைப்பட்ட வேலைகள் சிறப்புற நிறைவேறும். வீட்டில் இருப்பவர்களின் தேவைகளில் கவனம் தேவைப்படலாம்.

**தனுசு:** புதிய நண்பர்கள் கிடைக்க பெறலாம். வணிகத்தில் தொழில்நுட்ப உபகரணங்களின் மேம்படுத்தல் உண்டாகலாம். வணிகத்தில் கொடுத்த விற்பனை கடன் பணம் கிடைக்க பெறலாம். ஆன்மீக செயல்களில் ஈடுபாடு அதிகரிக்கலாம்.

**மகரம்:** உணவகங்கள் சம்பந்தப்பட்ட தொழில் இலாபம் அதிகரிக்கலாம். பரம்பரை சொத்துகள் தொடர்பில் இலாபங்கள் உண்டாகலாம். பணியில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம். தம்பதியரிடையே உறவில் விட்டுகொடுப்பு நல்லது.

**கும்பம்:** வணிகத்தில் கடந்த கால அனுபவங்களால் புதிய சாதனைகள் ஏற்படலாம். சுற்றுலா தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நல்லநிலை தோன்றலாம். பிள்ளைகளின் ஆதரவு கிடைக்கலாம். இன்று இறையருளால் நல்ல நாளாக அமையலாம்.

**மீனம்:** வேலைத்தளத்தில் சாதகமற்ற சூழ்நிலை உருவாகலாம். நீண்ட காலம் இலாபங்கள் தரும் புதிய முதலீடுகளும் இன்று செய்யப்படலாம். நிதி விடயங்களில் சாதகமான நிலை உண்டாகலாம். காதலர்களுக்கிடையே சந்திப்பு உண்டாகலாம். சுப நிகழ்வுகளில் பங்களிப்பு உண்டாகலாம்.

## ஜப்பானில் தொழில்வாய்ப்புப் பெற்றுத்தருவதாக 20 இலட்சம் ரூபா நிதி மோசடி

(ஹேமந்த லியனபத்திரண)

ஜப்பானில் தொழில்வாய்ப்பு பெற்றுத் தருவதாகத் தெரிவித்து இளைஞர்கள் மற்றும் யுவதிகளிடம் 20 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் கொழும்பு மத்திய குற்ற விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனக்கு ஜப்பானில் தொழில்வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகக் குறிப்பிட்டு 5 இலட்சம் ரூபா பணம் மோசடி செய்ப்பட்டதாக சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரின் முறைப்பாட்டுக்கமைய இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மத்திய பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷாந்த சந்திரசேகரவின் ஆலோசனைக்கமைய குற்ற விசாரணைப் பிரிவின் தலைமை அதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் தம்மிக்க பெரேரா உள்ளிட்ட அதிகாரிகள் இந்த சுற்றிவளைப்பை முன்னெடுத்துள்ளனர்.

## உத்தரவாதங்களை அளிக்கும்வரை இடைநிறுத்தப்பட்ட இந்திய கடனுதவி

இலங்கைக்கு இந்தியா கொள்கையளவில் உத்தரவாதமளித்த ஒரு பில்லியன் டொலர் கடன் தொகை இலங்கை அரசாங்கம் உத்தரவாதங்களை அளிக்கும்வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கு இந்தியா கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை தனது பொருளாதார நெருக்கடியை எவ்வாறு நீண்டகால அடிப்படையிலும், குறுகிய கால அடிப்படையிலும் கையாளப்போகின்றது என்பது குறித்த திட்டமொன்றை முன்வைக்குமாறு இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் வடக்கு - கிழக்கில் இந்தியா நீண்டகாலமாக முன்னெடுக்க விரும்பும் அபிவிருத்தி திட்டங்களுக்கான தடைகளை நீக்கவேண்டும் எனவும் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை இது குறித்த உறுதிமொழியை வழங்கும்வரை இந்தியா இந்த உதவியை வழங்குவது நிச்சயமற்றதாக காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த டிசம்பரில் இந்தியாவிடமிருந்து 500 மில்லியன் டொலர் கடன் உதவியை பெற்ற நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ அத்தியாவசிய பொருட்கள் எரிபொருட்களை பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர்களை பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவிற்கு மேற்கொள்ளவிருந்த பயணம் இரண்டு தடவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

டிசம்பரில் பெற்றுக்கொண்ட கடனை இந்தமாதம் இலங்கை மீள செலுத்தவுள்ளது.

இலங்கை எதிர்கொண்டுள்ள அந்நிய செலாவணி மற்றும் கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நீண்டகால திட்டம் மற்றும் இலங்கையில் இந்தியா ஆரம்பிக்க விரும்பும் பொருளாதாரத் திட்டங்கள் குறித்த பட்டியல் ஆகியவற்றிற்கான பச்சைக்கொடியை இந்தியா அரசாங்கம் எதிர்பார்க்கின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவோ, இலங்கையோ இதுவரை இது குறித்து உத்தியோகபூர்வமாக எதனையும் தெரிவிக்கவில்லை.

இந்தியாவின் கோரிக்கைகள் திருகோணமலை துறைமுகத்தை சுற்றி இந்தியாவின் மூலோபாய நலன்களை உறுதிசெய்யும் கடல்சார் பாதுகாப்பு ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக இந்தியாவின் கோரிக்கைகள் காணப்படுகின்றன என தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கைக்கு டோனியர் கண்காணிப்பு விமானங்களை வழங்குவது மற்றும் திருகோணமலையில் இலங்கை கடற்படைக்கு கப்பல் பழுதுபார்க்கும் தளத்தை வழங்குவது ஆகிய வேண்டுகோள்களையும் இந்தியா விடுத்துள்ளது.

மேலும், குருகிராமில் உள்ள இந்திய கடற்படையின் இந்திய பெருங்கடலிற்கான தகவல் இணைப்பு மையத்திற்கு கடற்படை தொடர்பு அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

குருகிராமிலுள்ள இந்த நிலையம் வர்த்தக கப்பல்களையும் கடல்சார் பயங்கரவாதம் கடல்கொள்ளை போன்றவற்றையும் கண்காணிக்கின்றது.

இலங்கை அதிகாரி பத்து நாடுகளின் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவார்.

இந்திய அரசாங்கத்தின் முக்கிய வேண்டுகோள்களில் ஒன்றாக திருகோணமலை அதனை சுற்றியுள்ள சம்பூர் பகுதிகளில் புதுப்பிக்கதக்க எரிசக்தி (solar) திட்டத்தை தொடங்குவது காணப்படுகின்றது. இந்திய அரசாங்கத்தின் முக்கிய அழுத்தங்களில் ஒன்றாக இது காணப்படுகின்றது.

ஜப்பானுடன் இணைந்து குறிப்பிட்ட பகுதியில் நிலக்கரி சக்தி திட்டத்தை முன்னெடுக்கும் இந்தியாவின் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

தனது எதிர்கால மின்சக்தி திட்டங்களிற்கு நிலக்கரியை பயன்படுத்துவதில்லை என இலங்கை அறிவித்துள்ளதை தொடர்ந்து இந்த திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்தினை வர்த்தக நடவடிக்கைகளுக்காக திறப்பது மற்றும் யாழ். குடாநாட்டில் பல்வேறு கலாசார திட்டங்கள் போன்றவற்றை இந்தியா ஏற்கனவே அறிவித்துள்ளது.

நெடுந்தீவில் புதுப்பித்தக்க எரிசக்தி துறையில் முதலீடு செய்வதற்கு இந்தியா விரும்புகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கேள்விப்பத்திர முறை மூலம் சீன நிறுவனம் இதற்கான அனுமதியை பெற்றது எனினும் இந்தியா இந்த திட்டத்தை இரத்துச்செய்ய வைத்துள்ளது. இலங்கைக்கு இந்தியா கொள்கையளவில் உத்தரவாதமளித்த ஒரு பில்லியன் டொலர் கடன் தொகை இலங்கை அரசாங்கம் உத்தரவாதங்களை அளிக்கின்ற வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது. ஒரு பில்லியன் டொலர் கடனிற்காக இலங்கை நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்வார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாததால் அந்த விஜயம் குறித்து உத்தியோகபூர்வமாக கருத்து கூறுவதற்கு கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் மறுத்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் அவசர உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு பாரிஸ் செல்லவுள்ளதால் இலங்கை நிதியமைச்சரின் விஜயம் பிறிதொரு திகதியில் இடம்பெறும் என கடந்த வாரம் இந்திய தூதரகம் அறிவித்திருந்தது.

## 78 கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் உடைமைகளுக்கு தடைவிதிப்பு

### இவ்வாறான 1100 குற்றச்செயல்கள் தொடர்பில் தீவிர தொடர் விசாரணை

சட்டவிரோத சொத்துகள் மற்றும் உடைமைகளின் அடிப்படையில் 78 கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் மற்றும் உடைமைகள் தடைசெய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தில் வைத்து நேற்று (06) ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டவிரோதமாக சொத்துகள் மற்றும் உடைமைகளை சேகரித்த குற்றச்சாட்டில் 21 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறான குற்றச்செயல்கள் தெடர்பில் ஆயிரத்து 100 விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்படும் சந்தேகநபர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்தல், வைத்திருத்தல் ஆகிய குற்றச்செயல்கள் கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க எடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக சட்டவிரோத சொத்துகள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## பிரபல நகைச்சுவை நடிகர் பேர்ட்டி குணதிலக்க காலமானார்



முன்னணி நடிகரும், பிரபல நகைச்சுவை நடிகருமான பேர்ட்டி குணதிலக்க நேற்று (06) காலமானார்.

கண்டி, அம்பிட்டிய பிரதேசத்தில் 1924 ஆம் ஆண்டு பிறந்த இவர் காலமாகிய போது, அவரின் வயது 97 ஆகும்.

மேடை நாடகம், தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் பல்வேறு திரைப்படங்களில் நடித்துள்ள இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. இவரது நகைச்சுவை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கவர்ந்திருந்தமை விசேட அம்சமாகும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

## பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே சகல இன மக்களதும் கோரிக்கை

### சுமந்திரன் எம்.பி. நுவரெலியாவில் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என அனைத்து இன மக்களும் வலியுறுத்திவருகின்றனர். ஆதரவு தெரிவித்து கையொப்பம் இடுகின்றனர். எனவே, இச்சட்டத்தை அரசு முற்றாக நீக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நுவரெலியா நகரில் நேற்று (06) கையெழுத்து பெறும் நடவடிக்கை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

பயங்கரவாத தடைச்சட்டமானது 40 ஆண்டுகாலமாக தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டுவந்தது. இடையிடையே சிங்கள இளைஞர்கள் தண்டிக்கப்பட்டனர். தற்போது முஸ்லிம் மக்களுக்கு எதிராக மிக மோசமாக இச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது. நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், அதற்கு எதிராக போராடுபவர்களை ஒடுக்குவதற்கும் இந்தச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு அரசு தயாராகிவருகின்றது.

பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடாகும். இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் இதனையே வலியுறுத்துகின்றனர். எனவே, இது மக்கள் கோரிக்கையாகும். அதனை அரசு நிறைவேற்ற வேண்டும். நுவரெலியா மாவட்டத்தில் இதற்கு பெரும் ஆதரவு கிடைத்துள்ளது என்றார்.




வேலைதேடி கொழும்புக்கு சென்ற மலையக இளைஞர்கள், வடக்கு, கிழக்கு மக்களுடன் நட்பை பேணியவர்களுக்கு எதிராகவும் அச்சட்டம் பயன்படுத்தப்பட்டது. இதனால் பலரின் வாழ்க்கை சூனியமாகியுள்ளது. எனவே, இப்படியான - சாபக்கேடான சட்டம் நாட்டுக்கு தேவையில்லை. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைகூட இதனையே வலியுறுத்தியுள்ளது. எனவே, பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும. நாட்டுக்கு சாபக்கேடாக அமைந்துள்ள பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என எம்.உதயகுமார் எம்.பி. குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

பயங்கரவாத தடைச்சட்டத்தால் வடக்கு, கிழக்கு மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எமது மலையக இளைஞர்களுக்கு எதிராகவும் அச்சட்டம் பயன்படுத்தப்பட்டது. வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டவர்கள் கூட இன்னும் வழக்கு தொடுக்கப்படாமல் பல வருடங்களாகியும் சிறைகளில் வாடுகின்றனர்.

இதேவேளை, தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட வேண்டிய காலம் வந்துள்ளது. அந்தவகையில் பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு எதிராக தற்போது ஓரணியில் திரண்டுள்ளோம். மக்களும் ஒன்றுபட்டுள்ளனர். எனவே, சிறந்த எதிர்காலத்துக்கான ஆரம்பப் புள்ளியாகக்கூட இது அமையலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

## இன்றும் மின்துண்டிப்பு!

நாட்டில் இன்று (07) காலை 8.00 மணிமுதல் இரவு 11.00 மணி வரையான காலப்பகுதியில் இரண்டு வலயங்களில் ஏழரை மணிநேர மின்துண்டிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய E மற்றும் F ஆகிய வலயங்களில், காலை வேளைகளில் 5 மணி நேரம் மற்றும் பிற்பகல் வேளைகளில் இரண்டரை மணிநேர மிண்துண்டிப்பு மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களில் இன்று காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணி வரையான காலப்பகுதியில் மூன்று மணிநேர மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படுமென ஆணைக்குழு மேலும் அறிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட எட்டு வலயங்களில் காலையில் இரண்டு மணிநேரமும், மாலையில் ஒரு மணிநேரமும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படும்.

## கேரள மாநில மூத்த அரசியல்வாதி ஹைதரின் மறைவு ஈடுசெய்ய முடியாதது

### ரவூப் ஹக்கீம் எம்.பி. அனுதாபம்

நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) வழித்தோன்றல் கேரள மூத்த அரசியல் தலைமை கண்ணியத்துக்குரிய ஹைதர் அலி ஷிஹாப் இவ்வுலகை விட்டு மறைந்த செய்தி ஆழ்ந்த கவலையளிக்கிறது. மலையாள மண்ணைப் பொறுத்தவரை முஸ்லிம்களும், ஏனையோரும் மதித்துப் போற்றும் ஒருவராக அன்னார் வாழ்ந்து மறைந்திருக்கிறார். அவரது இழப்பு ஈடு செய்ய முடியாதது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் .

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தாய் சபை அரசியல் ஆலோசனைக்குழு தலைமைப் பதவி வகித்த ஹைதர் அலி ஷிஹாப் அவர்கள் கட்சியின் கேரள மாநிலத் தலைவராகவும் பங்களிப்புச் செய்து அதன் வளர்ச்சியில் கரிசனையுடன் செயலாற்றியிருக்கிறார். இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசியத் தலைவர் மதிப்புக்குரிய கே.எம்.காதர் மொகிதீன் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் அவர் உறுப்பினர்களை சிறப்பாக அரவணைத்துச் சென்றுள்ளார் என அறிகின்றோம்.

அன்னாரின் இளைய சகோதரர் சாதிக் அலி தங்கள் ஏனைய தமிழக மற்றும் கேரள அரசியல் பிரமுகர்களுடன் இலங்கை வந்து எனது கனிஷ்ட புதல்வியின் திருமண நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார். எல்லாம் வல்ல அல்லாஹ் மறைந்த ஹைதர் அலி ஷிஹாப் அவர்களுக்கு மேலான ஜன்னத்துல் பிர்தவ்ஸுல் அஃலா என்ற சுவன பாக்கியத்தை அருள்வானாக. அத்துடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு மன ஆறுதலையும் அளிப்பானாக என்று தெரிவித்துள்ளார்.

**வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்**

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | தயாரிப்பு வகை | |
|---|---|---|---|
| WP CAP - 3XXX | MCA11071G09028177 | CAR | FIAT LINEA |
| WP CAF - 6XXX | MAT612280FKA02575 | CAR | TATA NANO TWIST |
| SG LA - 8XXX | DA52T258743 | LORRY | SUZUKI GD DA52T |

- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2022 மார்ச் 08, 09ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரை. மார்ச் 10ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டென்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 2022 மார்ச் 10ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டென்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டென்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, இல :140, அதுருகிரிய வீதி, ஹோமாகம.
- டென்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள மற்றும் டென்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, இல :140, அதுருகிரிய வீதி, ஹோமாகம.

டென்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டென்டர் பத்திர கடித உறையின் முன்பக்க இடது புற மேல் மூலையில் "வாகன விற்பனை" என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டென்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.

கடன் அறவீட்டு அதிகாரி,
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**
இல. 165, கின்சி வீதி கொழும்பு 08
தொலைபேசி இல. : 0112 000 000
COMMERCIAL CREDIT

ரஷ்யாவின் சோஷலிச சாயல் பொருளாதாரத்திலிருந்து ஐரோப்பிய வகை பொருளாதாரத்திற்கு மாற நினைத்த உக்ரைன் நாட்டிற்குள் புகுந்து, ரஷ்ய படைகள் பல நாட்களாகத் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இரண்டு உலகப்போர்களைப் பார்த்துவிட்ட பின்பும், நாடுகளுக்கு இன்னும் போரின் தாகம் தீரவில்லை. இதனால் அப்பாவி மக்கள் மற்றும் நடுத்தர மக்களின் வாழ்வாதாரம்தான் உலகமெங்கும் பாதிக்கப்படுகிறது.

கொவிட் ஏற்படுத்திய உயிர்ப்பலி, பொருளாதார இழப்பிலிருந்து உலகம் விடுபடுவதற்கு முன்பே ரஷ்யா போரைத் தொடங்கிவிட்டதால், ஐரோப்பிய நாடுகளில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தொழில்கள், வேலைவாய்ப்பு, பொருளாதாரம், போர் என்று பலவாறு மேற்கு உலகத்தைப் பீதி சூழ்ந்துள்ளது.

மாபெரும் சாம்ராஜ்யமாக, பூமியின் பெரும்பரப்பில் பரந்து விரிந்து கிடந்த சோவியத் யூனியன் 1991 ஆம் ஆண்டில் சிதறியபோது, அதிலிருந்து விடுதலையானதுதான் உக்ரைன். ரஷ்ய எல்லையிலிருக்கும் உக்ரைன், நேட்டோ அமைப்பில் சேர்ந்து, இராணுவ பலத்தை பெருக்கிக்கொண்டால், அது தமக்கு ஆபத்தாக அமையும் என்று நினைத்து, உக்ரைன் மீது உக்கிரமாக ரஷ்யா போரைத் தொடங்கியது. உலக நாடுகள் எதிர்ப்பையும் மீறி உக்ரைன் மீது தாக்குதல் நடத்தும் ரஷ்யா மீது அமெரிக்கா உட்பட பல நாடுகளும், சர்வதேச அளவில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள கூகுள், ஆப்பிள் போன்ற பெருவணிக நிறுவனங்களும், விளையாட்டு அமைப்புகளும், வங்கி கூட்டமைப்புகளும், பல பொருளாதார, வர்த்தகத் தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி உட்பட வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பில் (நேட்டோ) உள்ள 30 நாடுகள் உக்ரைன் மீதான தாக்குதலைக் கண்டித்து, ரஷ்யாவுடனான வர்த்தக உறவைக் குறைத்துள்ளன. பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. சில சேவைகள், வர்த்தகத்துக்குத் தடைவிதித்துள்ளன. இதனால், உலகம் முழுவதும் பொருட்கள் விநியோக சங்கிலியில் பாதிப்பேற்படும். பொருட்கள் போக்குவரத்திலும் இடையூறுகள் இருக்கும். இவை சாதாரண விடயங்களல்ல.

ரஷ்யா, எண்ணெய் வளம் மற்றும் தங்கத்திதன் இருப்பில் வலிமை பெற்ற நாடு. உலக நாடுகளின் மசகு எண்ணெய் தேவையில் 11 சதவீதம் ரஷ்யாவிலிருந்து செல்கிறது. தினசரி 5 மில்லியன் பீப்பாய்கள் ரஷ்யாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளுக்கு தேவைப்படும் மொத்த மசகு எண்ணெயில் 40 சதவீதம், இயற்கை எரிவாயுவில் 35 சதவீதம் ஆகியவற்றை ரஷ்யாவே வழங்குகிறது.

உக்ரைன், பொறியியல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் தொழில், தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றில் முன்னணியிலுள்ள நாடாகும். போரினால், உக்ரைன் தொழிலமைப்புகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு தாராளமாக விளையும் சூரியகாந்தியிலிருந்து கிடைக்கும் விதைகள் மற்றும்

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மார்ச் 07ஆம் திகதி, திங்கட்கிழமை

# மூன்றாம் உலகப்போர் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

அதில் பெறப்படும் சூரியகாந்தி எண்ணெய் போன்றவை உலக நாடுகளை ஈர்த்துள்ளன. உணவு தானியங்களின் களஞ்சியமாகத் திகழும் உக்ரைன், சோளம் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முதல் 5 இடங்களுக்குள் உள்ளது. அதேபோல், கோதுமை ஏற்றுமதியில், உலகின் முன்னணி நாடுகளாக, ரஷ்யாவும், உக்ரைனும் திகழ்கின்றன. உலகின் கோதுமை தேவையில் 30 சதவீதத்தை இந்த இரு நாடுகளும் பூர்த்தி செய்கின்றன.

"இந்தப்போரினால் உயிர்ச்சேதம் ஏற்படுவது மட்டுமில்லாது, உலகின் பொருளாதாரமும் வெகுவாக பாதிக்கப்படும்" என்கிறார் உலக வங்கியின் தலைவர் டேவிட் மால்பாஸ். போர் தொடங்கியதும், கடந்த 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு, மசகு எண்ணெய் விலை, பீப்பாய் ஒன்று 100 டொலருக்கும் மேல் அதிகரித்துள்ளது. இதனால் எல்லா நாடுகளிலும் பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகள் கடுமையாக உயர வாய்ப்புள்ளது. மசகு எண்ணெய் விலை 125 டொலர் வரை உயருமென அஞ்சப்படுகிறது. இதனால், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து உற்பத்தியையும், நுகர்வையும் பாதிக்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

ரஷ்ய - உக்ரைன் போரில் மற்ற நாடுகள் பங்கேற்காததாலும், உலகப்போராக மாறாததாலும், இப்போது உலக பங்குச்சந்தைகளின் பதற்றம் கொஞ்சம் தணிந்துள்ளது. போர் முடிவுற்றாலும், விளைவுகள் சில காலத்திற்கு நீடிக்கும். உலக நாடுகளின் பாதுகாப்பிற்கான பட்ஜெட் ஒதுக்கீடு அதிகரிக்கும். "தென்னை மரத்தில், தேள் கொட்டினால், பனை மரத்தில் நெறி கட்டும்" என்பது போன்று அடி வாங்கியது உக்ரைன் என்றாலும், அதன் பொருளாதார வலியை உலக நாடுகளும் உணர வேண்டிய நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன என்பதே உண்மை.

ரஷ்ய பொருளாதாரம், மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் உலகில் ஒன்பதாவது இடத்தைப் பெற்றுள்ளது. வாங்கும் சக்தி அடிப்படையில் உலகில் ஆறாவது பெரியது. இராணுவத்துக்கான செலவு அளவில் பார்த்தால், உலகில் மூன்றாவது பெரியது. பேரழிவு ஏற்படுத்தும் அணு ஆயுதங்கள் உள்பட நவீன ஆயுதங்கள் ரஷ்யாவிடம் உள்ளன. உலக அணு ஆயுத கையிருப்பில் 50 வீதம் ரஷ்யாவிடமுள்ளது. உலக நாடுகள் பலவும் ரஷ்யாவிடம், பீரங்கிகள், ஏவுகணை தடுப்பு கருவிகள் உட்பட நவீன ஆயுதங்களை வாங்கிக் குவிக்கின்றன. சோவியத் யூனியனாக, உக்ரைன் உட்பட பல நாடுகள் இணைந்த ரஷ்ய பேரரசு, உலகின் இரண்டு வல்லரசுகளில் ஒன்றாக இருந்தது. அதுபோன்ற வலிமையான இராணுவம், பொருளாதாரம் இரண்டையும் மீட்பதற்காக ரஷ்யா நடத்தும் போராக இதை உலகம் கவனிக்கிறது.

ரஷ்யாவுடன் ஒப்பிடும்போது, அப்பிராந்தியத்தில், ரஷ்யாவுக்கு அருகிலுள்ள பெரிய நிலப்பரப்புள்ள உக்ரைன், உலகின் மிகப்பெரிய தானிய ஏற்றுமதி நாடு என்று சொல்லலாம். மனித வளர்ச்சி குறியீட்டில் 74ஆவது இடத்தில் உள்ளது. உக்ரைனின் கறுப்புநிற மண் வளம், பயிர்கள் செழிக்க உதவுகிறது. பல்வேறு உலக நாடுகளுக்கும் சமையல் எண்ணெய் மூலப்பொருளான சூரியகாந்தி விதை உக்ரைனிலிருந்தே ஏற்றுமதியாகிறது.

அண்டை நாடான கிரீமியாவை ரஷ்யா தன்வசப்படுத்தியது போன்ற நிலைமை தனக்கும் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே, நேட்டோ நாடுகளுடன் நட்பு கொள்ள நினைக்கிறது உக்ரைன். ரஷ்யாவிடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அணு ஆயுதம் உட்பட இராணுவ பலத்தைப் பெருக்க நினைக்கிறது. இதுவே உக்ரைன் மீதான ரஷ்யப் போருக்கு அடிப்படை காரணம்.

ஆனால், இப்போது போர் ஆரம்பித்து ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க உலக நாடுகள் நடவடிக்கை எடுத்துவரும் பின்னணியில், ரஷ்யாவை உலகிலிருந்து தனிமைப்படுத்தலாமென கருதி செயற்பாடுகளை முன்னெடுக்கும் பின்னணியில் அடுத்து வரும் நாட்களில் புட்டின் அதிரடி நடவடிக்கைகளை எடுக்கக் கூடும். இந்நிலையில், அணு ஆயுதம் பயன்படுத்தப்படும் மூன்றாம் உலகப்போர் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# உக்ரைனை ரஷ்யா தாக்குவதன் உள்நோக்கம் என்ன?



## அலசல் ரிப்போர்ட்!

ஆப்கன் சண்டை நடந்து முடிந்து அதன் சுவடுகள்கூட மறையாத நிலையில், இந்தப் பூமி மற்றுமொரு பெரும் போரைச் சந்தித்திருக்கிறது. கடந்த சில மாதங்களாக ரஷ்யா - உக்ரைன் இடையே போர்ப் பதற்றம் நிலவி வந்த சூழ்நிலையில், தன்னைவிட சிறிய, வலிமை குறைந்த நாடான உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தாக்குதல் நடத்தி வருகிறது.

உக்ரைன் மீது போர் தொடுக்க கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ரஷ்ய ஜனாதிபதி புட்டின் உத்தரவிட்டார். தயாராக இருந்த ரஷ்யப் படைகள் முதலில் எல்லையைத் தாக்கும் என்று கணிக்கப்பட்ட நிலையில் நேரடியாக தலைநகர் கீவ்வை நோக்கிப் படையெடுத்தன. இரண்டாவது நாளே கீவ் நகரை நெருங்கிய ரஷ்யப் படைகள் அங்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தின.

ரஷ்யப் படைகள் எளிதாக கீவ் பகுதிக்குள் நுழைய முடியாது என்று எண்ணியிருந்த போதுதான் பெலாரஸ் ரஷ்யாவிற்கு உதவியுள்ளது.

வரைபடத்தில் ரஷ்ய எல்லைக்கு அருகிலிருப்பது கார்கீவ் நகரம்தான். கீவ் உக்ரைனின் மத்தியில் அமைந்துள்ளது. ஆனால், பெலாரஸ் வழியாக கீவை எளிதில் அடைய முடியும். அவ்வாறே ரஷ்யப் படைகள் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது. உக்ரைன் மீதான 6 ஆம் நாள் தாக்குதலில் ரஷ்யப் படைகளுக்கு ஆதரவாக பெலாரஸ் படைகளும் களமிறங்கியதே இதற்குச் சான்று.




பெலாரஸ் மட்டுமின்றி ஏற்கெனவே தனிக் குடியரசாக அறிவிக்கப்பட்ட உக்ரைனின் டொடன்ஸ்க், லுஹான்ஸ்க் உதவியுடனும்தான் ரஷ்யா உக்ரைனுக்குள் உள்நுழைந்துள்ளது.

ரஷ்யப்படை, தலைநகர் கீவ்வைத் தொடர்ந்து உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கீவ் பகுதிக்குள்ளும் நுழைந்தது. பெரும் பரப்பைக் கொண்ட கெர்சன் நகருக்குள்ளும் ஆக்ரோஷமான தாக்குதலை மேற்கொண்டு வருகிறது ரஷ்யா. கெர்சன் பகுதியில்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலைகள், துறைமுகங்கள் எனப்பல முக்கிய பகுதிகள் உள்ளன. ஒடேசா துறைமுகத்தைக் கைப்பற்றும் முனைப்பில் ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. ஒரு வாரத்திற்குள்ளாக முக்கிய நகரங்களை ரஷ்யா கைப்பற்றியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் போரில் இரு தரப்பிலும் உயிரிழப்புகள் அதிகம் நிகழ்ந்துகொண்டு இருக்கின்றன.

### உக்ரைன் நாடு

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உக்ரைன் நாடு, போலந்தின் ஒரு பகுதியாகவும், ரஷ்யாவின் ஒரு பகுதியாகவும் இருந்தது. பின்னர் 1917இல் ரஷ்யப் புரட்சியை அடுத்து, 1922இல் உருவானதே சோவியத் யூனியன். இதன் 15 நாடுகளில் உக்ரைனும் ஒன்று. ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் வாய்ந்த நாடாக உக்ரைன் இருந்தது. ஏனெனில், உக்ரைன் இயற்கை வளங்கள் நிறைந்த பகுதி. சோவியத் யூனியனிலிருந்த முக்கிய புள்ளிகள் பலரும் உக்ரைன் நாட்டைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர்.

இவையனைத்துக்கும் மேலாக அணு ஆயுதத் தயாரிப்பில் உக்ரைன் முக்கிய பங்கு வகித்தது. ரஷ்யாவின் மூன்றில் ஒரு பகுதி அணு ஆயுதத் தயாரிப்புக் கிடங்கு உக்ரைனின் கட்டுப்பாட்டில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனாலேயே சோவியத் யூனியனில் உக்ரைனுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது.

இப்போதும் உக்ரைனிலிருக்கும் செர்னோபில் அணு உலைதான் உக்ரைனின் முக்கியமான சொத்து எனலாம். அதனையும் தற்போது ரஷ்யா கைப்பற்றியுள்ளது.







பனிப்போருக்குப் பின்னர் 1991இல் சோவியத் யூனியன் உடைந்தபோது, ஆர்மீனியா, அஸர்பைஜான், பெலாரஸ், எஸ்தோனியா, ஜோர்ஜியா, கசகஸ்தான், கிர்கிஸ்தான், லட்வியா, லித்துவேனியா, மால்டோவா, ரஷ்யா, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உக்ரைன் மற்றும் உஸ்பெகிஸ்தான் என அதிலிருந்த 15 நாடுகள் தனித்தனியாகப் பிரிந்தன. இதில் பெரும்பாலான நாடுகள் தங்களை சுதந்திர நாடுகளாக அறிவித்துக் கொண்டன.

அப்போது உக்ரைனும் தன்னை சுதந்திர நாடாக அறிவித்துக்கொண்டது. இப்போதும் ஐரோப்பாவில் பரப்பளவில் ரஷ்யாவுக்கு அடுத்த இரண்டாவது பெரிய நாடாக உக்ரைன் இருக்கிறது.

அதுபோன்று, 1991இல் அமெரிக்கா, ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக அணு ஆயுதங்கள் அதிகம் கொண்ட நாடாகவும் உக்ரைன் இருந்துள்ளது. அதாவது, சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த நேரத்தில், உக்ரைன் அணு ஆயுதங்களை வைத்திருக்கும் நாடாக இருந்தது. அந்த நேரத்தில் அணு ஆயுதங்களைக் கைவிட அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் பிற நாடுகளை வலியுறுத்தி வந்த நிலையில், உக்ரைனிடமும் அதுகுறித்துப் பேசப்பட்டது.

1994இல் ஹங்கேரியின் தலைநகர் புடபெஸ்ட்டில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படியும், ஆயுத பரவல் தடைச் சட்டத்தின்படியும், அணு ஆயுதக் கிடங்கை அகற்றவும், அணு ஆயுதங்களை ரஷ்யாவிடம் ஒப்படைக்கவும் உக்ரைன் ஒப்புக்கொண்டது. மாறாக, அணு ஆயுதங்களை அகற்றுவதன் மூலம் ஏற்படும் இழப்பை ரஷ்யா - அமெரிக்கா சரிசெய்யவும், உக்ரைனுக்கு பாதுகாப்பு வழங்கவும் அதில் ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது. அதன்படியே உக்ரைன் 1996இல் அணு ஆயுதங்களை ரஷ்யாவிடம் ஒப்படைத்தது.

அன்று அணு ஆயுதங்களை உக்ரைன், ரஷ்யாவிடம் கொடுத்திருக்கவிட்டால் தற்போது ரஷ்யா, உக்ரைன் மீது போர் தொடுக்க யோசித்திருக்கலாம்.

### நேட்டோ


2ஆம் உலகப் போருக்குப் பின் சோவியத் யூனியனின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள நேட்டோ (NATO- North Atlantic Treaty Organisation) அமைப்பு உருவாக்கப்பட்டது. இதற்கு எதிராக சோவியத் யூனியன், வார்சா ஒப்பந்தம் மூலமாக தனது இராணுவக் கூட்டணியை உருவாக்கியது.

பின்னர், சோவியத் யூனியன் கலைக்கப்பட்டபோது, வார்சா ஒப்பந்தமும் கைவிடப்பட்டது. மாறாக, சோவியத் யூனியனிலிருந்த லட்வியா, லித்துவேனியா, எஸ்தோனியா ஆகிய 3 நாடுகள் மட்டும் நேட்டோவில் இணைந்தன. மேலும், சோவியத் யூனியன் இராணுவக் கூட்டணியில் இருந்த போலந்து, ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகளும் தற்போது நேட்டோவில் உள்ளன.

1949இல் நேட்டோ ஆரம்பிக்கப்பட்ட போது அதில் அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட 12 நாடுகள் இருந்தன. தற்போது 30 நாடுகள் இதன் உறுப்பினர்களாக உள்ளன. இவற்றில் ஏதேனும் ஒரு நாடு தாக்குதலுக்குள்ளாகும் பட்சத்தில் பிற நேட்டோ நாடுகள், தங்கள் ஆதரவை வழங்குகின்றன. சிறிய நாடுகளின் பாதுகாப்பை உறுதி செய்வது என்ற கோணத்தில் உருவாக்கப்பட்டதுதான் நேட்டோ. ஆனால், ரஷ்யா உள்ளிட்ட பெரிய நாடுகளின் அச்சுறுத்தலிலிருந்து தப்பிக்க அமெரிக்கா மேற்கொண்ட ஓர் எளிய வழி இது. பெல்ஜியம் ப்ரூசல்ஸில் நேட்டோவின் தலைமையகம் உள்ளது. இப்போது, நேட்டோவுடன் இணைய உக்ரைன் விருப்பம் தெரிவித்து அதற்கான முயற்சி செய்து வந்த நிலையில்தான் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த ரஷ்யா, உக்ரைன் மீது போர் நடத்தி வருகிறது.

15ஆம் பக்கம் பார்க்க....

## தவக்கால சிந்தனை



### உன் சகோதரரை உன் உள்ளத்தில் பகைக்காதே

உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவர். களவு செய்யாமலும், பொய் சொல்லாமலும், ஒருவரையொருவர் வஞ்சியாமலும், என் பெயரால் பொய்யாணையிட்டு, உங்கள் கடவுளின் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தாமலும் இரு. நான் ஆண்டவர்.

அடுத்திருப்பவரை ஒடுக்கவோ அவருக்குரியதைக் கொள்ளையிடவோ வேண்டாம். வேலையாளின் கூலி விடியும்வரை உன்னிடம் இருத்தல் ஆகாது. காது கேளாதோரைச் சபிக்காதே. பார்வையற்றோரை இடறச் செய்யாதே. உன் கடவுளுக்கு அஞ்சி நட. நான் ஆண்டவர்.

தீர்ப்பிடுகையில், அநீதியிழைக்காதே. சிறியோர் பெரியோர் என முகம் பாராது, உனக்கு அடுத்து வாழ்வோர்க்கு நேர்மையுடன் நீதி வழங்கு. உன் இனத்தாருக்குள் புறங்கூறித் திரியாதே. உனக்கு அடுத்து வாழ்பவரின் குருதிப் பழிக்குக் காரணமாகாதே. நான் ஆண்டவர்.

உன் சகோதரரை உன் உள்ளத்தில் பகைக்காதே. உனக்கு அடுத்தவர் பாவம் செய்யாதபடி அவரைக் கடிந்துகொள். பழிக்குப் பழியென உன் இனத்தார்மேல் காழ்ப்புக் கொள்ளாதே. உன் மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக.

## இன்றைய நாளில்...

- 1876 – அலெக்சாண்டர் கிரகம் பெல் தொலைபேசிக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1986 – சேலஞ்சர் விண்கல விபத்து: பிரிசர்வர் கப்பலின் சுழியோடிகள் சேலஞ்சர் விண்கலத்தின் பயணியர் அறையைக் கண்டுபிடித்தனர்.
- 1996 – பாலஸ்தீனத்தில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்



# இ.போ.ச. பஸ்கள் - புகையிரதங்களுக்கு தடையின்றி எரிபொருள் விநியோகம்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணக்கம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் திலும் தெரிவிப்பு



(த.அசோக் குமார்)

இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் மற்றும் புகையிரதங்களுக்கு தட்டுப்பாடு இன்றி எரிபொருளை வழங்குவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இணங்கியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதன்படி, நாட்டு மக்களின் வழமையான செயற்பாடுகள் மற்றும் பொதுப் போக்குவரத்து சேவையை எவ்வித இடையூறும் இன்றி பேண முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் கண்டியில் இருந்து எல்ல வரையிலான சொகுசு புகையிரத சேவையை நேற்று முன்தினம் (05) ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தற்காலிகமாக ஏற்பட்டுள்ள டீசல் வரிசை மற்றும் எரிபொருள் நெரிசலைக் குறைக்கும் நோக்கில், வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரம் பெற்ற தனியார் பஸ்களுக்கு எரிபொருள் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மாகாண பயணிகள் பஸ்களுக்கு அதிகபட்சமாக 100 லீற்றர் எரிபொருளும், மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பஸ்களுக்கு அதிகபட்ச கொள்ளளவு 150 லீற்றர் டீசலும் இலங்கை போக்குவரத்து சபை டிப்போவினால் வழங்கப்படும்.

சுற்றுலா சபையின் விசேட ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட சுற்றுலா பஸ்களும் அருகிலுள்ள டிப்போவில் எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இப்புதிய வேலைத்திட்டம் ஏற்கனவே 45 டிப்போக்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் அனைத்து டிப்போக்களுக்கும் இதனை விஸ்தரிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தத்துவம் தங்கராசு



நாட்டின் பல இடங்களில் பலருக்கு சுயதொழில் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. எப்படியென்று பார்க்கிறீர்களா?

எரிபொருள் வரிசைகளில் நிற்போருக்கு தேவைப்படும் உணவு விநியோகத்தை செய்யும் தொழிலே பல இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அநேகமானோர் இரண்டு மூன்று நாட்கள் வரிசைகளில் நிற்பதால் அவர்களுக்கு மூன்று வேளைகளுக்கு தேவையான நீர், தேநீர், உணவு தேவை. அதை வழங்கவே பலர் சிறுவியாபாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

எல்லோரும் அரசாங்கத்தை திட்டித் தீர்க்க இடையில் ஒரு க்ரூப் மூளையை பாவித்து, அதாவது காற்றுள்ளபோது தூற்றிக்கொண்டது பார்த்தீர்களா?

சரி.. இதென்ன.... இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும். இனி அவர்களால் என்ன செய்யமுடியும் என்று நினைக்காதீர்கள். சமையல் எரிவாயுவுக்கு மீண்டும் வரிசையில் நிற்கவேண்டிவரும்போல் தெரிகிறதே...

# மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட அவரின் குடும்பத்தார் மீது பொலிஸார் தாக்குதல்

(யாழ். நிருபர்)

மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரையும் அவருடைய சகோதரி ஒருவரையும் பொலிஸார் தாக்கியதில் காயமடைந்த நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேச சபை உறுப்பினரின் தாய், தந்தை மற்றுமொரு சகோதரி ஆகியோரை கைது செய்த பொலிஸார் மல்லாகம் நீதவான் முன்னிலையில் முற்படுத்தியதை அடுத்து நீதவானை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

**உறுப்பினர் வீட்டின் மீது தாக்குதல்**

மானிப்பாய் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான பண்டத்தரிப்பை சேர்ந்த அ.ஜோன் ஜிப்பிரிக்கோவின் வீட்டினுள் கடந்த வியாழக்கிழமை இரவு மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தவேளை மதுபோதையில் நுழைந்த நபர் ஒருவர், ஆளும் கட்சியை சேர்ந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரை கூறி, அவரின் ஆதரவாளர் தான் என கூறி அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளார்.

அதன் போது, பிரதேச சபை உறுப்பினரின் தந்தையார் அதனை தடுக்க முற்பட்டவேளை அவரை தள்ளி விட்டு பின்னர் வீட்டின் கேற்றை சேதப்படுத்தியதுடன், வேலி தகரங்களையும் சேதப்படுத்திய பின்னர் அங்கிருந்து சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பிரதேச சபை உறுப்பினரால் அன்றைய தினமே இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

**பரஸ்பர முறைப்பாடு**

இந்நிலையில் பிரதேச சபை உறுப்பினரின் வீட்டின் மீதும் தந்தையார் மீதும் தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட நபர், தன்னை பிரதேச சபை உறுப்பினரின் குடும்பத்தினர் தாக்கியதாக இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட நபரின் முறைப்பாட்டின் பிரகாரம், பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட அவரது குடும்பத்தினரை பொலிஸார் விசாரணைக்கு அழைத்து தாக்கியதில் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அவரது சகோதரி ஒருவர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, தாம் முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து, பிரதேச சபை உறுப்பினரின் குடும்பத்தினரை வாக்கு மூலம் பெறுவதற்காகவே அழைத்ததாக பொலிஸ் தரப்பினர் தெரிவித்தனர்.

**பிரதேச சபை உறுப்பினரின் குடும்பம் பிணையில் விடுவிப்பு**

பிரதேச சபை உறுப்பினரின் குடும்பத்தினரின் வாக்குமூலத்தை பெற்றுக்கொண்ட பின்னர், பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் முற்படுத்தினர். வழக்கினை விசாரணை செய்த நீதவான் பிரதேச சபை உறுப்பினரின் குடும்பத்தினர் மூவரையும் தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்தார்.

**மனிதவுரிமை ஆணைக்குழு விசாரணை**

இதேவேளை, பிரதேச சபை உறுப்பினர் மற்றும் குடும்பத்தினர் மீது இளவாலை பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டார்கள் என மனிதவுரிமை ஆணைக்குழுவின் வடபிராந்திய இணைப்பாளர் த. கனகராஜிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை இணைப்பாளர் ஆரம்பித்துள்ளார்.

அத்துடன் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அவரது குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸ் நிலையத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் நேரில் சென்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் சம்பவம் தொடர்பில் கேட்டறிந்து கொண்டுள்ளனர்.

**பொலிஸ் உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பம்**

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வரும் நிலையில், பொலிஸ் நிலையத்தில் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் அவரது குடும்பத்தினர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் உயர் மட்ட விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

# கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு - டிப்ளோமா கற்கைநெறிகளின் தலைவராக அப்துல் அஸீஸ் நியமனம்



(அஷ்ரப் ஏ சமத்)

பேராசிரியர் ஏ.அப்துல் அஸீஸ் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு மற்றும் டிப்ளோமா கற்கைநெறிகளின் தலைவராக கடந்த வாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் பேராசிரியர் ஏ.அப்துல் அஸீஸ் நேற்று முன்தினம் தமது கடமைகளை கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஏற்றுக்கொண்டார்.

பேராசிரியர் அசீஸ் சாய்ந்தமருதை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் கல்முனை சாஹிரா கல்லூரியின் பழைய மாணவராவார். 1991 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வணிகம் நிர்வாகம் நிதி பாடங்களுக்கான விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். தொழில் வழிகாட்டி, பட்டப்படிப்பு டிப்ளோமா பட்டப்படிப்பின் கற்கை நெறிகளின் இணைப்பாளராகவும் கலாநிதி ஆராய்ச்சிகளை கற்கும் பட்டதாரிகளுக்கு இணைப்பாளராகவும் கடமையாற்றினார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் பி.கொம். அதன் பின்னர் எம்.பி.ஏ பட்டங்களை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பெற்று அப் பல்கலைக்கழகத்திலேயே கடந்த 30 வருட காலமாக சேவையாற்றி விரிவுரையாளர், சிரேஷ்ட விரிவுரையாளர், பாட இணைப்பாளர் போன்ற பல்வேறு துறைகளில் சேவையாற்றி வருகின்றார்.

2008ஆம் ஆண்டு ஜப்பான் ஜேக்காமா தேசிய பல்கலைக்கழகத்தில் நிதித்துறையில் தனது கலாநிதிப் பட்டத்தினை கற்பதற்காக புலமைப்பரிசினைப் பெற்றுக் கொண்டார். வசுடா ஜப்பான் பல்கலைக்கழகத்தில் தமது நிதி சம்பந்தமான கலாநிதி ஆராய்ச்சி கற்கையையும் வெற்றிகரமாகப் பூரணப்படுத்தினார்.

# பஸ் - மோட்டார் சைக்கிள் மோதியதால் தந்தையும் மகனும் பரிதாபமாக பலி

## வவுனியாவில் நேற்று பதற்றம்

(வுனியா நிருபர்)

வவுனியா, குருக்கள் புதுக்குளம் பகுதியில் நேற்று (06) இடம்பெற்ற விபத்தில் தந்தை மற்றும் மகன் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து கிராமமக்கள் ஒன்று திரண்டமையினால் குறித்த பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா குருக்கள் புதுக்குளம் பகுதியில் மன்னார் பறயநாலங்குளம் பிரதான வீதியில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மன்னாரிலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார் பஸ் குருக்கள் புதுக்குளம் பகுதியில் சென்றுகொண் டிருந்த போது உள்ளவீதியில் இருந்து பிரதான வீதிக்கு வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதிய தில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற தந்தை சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி பலியாகியதுடன், அவரது மகன் படுகாயமடைந்தநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ் விபத்தினால் ஆத்திரமடைந்த கிராம மக்கள் பஸ்ஸினை தாக்கியமையால் குறித்த



பகுதியில் பதற்றநிலை ஏற்ப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகைதந்த பூவரசங்குளம் பொலிஸார் நிலமையை கட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தனர் எனினும் அது பயனளிக்காத நிலையில் விசேட அதிரடிப்படையினர் களத்திற்கு அழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

சம்பவத்தில் குருக்கள்புதுக்குளம் பகுதியை சேர்ந்த பு.சிறிதரன் (வயது 46) மற்றும் அவரது 14 வயது மகனான டினோகாந் ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இரத்தினபுரியில் லொறி - முச்சக்கரவண்டி மோதி விபத்து! இளைஞர்கள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழப்பு

இரத்தினபுரி, பட்டுகெதர பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

லொறி மற்றும் முச்சக்கரவண்டி ஆகியன நேருக்கு நேர் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொழும்பிலிருந்து வெல்லவாய நோக்கி பயணித்துக்கொண்டிருந்த லொறி மற்றும் கதிர்காமத்திலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டியுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

முச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த இளைஞர்கள் இருவருக்கும் நித்திரை ஏற்பட்டதால் இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான இளைஞர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

அத்துருகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயது இளைஞரொருவரும் கடுவலை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் லொறியின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# இலங்கை தொடர்பில் மேலெழுந்தவாரியான முடிவுகள்

## மனித உரிமை ஆணையகத்தின் அறிக்கை குறித்து அமைச்சர் பீரிஸ் கவலை




ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் உண்மையாக நடந்தவற்றின் சிக்கலான தன்மையை உணராமல், மேலெழுந்தவாரியான பல முடிவுகள் இலங்கை குறித்த மனித உரிமை ஆணையகத்தின் அறிக்கையில் இடம் பெற்றிருப்பது ஆழ்ந்த வருத்தத்துக்குரிய விடயமாகும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் பேரவையின் இலங்கை மீதான விவாதத்தின்போது கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை மீதான 46/1 தீர்மானமானது இக்கழகத்தின் பிரிக்கப்பட்ட வாக்குகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்தீர்மானத்தின் ஆழமான குறைபாடுள்ள நடைமுறை மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத உள்ளடக்கம், குறிப்பாக ஆதாரங்கள் சேகரிக்கும் பொறிமுறை என்று அழைக்கப்படும் OP பந்தி 06 ஆகியவற்றுடன், இத்தீர்மானத்தின் அடிப்படையுடன் உடன்பாடின்றி, இலங்கையும் பிற நாடுகளும் எதிர்த்தன. இத்தீர்மானமானது, இக்கழகத்தின் நிறுவன கொள்கைகளான பாரபட்சமற்ற தன்மை, தற்சார்பற்ற குறிக்கோள் மற்றும் தேர்ந்தெடுக்காத தன்மை ஆகியவற்றுக்கு நேர் எதிராகவுள்ளது.

இது ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தீர்மானம் 60/251 மூலம் உறுப்பு நாடுகள் வழங்கிய ஆணையை மீறிச் சென்றது. நான் இவ்விடயம் தொடர்பான இலங்கையின் கருத்துகளை மார்ச் முதலாம் திகதி இச்சபையில் தெரிவித்துள்ளேன். ஆணையாளரின் அறிக்கை தொடர்பான எமது கருத்துகளையும் உரிய நேரத்தில் சமர்ப்பித்தோம். இதை செயலகம், ஆணையாளரின் எழுத்துபூர்வ புதுப்பித்தலுடன் ஒரே நேரத்தில் வெளியிடத் தவறியதை நாம் வருத்தத்துடன் குறிப்பிடுகின்றோம்.

நாம் இத்தீர்மானத்தினை நிராகரித்தபோதிலும், தொடர்ந்தும் மனித உரிமைகள் குறித்த சர்வதேச பணிப்பொறுப்புகளை தன்னார்வத்துடன் நிறைவேற்றுவதுடன், இக்கழகம் உள்ளிட்ட ஐக்கிய நாடுகளுடனும் தொடர்பில் இருப்போம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஜனவரி நாடாளுமன்றத்தில் கூறியதுபோல், "நாம் சர்வதேச சட்டங்கள் மற்றும் மரபுகளை மதிக்கும் ஒரு தேசம்". நாம் எமது முன்னேற்றங்கள் மற்றும் சவால்களை சீரான முறையில், இக்கழகத்துடனும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிற சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் நேர்மையான முறையிலும் வெளிப்படையாகவும் பகிர்ந்துள்ளோம்.

ஆணையாளரால் இச்சபையில் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் பாரிய முரண்பாடுகளும் பலவீனங்களும் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம். அதிலுள்ள அடிப்படைக் குறைபாடு என்னவெனில், அதன் சகிக்க முடியாத ஊடுருவும் தன்மையாகும். இது, தொடர்ந்து மூன்று தேர்தல்களில் நம் நாட்டு மக்களால் பெரும்பான்மையாக ஆணையிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் முக்கிய செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதில் பாகுபாட்டினை தெளிவாக கண்டறியக்கூடிய ஒரு அம்சம் உள்ளது. அதாவது, மற்ற உறுப்பு நாடுகளைப் பொறுத்தமட்டில் இதேபோன்ற விசாரணை நடைமுறையை மேற்கொள்வதை இக்கழகம் நிச்சயமாக எடுத்துக் கொள்ளாது என்பதேயாகும்.

இது ஐக்கிய நாடுகள் அமைப்பின் அடித்தளத்தின் வேரையே தாக்குகிறது. உறுப்பு நாடுகளின் அளவு மற்றும் செல்வாக்கு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், ஆணையாளரால் பயன்படுத்தப்படும் தரநிலைகளின் சீரான தன்மை மற்றும் நிலைத்தன்மை ஆகியவையும் ஐக்கிய நாடுகளின் சகோதரத்துவத்தின் அனைத்து உறுப்பினர்களின் இறையாண்மை சமத்துவம் தொடர்பான அத்தியாவசியக் கொள்கையுடன் உறுதியான இணக்கமும் இந்த அறிக்கையிலுள்ள பல பகுதிகளில் குறைகண்டுபிடிக்கும் தன்மையில் அத்துமீறப்பட்டுள்ளன.

இக்கழகத்தின் மனோபாவங்களுக்கு அடித்தளமாக இருக்கும் தார்மீகம் மற்றும் ஒழுக்கத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தின் பரவலான மதிப்பீட்டிலிருந்து ஐக்கிய நாடுகள் சபையின், குறிப்பாக மனித உரிமைகள் பேரவையின் பலமும் கௌரவமும் பெறப்பட்டதால், இது எமக்கு கவலையளிக்கிறது. குறிப்பாக, இக்கழகத்தின் முன்னோடியான மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவிதியைக் கருத்தில் கொண்டு, இந்த நம்பிக்கையை குறையாமல் தக்கவைத்துக்கொள்வது இன்றியமையாதது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் உண்மையாக நடந்தவற்றின் சிக்கலான தன்மையை உணராமல், மேலெழுந்தவாரியான முடிவுகள் பல இந்த அறிக்கையில் இடம் பெற்றிருப்பது ஆழ்ந்த வருத்தத்துக்குரிய விடயமாகும். எங்கள் எழுத்துபூர்வ பதிலில் இவை பற்றி விரிவாக விளக்கியுள்ளோம்.

வளமான மற்றும் மாறுபட்ட கலாசார பாரம்பரியத்திலிருந்து உருவாக்கப்பட்டதும், திறமையான சட்டங்களின் ஒருங்கிணைந்த பகுதியை உருவாக்கும் கடுமையான மீளாய்வுச் செயன்முறைகளுக்குட்பட்ட இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் சட்ட அமைப்பின் கீழ் இயங்கும் நமது நாட்டின் செல்வாக்குள்ள நிறுவனங்கள் மீதான ஆணையாளரின் தேவையற்ற தாக்குதலால் நாங்கள் கலக்கமடைந்துள்ளோம்.

முன்னெப்போதும் இல்லாத நெருக்கடியான நேரத்தில், மனிதகுலம் அனைத்துக்கும் உகந்த பலனை அடையும் வகையில் கடுமையாக வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்துவது பற்றிய ஒரு கேள்வியும் உள்ளது. ஒரு பாகுபாடான மற்றும் குறிப்பாக இலங்கை மீது இலக்கு வைக்கும் நோக்கத்துக்காக மில்லியன் கணக்கான டொலர்களைச் செலவிடுதலானது, இந்த வெளிப்படையான கட்டாயத்துடன் ஒத்துப்போகவில்லை. இந்த நேரத்தில் மிக முக்கியமானதாக இருக்கும் என்று பரந்த அளவிலான நாடுகளுக்கு தோன்றும் இந்தக் கருத்தாய்வுகளில், இந்த அறிக்கை குறைவான அக்கறை காட்டுவது எங்களுக்கு பெரும் பரிதாபமாகத் தோன்றுகிறது.

எமது மக்களுக்காக நாம் மீட்டெடுத்த பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை பேணுவதற்கும், சமமான முறையில் நிலையான முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை அரசாங்கம் உறுதியாக உள்ளது. வரவிருக்கும் சவால்களை எதிர்கொள்ள சமத்துவம் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் எங்களுடன் பங்குதாரர்களாக சேர வேண்டும் என்ற நேர்மையான அறிவுரையுடன் நாடு சர்வதேச சமூகத்தை அணுகுகிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# மக்கள் ஆணை வழங்கினால் ஆட்சியைப் பொறுப்பேற்கத் தயார்

## அரசுக்கெதிரான கொத்மலைப் போராட்டத்தில் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

நாட்டை மீட்டெடுத்து, மக்களைப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டம் எம்மிடமுள்ளது. எனவே, மக்கள் ஆணை வழங்கினால் ஆட்சியைப் பொறுப்பேற்று, சிறந்த நிர்வாகத்தை வழங்குவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியா - கொத்மலை கடதொர பகுதியில் நேற்று (06) காலை ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொண்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, மேற்கண்டவாறு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய மக்கள் சக்திக்கு தேசிய வேலைத்திட்டமொன்று உள்ளது. அரசியல், பொருளாதாரம் மற்றும் மக்களை பாதுகாக்கும் திட்டங்கள் எம்மிடமுள்ளன. தற்போது பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதற்கான திட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன. பல தரப்புகளிடமிருந்து ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன. விமல் வீரவங்ச, உதய கம்மன்பில போன்றவர்களை நீக்கியமை அரசின் முடிவாகும். மஹிந்த சிந்தனை உட்பட அரசின் திட்டங்களின் பின்னணியில் இவர்களே இருந்தனர். எனவே, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அவர்களும் பொறுப்புக்கூற வேண்டும். அவர்கள் அரசுக்குள் தொடர்ந்தும் இருந்து முரண்பாடுகளை தீர்த்துக்கொள்ளவே முற்படுகின்றனர். அமைச்சரவையை மாற்றுவதால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. இந்த அரசிலுள்ளவர்கள் பலவீனமானவர்கள் என்பதாலேயே அடிக்கடி மாற்றங்கள் இடம்பெறுகின்றன.

அதேவேளை, விமல் வீரவங்ச, உதய கம்மன்பில போன்றவர்களின் செயற்பாடு எமக்குத் தெரியும். அவர்கள் மக்களைத் தவறாக வழிநடத்தினர். அப்படியானவர்களை இணைத்துக்கொள்வது பற்றி சந்திக்க வேண்டிவரும். அரசிலிருந்து வெளியேறுபவர்களை எல்லாம் இணைத்துக்கொள்ளும் அளவுக்கு எமது கட்சி பலவீனம் அடையவில்லை என்றார்.

# சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் கண்டியிலிருந்து தெமோதர வரை ரயில் சேவை





(த.அசோக் குமார்)

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் கண்டியிலிருந்து தெமோதர வரையிலான புதிய புகையிரத சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்த ரயில் கண்டியிலிருந்து காலை 7 மணிக்குப் புறப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு தெமோதரையைச் சென்றடையும்.

இதன்மூலம் நாவலப்பிட்டி, சிவனொளிபாதை, கிரேட் வெஸ்டர்ன், நானு-ஓயா, எஞ்சின் நீர்வீழ்ச்சி, பட்டிட்டியபொல, ஒஹிய, இதல்கஸ்ஹின்ன, வின்டீஸ் பிரேக், ஹப்புத்தளை, கித்தல்லெ-எல்ல, ஒன்பது வளைவுப் பாலம் ஆகிய இடங்களுக்கு பிரயாண வசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தெமோதரவிலிருந்து மாலை 3.45 மணிக்கு இந்த ரயில் கண்டிக்குப் புறப்படும்.

முதல் நாள் புகையிரதத்தில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் மற்றும் விருந்தினர்களை ஒன்பது வளைவுப் பாலத்திற்கருகில் ஊவா மாகாண சபை சுற்றுலா அமைச்சின் செயலாளர் நிஹால் குணரத்ன மற்றும் சுற்றுலாத்துறை உதவி செயலாளர் சம்பத் நிசங்க மற்றும் அதிகாரிகளால் வரவேற்பதற்காக நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷன தெனிபிட்டிய மற்றும் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



**மாத்தளை மாவட்டத்தில் தேசிய மற்றும் சர்வதேச உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் ரிவஸ்டன் சுற்றுலாத் தலத்துக்கு மாத்தளை நகரிலிருந்து இரத்தோட்டை வழியாக செல்லும் பாதையை கார்பட் இட்டு அபிவிருத்திசெய்யும் பணி, மாத்தளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இரத்தோட்டை, உக்குவளை அபிவிருத்திக்குழு சபைத் தலைவருமான ரோஹண குமார திஸாநாயக்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (மாத்தளை செய்தியாளர்)**

# இவ்வருட அரச வெசாக் நிகழ்வு பலாங்கொடை கூரகல விகாரையில்



(சிவா ஸ்ரீதரராவ்)

இவ்வருடம் அரச வெசாக் நிகழ்வை பலாங்கொடை கூரகல விகாரையில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

2566 ஆவது ஸ்ரீ புத்த வருடத்தை முன்னிட்டு இம்முறை அரச வெசாக் நிகழ்வு குறித்த கலந்துரையாடலொன்று சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வருடம் அரச வெசாக் நிகழ்வு நடத்துவது குறித்து கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

புனித பூமியான பலாங்கொடை கூரகல பௌத்த விகாரையை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் அதன் ஆரம்பப் பணிகள் வணக்கத்திற்குரிய வதுரகும்புரே தம்மரத்ன நாஹிமி மற்றும் அரசாங்கத்தின் சார்பாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ ஆகியோர் தலைமையில் கடந்த வருடம் மார்ச் மாதம் 3ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

இம்முறை வெசாக் அரச நிகழ்வை மேற்படி கூரகல விகாரையில் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி நிகழ்வில் அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, நாடாளுமன்ற உறுப்பினர்களான அகில எல்லாவல, காமினி வலேபொட, முதிதா சொய்சா, புத்தசாசன அமைச்சின் செயலாளர் கபில குணவர்தன, சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத் உட்பட அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சமூகத்தில் கல்விப் புரட்சியின் மூலமே மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும்

## பாரத் அருள்சாமி தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

"மலையக மக்களுக்கு சேவையாற்றுவதும், அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதுமே காங்கிரஸின் பிரதான நோக்கமாகும். கல்விப் புரட்சி மூலமே எமது சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம் என்பதில் காங்கிரஸ் உறுதியாக நிற்கின்றது. எனவே, எமது இலக்கை நோக்கிய பயணத்தில் நாம் தெளிவாக இருக்கின்றோம். கொள்கையற்ற சிலரே எமது பயணத்தை விமர்சித்து பாதையில் முட்களை விதைக்க முற்படுகின்றனர்" என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் பணிப்பாளர் நாயகமுமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டி பன்வில - ஹாத்தல கீழ்ப்பிரிவு மற்றும் கெலாபொக்க சோலங்கந்த ஆகிய தோட்டப்பகுதிகளில் தோட்ட வீடமைப்பு, சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நிர்மாணிக்கப்பட்ட கொங்கிறீட் பாதையை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளரும், பிரஜாசக்தி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் பணிப்பாளர் நாயகமுமான பாரத் அருள்சாமி தலைமையில் நடைபெற்றது.



இதன்போது நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து நாம் தலைதூக்க ஆரம்பிக்கும்போது, ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கிடையில் ஏற்பட்டுள்ள மோதலும் எமது பொருளாதாரத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உலக சந்தையில் எரிபொருள் விலை உச்சம் தொட்டுள்ளது. இப்படியான நெருக்கடிகள் இருந்தும் மலையகத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களை நாம் கைவிடவில்லை. அவை உரிய வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு அப்பால் கல்வித்துறை எழுச்சியே எமது பிரதான இலக்கு. அத்துடன், சுகாதாரம், விளையாட்டு மற்றும் சுயதொழிலும் ஊக்குவிக்கப்படும். இவை சமாந்தரமாக இடம்பெற்றால் நிச்சயம் எமது சமூகம் மாற்றம் காணும். அந்த இலக்குடன்தான் ஜீவன் தொண்டமான் தலைமையில் காங்கிரஸ் தற்போது பயணித்துக் கொண்டிருக்கின்றது.

நாங்கள் வலிகளைத் தாங்கிக்கொண்டாலும் மக்களுக்கு சுகங்களைக் கொடுக்கவே முயற்சிக்கின்றோம். அப்படியிருந்தும் சிலர் எம்மீது விமர்சனக் கணைகளைத் தொடுக்கின்றனர். எமது பாதையில் முட்களை விதைக்க முற்படுகின்றனர். எமக்கு உதவாவிட்டாலும் பரவாயில்லை, பயணத்துக்கு தடையாக இருக்க வேண்டாம் என கேட்டுக்கொள்கின்றேன்" - என்றார்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



**மஸ்கெலியாவில் தனியார் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் இணைந்து மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிரமதானப் பணிகளை நேற்று முந்தினம் முன்னெடுத்தனர். இதனை மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோக் முன்னின்று வழிநடத்தினார். (செ.தி.பெருமாள்)**

# தலவாக்கலையில் எரிபொருள் தட்டுப்பாடு; தோட்டப்பகுதி பஸ் சேவைகள் பாதிப்பு

(தலவாக்கலை செய்தியாளர்)

தலவாக்கலை எரிபொருள் நிலையங்களில் கடந்த சில நாட்களாக டீசல் தட்டுப்பாடு காரணமாக தலவாக்கலையிலிருந்து பல தோட்டப் பாதைகளுக்கான தனியார் பஸ் சேவைகள் தடைப்பட்டுள்ளதாக பஸ் சாரதிகள் தெரிவித்துள்ளனர். எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நேற்று (06) தலவாக்கலையிலுள்ள எரிபொருள் நிலையங்களில் பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதைக் காணமுடிந்தது.

2, 3 நாட்களுக்கு ஒருமுறை எரிபொருள் நிலையங்களுக்கு அனுப்பப்படும் டீசல், நிறுத்தப்படும் வாகனங்களுக்குக் கூட போதாது என்றும், தனியார் பஸ்களுக்கு முன்னுரிமை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சாரதிகள் தெரிவிக்கின்றனர். தலவாக்கலையிலிருந்த பூண்டுலோயா, இராணிவத்தை, எல்ஜின், டயகம, சென் கூம்ஸ், மடக்கும்புர, மட்டுக்கலை, நோனாவத்தை, போபத்தலாவ ஆகிய பகுதிகளுக்கு செல்ல நாளாந்தம் பெருந்தோட்ட மக்கள் பஸ்களையே பயன்படுத்துகின்றனர். இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மலையக தேயிலைத் தோட்டங்களின் அன்றாட நடவடிக்கைகளும்,, மரக்கறிப் போக்குவரத்தும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**கம்பளையில் எரிபொருள் நிலையத்தில், மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக நேற்று நீண்ட நேரமாக மக்கள் காத்திருந்தபோது... (கம்பளை செய்தியாளர்)**

# 15ஆவது ஐ.பி.எல் தொடரின் லீக் போட்டிகளுக்கான முழுமையான அட்டவணை

## TATA IPL 2022 SEASON SCHEDULE 01

IPLT20.COM

| MATCH DAY | MATCH NO. | DAY | DATE | TIME | HOME TEAM | AWAY TEAM | VENUE |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | Sat | 26-Mar-22 | 7:30 PM | Chennai Super Kings | Kolkata Knight Riders | Wankhede Stadium |
| 2 | 2 | Sun | 27-Mar-22 | 3:30 PM | Delhi Capitals | Mumbai Indians | Brabourne - CCI |
| 2 | 3 | Sun | 27-Mar-22 | 7:30 PM | Punjab Kings | Royal Challengers Bangalore | DY Patil Stadium |
| 3 | 4 | Mon | 28-Mar-22 | 7:30 PM | Gujarat Titans | Lucknow Super Giants | Wankhede Stadium |
| 4 | 5 | Tue | 29-Mar-22 | 7:30 PM | Sunrisers Hyderabad | Rajasthan Royals | MCA Stadium, Pune |
| 5 | 6 | Wed | 30-Mar-22 | 7:30 PM | Royal Challengers Bangalore | Kolkata Knight Riders | DY Patil Stadium |
| 6 | 7 | Thu | 31-Mar-22 | 7:30 PM | Lucknow Super Giants | Chennai Super Kings | Brabourne - CCI |
| 7 | 8 | Fri | 01-Apr-22 | 7:30 PM | Kolkata Knight Riders | Punjab Kings | Wankhede Stadium |
| 8 | 9 | Sat | 02-Apr-22 | 3:30 PM | Mumbai Indians | Rajasthan Royals | DY Patil Stadium |
| 8 | 10 | Sat | 02-Apr-22 | 7:30 PM | Gujarat Titans | Delhi Capitals | MCA Stadium, Pune |
| 9 | 11 | Sun | 03-Apr-22 | 7:30 PM | Chennai Super Kings | Punjab Kings | Brabourne - CCI |
| 10 | 12 | Mon | 04-Apr-22 | 7:30 PM | Sunrisers Hyderabad | Lucknow Super Giants | DY Patil Stadium |
| 11 | 13 | Tue | 05-Apr-22 | 7:30 PM | Rajasthan Royals | Royal Challengers Bangalore | Wankhede Stadium |
| 12 | 14 | Wed | 06-Apr-22 | 7:30 PM | Kolkata Knight Riders | Mumbai Indians | MCA Stadium, Pune |
| 13 | 15 | Thu | 07-Apr-22 | 7:30 PM | Lucknow Super Giants | Delhi Capitals | DY Patil Stadium |
| 14 | 16 | Fri | 08-Apr-22 | 7:30 PM | Punjab Kings | Gujarat Titans | Brabourne - CCI |
| 15 | 17 | Sat | 09-Apr-22 | 3:30 PM | Chennai Super Kings | Sunrisers Hyderabad | DY Patil Stadium |
| 15 | 18 | Sat | 09-Apr-22 | 7:30 PM | Royal Challengers Bangalore | Mumbai Indians | MCA Stadium, Pune |
| 16 | 19 | Sun | 10-Apr-22 | 3:30 PM | Kolkata Knight Riders | Delhi Capitals | Brabourne - CCI |
| 16 | 20 | Sun | 10-Apr-22 | 7:30 PM | Rajasthan Royals | Lucknow Super Giants | Wankhede Stadium |
| 17 | 21 | Mon | 11-Apr-22 | 7:30 PM | Sunrisers Hyderabad | Gujarat Titans | DY Patil Stadium |
| 18 | 22 | Tue | 12-Apr-22 | 7:30 PM | Chennai Super Kings | Royal Challengers Bangalore | DY Patil Stadium |
| 19 | 23 | Wed | 13-Apr-22 | 7:30 PM | Mumbai Indians | Punjab Kings | MCA Stadium, Pune |
| 20 | 24 | Thu | 14-Apr-22 | 7:30 PM | Rajasthan Royals | Gujarat Titans | DY Patil Stadium |
| 21 | 25 | Fri | 15-Apr-22 | 7:30 PM | Sunrisers Hyderabad | Kolkata Knight Riders | Brabourne - CCI |
| 22 | 26 | Sat | 16-Apr-22 | 3:30 PM | Mumbai Indians | Lucknow Super Giants | Brabourne - CCI |
| 22 | 27 | Sat | 16-Apr-22 | 7:30 PM | Delhi Capitals | Royal Challengers Bangalore | Wankhede Stadium |
| 23 | 28 | Sun | 17-Apr-22 | 3:30 PM | Punjab Kings | Sunrisers Hyderabad | DY Patil Stadium |
| 23 | 29 | Sun | 17-Apr-22 | 7:30 PM | Gujarat Titans | Chennai Super Kings | MCA Stadium, Pune |
| 24 | 30 | Mon | 18-Apr-22 | 7:30 PM | Rajasthan Royals | Kolkata Knight Riders | Brabourne - CCI |
| 25 | 31 | Tue | 19-Apr-22 | 7:30 PM | Lucknow Super Giants | Royal Challengers Bangalore | DY Patil Stadium |
| 26 | 32 | Wed | 20-Apr-22 | 7:30 PM | Delhi Capitals | Punjab Kings | MCA Stadium, Pune |
| 27 | 33 | Thu | 21-Apr-22 | 7:30 PM | Mumbai Indians | Chennai Super Kings | DY Patil Stadium |
| 28 | 34 | Fri | 22-Apr-22 | 7:30 PM | Delhi Capitals | Rajasthan Royals | MCA Stadium, Pune |
| 29 | 35 | Sat | 23-Apr-22 | 3:30 PM | Kolkata Knight Riders | Gujarat Titans | DY Patil Stadium |
| 29 | 36 | Sat | 23-Apr-22 | 7:30 PM | Royal Challengers Bangalore | Sunrisers Hyderabad | Brabourne - CCI |
| 30 | 37 | Sun | 24-Apr-22 | 7:30 PM | Lucknow Super Giants | Mumbai Indians | Wankhede Stadium |
| 31 | 38 | Mon | 25-Apr-22 | 7:30 PM | Punjab Kings | Chennai Super Kings | Wankhede Stadium |
| 32 | 39 | Tue | 26-Apr-22 | 7:30 PM | Royal Challengers Bangalore | Rajasthan Royals | MCA Stadium, Pune |
| 33 | 40 | Wed | 27-Apr-22 | 7:30 PM | Gujarat Titans | Sunrisers Hyderabad | Wankhede Stadium |

## TATA IPL 2022 SEASON SCHEDULE 02

IPLT20.COM

| MATCH DAY | MATCH NO. | DAY | DATE | TIME | HOME TEAM | AWAY TEAM | VENUE |
|---|---|---|---|---|---|---|---|
| 34 | 41 | Thu | 28-Apr-22 | 7:30 PM | Delhi Capitals | Kolkata Knight Riders | Wankhede Stadium |
| 35 | 42 | Fri | 29-Apr-22 | 7:30 PM | Punjab Kings | Lucknow Super Giants | MCA Stadium, Pune |
| 36 | 43 | Sat | 30-Apr-22 | 3:30 PM | Gujarat Titans | Royal Challengers Bangalore | Brabourne - CCI |
| 36 | 44 | Sat | 30-Apr-22 | 7:30 PM | Rajasthan Royals | Mumbai Indians | DY Patil Stadium |
| 37 | 45 | Sun | 01-May-22 | 3:30 PM | Delhi Capitals | Lucknow Super Giants | Wankhede Stadium |
| 37 | 46 | Sun | 01-May-22 | 7:30 PM | Sunrisers Hyderabad | Chennai Super Kings | MCA Stadium, Pune |
| 38 | 47 | Mon | 02-May-22 | 7:30 PM | Kolkata Knight Riders | Rajasthan Royals | Wankhede Stadium |
| 39 | 48 | Tue | 03-May-22 | 7:30 PM | Gujarat Titans | Punjab Kings | DY Patil Stadium |
| 40 | 49 | Wed | 04-May-22 | 7:30 PM | Royal Challengers Bangalore | Chennai Super Kings | MCA Stadium, Pune |
| 41 | 50 | Thu | 05-May-22 | 7:30 PM | Delhi Capitals | Sunrisers Hyderabad | Brabourne - CCI |
| 42 | 51 | Fri | 06-May-22 | 7:30 PM | Gujarat Titans | Mumbai Indians | Brabourne - CCI |
| 43 | 52 | Sat | 07-May-22 | 3:30 PM | Punjab Kings | Rajasthan Royals | Wankhede Stadium |
| 43 | 53 | Sat | 07-May-22 | 7:30 PM | Lucknow Super Giants | Kolkata Knight Riders | MCA Stadium, Pune |
| 44 | 54 | Sun | 08-May-22 | 3:30 PM | Sunrisers Hyderabad | Royal Challengers Bangalore | Wankhede Stadium |
| 44 | 55 | Sun | 08-May-22 | 7:30 PM | Chennai Super Kings | Delhi Capitals | DY Patil Stadium |
| 45 | 56 | Mon | 09-May-22 | 7:30 PM | Mumbai Indians | Kolkata Knight Riders | DY Patil Stadium |
| 46 | 57 | Tue | 10-May-22 | 7:30 PM | Lucknow Super Giants | Gujarat Titans | MCA Stadium, Pune |
| 47 | 58 | Wed | 11-May-22 | 7:30 PM | Rajasthan Royals | Delhi Capitals | DY Patil Stadium |
| 48 | 59 | Thu | 12-May-22 | 7:30 PM | Chennai Super Kings | Mumbai Indians | Wankhede Stadium |
| 49 | 60 | Fri | 13-May-22 | 7:30 PM | Royal Challengers Bangalore | Punjab Kings | Brabourne - CCI |
| 50 | 61 | Sat | 14-May-22 | 7:30 PM | Kolkata Knight Riders | Sunrisers Hyderabad | MCA Stadium, Pune |
| 51 | 62 | Sun | 15-May-22 | 3:30 PM | Chennai Super Kings | Gujarat Titans | Wankhede Stadium |
| 51 | 63 | Sun | 15-May-22 | 7:30 PM | Lucknow Super Giants | Rajasthan Royals | Brabourne - CCI |
| 52 | 64 | Mon | 16-May-22 | 7:30 PM | Punjab Kings | Delhi Capitals | DY Patil Stadium |
| 53 | 65 | Tue | 17-May-22 | 7:30 PM | Mumbai Indians | Sunrisers Hyderabad | Wankhede Stadium |
| 54 | 66 | Wed | 18-May-22 | 7:30 PM | Kolkata Knight Riders | Lucknow Super Giants | DY Patil Stadium |
| 55 | 67 | Thu | 19-May-22 | 7:30 PM | Royal Challengers Bangalore | Gujarat Titans | Wankhede Stadium |
| 56 | 68 | Fri | 20-May-22 | 7:30 PM | Rajasthan Royals | Chennai Super Kings | Brabourne - CCI |
| 57 | 69 | Sat | 21-May-22 | 7:30 PM | Mumbai Indians | Delhi Capitals | Wankhede Stadium |
| 58 | 70 | Sun | 22-May-22 | 7:30 PM | Sunrisers Hyderabad | Punjab Kings | Wankhede Stadium |

# NEM Construction நிறுவனம், DIMO விலிருந்து TATA LPK 1618 BLASTER ரிப்பர்கள் கொள்வனவு






இலங்கையின் முன்னணியிலுள்ள பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான DIMO நிறுவனம், TATA வாகனங்களுக்கான ஒரேயொரு அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தராகவும் உள்ளது. அது சமீபத்தில் NEM Construction (Pvt) Ltd நிறுவனத்திற்கு 30 TATA LPK 1618 4 Cube BLASTER ரிப்பர்களை வழங்கியிருந்தது.

TATA LPK 1618 4 Cube BLASTER நிறுவனமானது, நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்கள் தொடர்பான உச்ச CIDA தரத்தை (CS-2) கொண்டுள்ள இலங்கையின் முன்னணி சிவில் பொறியியல் ஒப்பந்ததாரர்களில் ஒன்றாகும்.

TATA LPK 1618 BLASTER ரிப்பர்கள் 5883cc திறன் கொண்ட Cummins ISBe 5.9 180 40 40 எஞ்சின் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. உச்சபட்சமாக 180 Hp வெளியீட்டை உருவாக்குவதுடன், BS IV புகை வெளியேற்ற தரநிலைகளுக்கு இணங்குகிறது.

இது ஸ்மார்ட்டாக வடிவமைக்கப்பட்ட குளிரூட்டப்பட்ட அறையையும் கொண்டுள்ளது. செயற்றிறன் மற்றும் எரிபொருள் திறன் ஆகியவற்றில் உயர்ந்த இடத்திலுள்ளது. பவர் ஸ்டீயரிங் மற்றும் வியப்பூட்டும் 42% தர திறன் ஆகியவற்றைக் கொண்டுள்ள LPK 1618 BLASTER ரிப்பரானது, எளிதாக கையாளக்கூடிய ஓர் அற்புதமான தெரிவாகும்.

இந்த வாகனங்களை கையளிக்கும் நிகழ்வில், DIMOவின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ரஞ்சித் பண்டிதகே கருத்து வெளியிடுகையில்,

"இந்தியாவில் வர்த்தக வாகனங்களை தயாரிப்பதில் முன்னணியிலுள்ள TATA Motors நிறுவனத்தால், உலகத்தரம் வாய்ந்த LPK 1618 BLASTER ரிப்பர்கள் தயாரிக்கப்படுகின்றன. TATA LPK 1618 BLASTER ரிப்பர், அதன் மேம்பட்ட தொழில்நுட்பத்துடன், குறைந்தபட்ச பயன்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவுகளுடன் இலங்கையின் கட்டுமான மற்றும் சுரங்கத் தொழில்களை மீள் வரையறை செய்கின்றது. அத்துடன், புதிய வடிவமைப்பு மற்றும் சொகுசான வசதியளிக்கும் நிலை காரணமாக, சாரதிகளுக்கு சோர்வு ஏற்படுவதைக் குறைத்து, அனைவரினதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பயன்படுத்த வாய்ப்பளிக்கிறது.

DIMO ஆனது, TATA வர்த்தக வாகனங்கள் அனைத்தையும், இலங்கையிலுள்ள உள்ளூர் வாடிக்கையாளர்களினது, போக்குவரத்து தொடர்பான அனைத்து தேவைகளுக்கும் பொருந்தும் வகையில், DIMO வின் இணையற்ற விற்பனைக்குப் பிந்தைய சேவையின் ஆதரவுடன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. TATA வர்த்தக வாகன வகைகளில் சிறிய வர்த்தக ட்ரக்குகள் (1 தொன்னுக்கு குறைந்த பாரத்துடன்), சிங்கிள் கெப்கள் (குடும்ப பாவனை மற்றும் பல்வேறு வணிக பயன்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன,

இலகுரக வர்த்தக ட்ரக்குகள் (டெக்கின் நீளம் 10 அடி முதல் 20 அடி வரை மாறுபடும்), கனரக வர்த்தக ட்ரக்குகள், கனரக வர்த்தக ரிப்பர்கள் முதல் பிரைம் மூவர்ஸ் மற்றும் பஸ்கள் (28 முதல் 54 இருக்கைகள்) ஆகியன அடங்குகின்றன.


TATA Motors India மற்றும் DIMOஆகியன, 61 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த வலுவான உறவைக் கொண்டுள்ளன.


அத்துடன், TATA வர்த்தக வாகனங்களானவை, அதிகளவான இலங்கையர்களின் அன்றாட வாழ்வில் முக்கிய பங்கை வகிக்கின்றன.

தனது பிரிவிலுள்ள பெரும்பாலான வாகன வகைகளில் TATA வர்த்தக வாகனங்களே சந்தையில் முன்னணியில் உள்ளன. TATA வின் விற்பனை, சேவை வழங்கல், அசல் உதிரிப் பாகங்கள் ஆகியவற்றை வழங்குவதற்காக, DIMO - TATA தற்போது 18 இற்கும் மேற்பட்ட கிளைகள் மற்றும் 500 இற்கும் மேற்பட்ட விற்பனை முகவர்களுடன் நாடு முழுவதும் செயற்பட்டு வருகின்றது.

அத்துடன் இந்த கூட்டாண்மையானது, DIMO வின் மதிப்புமிக்க TATA வாடிக்கையாளர்களுக்கு அதன் தனித்துவமான 24 மணிநேர வீதி வழி உதவிச் சேவையையும் வழங்குகிறது.

# நவீன வசதிகளுடன் சம்மாந்துறையில் மீண்டும் திறக்கப்படும் HNB



இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கிகளில் ஒன்றான HNB PLC, அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறையில் உள்ள வர்த்தக சமூகத்தினருக்கான வங்கி வசதிகளை மேம்படுத்தும் வகையில், சம்மாந்துறை ஹாஜிரா வீதி, இலக்கம் 69 முகவரியில் வாடிக்கையாளர் நிலையத்தை வைபவ ரீதியாக மீண்டும் திறந்து வைத்தது.

இது ஒவ்வொரு வாரமும் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை வர்த்தக செயற்பாடுகளுக்காக திறந்திருக்கும், விசாலமான புதிய வளாகத்தில் டிஜிட்டல் கட்டண வசதிகளுடன் முழு அளவிலான வங்கிச் சேவைகளும் உள்ளன. HNBஇன் நுகர்வோர் விவகார, சிறு மற்றும் நடுத்தர வங்கியியல் பிரதிப் பொது முகாமையாளர் சஞ்ஜேய் விஜேமான்ன, சம்மாந்துறை பிரதேச செயலாளர் S.L.M.ஹனிஃபா, HNBஇன் வர்த்தக வங்கிச் சேவைகள் (Wholesale Banking) தொடர்பான பிரதிப் பொது முகாமையாளர் தமித் பல்லேவத்த, HNBஇன் இஸ்லாமிய வங்கி நடவடிக்கைகள் பிரதானி ஹிஷாம் அலி ஆகிய அதிகாரிகளின் பங்களிப்புடன் இந்த வாடிக்கையாளர் மத்திய நிலையம் மக்களின் நன்மைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

"கடந்த சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளோம். இது சம்மாந்துறை மக்களின் தொழில் முயற்சியில் அளப்பரிய ஆர்வத்தை வெளிப்படுத்தி அம்பாறை மாவட்டத்தில் மிகவும் விரும்பப்படும் பிரதேசமாக மாற்றியுள்ளது.

இப்பகுதியிலுள்ள சில்லறை, பெருநிறுவன, சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் மூலம் எங்கள் வாடிக்கையாளர் தளத்துடன் கூட்டு சேர்ந்து அவர்களின் கனவுகளை நனவாக்குவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதால், நாங்கள் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலிகள்" என HNBஇன் நுகர்வோர் சேவைகள், சிறிய மற்றும் நடுத்தர வங்கி சேவைகள் பிரதி பொது முகாமையாளர் சஞ்ஜேய் விஜேமன்ன தெரிவித்தார்.

பிராந்தியத்தில் தனது இருப்பை வலுப்படுத்தி, HNB வளர்ந்து வரும் வணிக சமூகமான HNB Payfast, HNB MOMO, HNB Solo, HNB AppiGo மற்றும் பிற டிஜிட்டல் தளங்களை எளிதாகவும் டிஜிட்டல் முறையில் மேம்படுத்தப்பட்ட வங்கிச் சேவைகள் மற்றும் பல்வேறு டிஜிட்டல் முறையில் செயற்படுத்தப்பட்ட கட்டண அணுகல்களை வழங்குகிறமையும் குறிப்பிடத்தக்கது.

திகதி 05.03.2022
சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4697
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,135,450.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 7 3 9 5 8 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 52,380,538.20

Mega POWER மெகா பவர்
கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1045
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,669,080.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 239,492,330.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
A 25 01 26 51 77

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 727
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,100,580.00
P 43 55 61 77
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 100,895,527.60


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1219
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,398,500.00
வெற்றி இலச்சினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 8 9 6 9 7 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,298,052.80


தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# தமிழக முதலமைச்சர் ஸ்டாலினுக்கு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் கடிதம்

## இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினையை தீர்க்குமாறு கோரிக்கை







(யாழ். நிருபர்)

நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்குமாறுகோரியும் இழுவைப்படகுகளுக்கு நடவடிக்கை எடுக்கக்கோரியும் மூன்று மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ஊடகங்கள் வாயிலாக கடிதம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் இவ்விடயத்தை தெரிவித்தனர்.

அந்தக் கடிதத்தில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது,

வட இலங்கையின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழிலில் தங்கியிருக்கும் ஏறத்தாழ இரண்டு இலட்சம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த வேண்டுகோளை முன்வைக்கின்றோம். முப்பது வருடகால யுத்தத்தினால் சொல்லமுடியாத துயரங்களையும் அழிவுகளையும் நாங்கள் சந்தித்திருந்தோம். யுத்தம் காரணமாக வெளி மாவட்டங்களிலும் தென்னிந்தியாவுக்கும் என தொடர்ச்சியான இடப்பெயர்வுகளையும் உயிர் மற்றும் உடைமை இழப்புகளையும் சந்தித்திருந்தோம். யுத்த காலத்தில் எமது சமூகத்துக்கு அடைக்கலம் தந்தமைக்குத் தமிழ்நாட்டு மக்களுக்கு முதற்கண் எமது நன்றியினை தெரிவிக்கின்றோம்.

யுத்தத்துக்குப் பின்பு எமது வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப கடுமையாக முயற்சித்தபோதிலும், பல சவால்களையும் தோல்விகளையுமே நாம் சந்திக்க நேர்ந்தது. வருமானத்தின் வீழ்ச்சி மற்றும் பெரும் கடன் சுமை காரணமாக எமது இளந்தலைமுறை கடற்றொழிலையே கைவிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

யுத்தத்துக்கு பின்பான இந்த சமூக பொருளாதார சூழலுக்கான முக்கிய காரணம் தமிழ்நாட்டு இழுவைப்படகுகள் தான்.

இந்த இழுவைப்படகுகள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி வலைகளை அறுத்துச்செல்வதனால் பெரும் இழப்புகள் ஏற்படுகின்றன. மேலும் சொத்து இழப்புகளைத் தவிர்க்க நாம் இழுவைப்படகுகள் வரும் நாட்களில் கடலுக்கு போகாமல் பெருமளவான வருமானத்தை இழக்கின்றோம். கடல் வளங்களைச் சுரண்டும் இழுவைமடிகளால் சிறு மீனவர்களின் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இழுவைமடி முறையால் வட இலங்கை மற்றும் தமிழ்நாட்டு சிறு கடற்றொழிலாளர்களின் எதிர்காலமே அழிக்கப்படுகின்றது.

இந்தப் பிரச்சினை இலங்கை கடற்றொழிலாளருக்கும் தமிழ்நாட்டு கடற்றொழிலாளருக்கும் இடையில் இருக்கும் வரலாற்று ரீதியான உறவை பாதிக்கின்றது. இழுவைப் படகுகளை முற்றாக நிறுத்துமாறு இருநாட்டு கடற்றொழிலாளர்களுக்கு மத்தியில் பல பேச்சுவார்த்தைகள் நடைபெற்றபோதிலும், அவற்றின் மூலமாக ஒரு தீர்வையும் எட்டமுடியவில்லை. உண்மையில் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு என்பது இரு நாட்டுக் கடலிலும் இழுவைப்படகு முறையினைத் தடை செய்வதாகும். எனினும், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் விருப்பு இரு நாடுகளின் அரசியல் தலைமைத்துவங்களிடமும் இருக்கவில்லை.

முதலமைச்சராக பதவியேற்ற பின்பு தென்னிந்தியாவில் வாழும் இலங்கை தமிழ் அகதி மக்களுக்காக நீங்கள் முன்வைத்த தீர்வுகளை அறிந்த நாம் உங்களுக்கு எமது நன்றிகளை கூறக் கடமைப்பட்டுள்ளோம். உங்களுடைய இவ்வாறான முற்போக்கான பார்வையில் தமிழ்நாட்டு இழுவைப்படகுகளால் பாதிக்கப்படும் வட இலங்கை கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளையும் கவனத்தில் கொண்டு இதற்கான உரிய தீர்வுகளைப் பெற்றுத்தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இக்கடிதத்தில் யாழ்., கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் கையெழுத்திட்டுள்ளபோதும் மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் கையொப்பமிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# 700 வீடுகளில் மக்கள் நிரந்தரமாக குடியேறாத நிலை

## அங்கஜன் இராமநாதன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

வீட்டுத் திட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட சுமார் 700 வீடுகளில் மக்கள் நிரந்தரமாக குடியேறாத நிலைமை காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன. சில நடைமுறை சிக்கல்களும் காணப்படுகின்றன. வீட்டுத் திட்டம் வழங்கப்பட வேண்டுமாயின் அவர்கள் தங்களின் காணிகளில் குடியேற வேண்டும் என அதிகாரிகள் கூறுகின்றனர். வீடுகள் இல்லாத காணிகளில் எவ்வாறு தாம் குடியேறுவது என மக்கள் கேட்கின்றனர்.

வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்ட பலர் வீடுகளை தமது காணிகளில் கட்டிவிட்டு அவர்கள் வேறு இடங்களில் வசிக்கின்றார்கள். வீட்டுத் திட்ட வீடுகளை தங்கள் "விடுமுறை விடுதியாக" பலர் பயன்படுத்துகிறார்கள். சுமார் 700 வீடுகளில் மக்கள் நிரந்தரமாக குடியேறவில்லை. அதனால் அவர்கள் வீட்டு வளாகங்கள் பற்றைக் காடாக காட்சியளிக்கின்றன.



இவ்வாறான நிலையினால், காணிகளில் குடியேறுபவர்களுக்கே வீட்டுத் திட்டம் வழங்க முடியும் என அதிகாரிகள் கூறுகின்றனர். வீட்டுத் திட்ட வீடுகளில் குடியேறாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம். அத்துடன் வீட்டுத் திட்டத்துக்கு வழங்கப்படும் நிதி போதாமையுள்ளதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன.

தென்னிலங்கையில் வீட்டுத் திட்டங்களுக்கு 06 இலட்சம் ரூபாவே வழங்கப்படுகிறது. இங்கே 10 இலட்சம் ரூபா வழங்கப்படுகிறது. தற்போதைய விலைவாசி அதிகரிப்பு காரணமாக இந்த நிதித்தொகை போதாது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். அதனால் வீட்டுத் திட்ட நிதி தொகையை அதிகரிக்குமாறு கோரவுள்ளோம் என்று தெரிவித்தார்.

# மன்னாரில் டீசல் தட்டுப்பாடு; வரிசையில் நிற்கும் வாகனங்கள்







(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக எரிபொருள் நிலையங்களில் டீசல் பற்றாக்குறை காணப்படுவதன்காரணமாக தனியார் பஸ்களின் உரிமையாளர்கள், டிப்பர் சாரதிகள் உட்பட பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் கையிருப்பானது மிகவும் குறைவான நிலையில் காணப்படுவதுடன் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதன் காரணமாக டிப்பர் வாகனங்கள் மற்றும் மீன் ஏற்றுமதி வாகனங்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட நேரமாக வரிசையில் நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

டீசல் இன்மையால் தூர இடங்களுக்கு செல்லும் தனியார் பஸ்கள், சாரதிகள் பாரிய சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். அதே நேரம் பல இடங்களில் டீசல் பதுக்கல் இடம்பெறுவதுடன் தொடர்ச்சியாக டீசல் பற்றாக்குறை நிலவும் என்பதால் வாகன உரிமையாளர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெரல்களுடனும் கேன்களுடனும் போத்தல்களுடனும் டீசலுக்காக காத்துக்கொண்டிருக்கின்றனர்.

# யாழில் காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல்





(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு திணைக்களங்களின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளில் மக்களின் வாழ்வாதார தேவைக்குரிய காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும், இத்திணைக்களங்களால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளினால் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும் ஆராயும் சிறப்பு கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள், உரிய திணைக்களங்களின் உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒருங்கிணைப்புக்குழு நடவடிக்கை விரிவுபடுத்தப்பட வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.

(வவுனியா நிருபர்)

ஒருங்கிணைப்புக் குழு சார்பாக பிரதமர் எல்லா மாவட்டங்களுக்கும் ஒவ்வொருவரை நியமிக்க வேண்டும். பிரதமரது நடவடிக்கை எல்லா மாவட்டங்களிலும் நடைபெற வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நாவால் தான் எங்களது இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வாய்ப்புள்ளது. புது அரசியலமைப்பு உருவாக்கத்தின்போது எல்லா இனங்களும் சமமாக கருதப்பட வேண்டும் என்ற ஐ.நாவின் தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். இலங்கை அரசு தட்டிக் கழித்து வருவதால் தான் ஐ.நா. முக்கியமான தீர்மானத்தை சொல்லியிருக்கிறது. இலங்கை அரசு ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்றால் நாங்கள் எல்லோரும் சோந்து ஐ.நா. முன் இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்த வேண்டிவரும். மேலும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு சார்பாக பிரதமரால் கண்காணிப்பை மேற்கொள்ள ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் எல்லா மாவட்டங்களிலும் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். அப்போதுதான் செய்யப்படுகின்ற வேலைகள் ஒழுங்காக நடைபெறும் என்றார்.



# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ். நிருபர்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 06 இந்திய மீனவர்களின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இவர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வரை சிறையில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி அதிகாலை காரைநகர் கோவளம் கடற்பரப்பில் தமிழ்நாடு நாகப்பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் நாட்டுப்படகில் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 06 மீனவர்களையும் கைதுசெய்தனர். இவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது மார்ச் மாதம் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில், குறித்த வழக்கு கடந்த 04ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சந்தேக நபர்கள் மன்றில் ஆஜர்படுத்தப்படாத நிலையில் மீனவர்கள் சார்பில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரக அதிகாரி ஒருவர் மன்றில் பிரசன்னமாகியிருந்தார். இதன்போது கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளால் குறித்த மீனவர்களிடம் கொரோனா தொற்று அச்சம் காரணமாக வாக்குமூலம் பெறப்படவில்லை எனவும் சந்தேகநபர்களிடம் வாக்குமூலம் பெற அனுமதி வழங்குமாறும், அதுவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவானிடம் தமது விண்ணப்பத்தை கோரியிருந்தனர். இதனையடுத்து குறித்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட நீதவான், மீனவர்களிடம் வாக்குமூலம் பெற அனுமதியளித்ததுடன், அவர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும், அன்றைய தினமே அவர்களை மன்றில் ஆஜர்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

# திரைப்படக்குழுவின் நன்றி கூறும் நிகழ்வு



(யாழ். நிருபர்)

'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' திரைப்படத்தில் பணியாற்றியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் படக்குழுவினரின் நன்றி கூறும் நிகழ்வும் கடந்த புதன்கிழமை இரவு யாழ். திவ்யமஹால் மண்டபத்தில் இடம்பெற்றது. படத்தில் பணியாற்றியவர்களுக்கான கௌரவிப்புகளும் பட உருவாக்கத்துக்கு உறுதுணையாக செயற்பட்டவர்கள், ஆதரவளித்தவர்களுக்கு நினைவு பரிசில்களும் வழங்கி நன்றியும் கூறப்பட்டது.

இறுதியில் ராஜ் சிவராஜ் இயக்கத்தில் கடந்த வருட வெளியான புத்திகெட்ட மனிதர் எல்லாம் திரைப்படம் வசூல் ரீதியாகவும் விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த திரைப்படத்துக்கு 13ஆவது நோர்வே தமிழ்த் திரைப்பட விழாவில் 04 விருதுகள் கிடைத்துள்ளன. இத்திரைப்படத்துக்கு சிறந்த நடிகை (சிந்துஜா), சிறந்த ஒளிப்பதிவாளர் (தர்மலிங்கம்), சிறந்த இசையமைப்பாளர் (பூவன் மதீசன்), சிறந்த திரைக்கதை (சிவராஜ்) ஆகியோருக்கு விருதுகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

# டீசலுக்காகவும் சமையல் எரிவாயுவுக்காகவும் நீண்ட வரிசையில் காத்திருந்த புத்தளம் பிரதேச மக்கள்








(ரஸீன் ரஸ்மின்)

நாட்டில் கடந்த பல வாரங்களாக டீசலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில், தற்போது சமையல் எரிவாயுவுக்கும் மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால், பொதுமக்களும் வாகன சாரதிகளும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

புத்தளத்தில் சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் பெற்றோல் விநியோகம் செய்யப்படுகின்றன.

இலங்கையில் கொரோனா பரவல் ஏற்படத் தொடங்கியதற்கு பின்னர் பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றின் விலை அதிகரித்து வருகிறது.

சிலாபம் முதல் புத்தளம் வரையான பிரதான வீதி, பாலாவி - கற்பிட்டி பிரதான வீதி, புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதி, புத்தளம் - குருநாகல் பிரதான வீதிகளில் உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கடந்த ஐந்து நாட்களுக்குப் பிறகு டீசல் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், குறித்த வீதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக நீண்ட வரிசையில் வாகனங்கள் வீதியோரத்தில் தரித்து நின்றமையை அவதானிக்க முடிந்தது.

இன்னும், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கொண்டுவரப்பட்ட டீசல் கொண்டுவரப்பட்ட அன்றிரவே முடிவடைந்து விட்டதனால் வீதியில் காத்துக்கிடந்த வாகன சாரதிகளும், பொதுமக்களும் இறுதியில் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதனையும், இன்னும் சில வாகனங்கள் அவ்விடத்தில் தரித்து நிறுத்திவைக்கப்பட்டிருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை, சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனம் ஒன்றுக்கு 10,000 ரூபாவுக்கும், கொள்கலன் ஒன்றுக்கு 3000 ரூபாவுக்கும் டோக்கன் விநியோகம் செய்து டீசல் வழங்கப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

பல பில்லியன் நஷ்டத்தில் எரிபொருள் விநியோகம் செய்து வருவதால், எரிபொருள் விலையை அதிகரிக்க நிதி அமைச்சு அனுமதி வழங்க வேண்டும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

டீசலுக்+கும், பெற்றோலுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றமை விலை அதிகரிப்புக்கான அறிகுறிகளாக இருக்கலாம் என பொதுமக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், நாட்டுக்கு தேவையான எரிபொருள் கிடைக்கப்பெற்றுள்ளதாலும் நாடளாவிய ரீதியில் விநியோகம் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாலும் எதிர்வரும் நாட்களில் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நுகர்வோர், சாதாரண அளவை விட அதிகமாக எரிபொருளை நிரப்புவதும், கேன்கள் மற்றும் பீப்பாய்களில் எரிபொருளை சேமிப்பதும் தான் இந்த திடீர் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு காரணம் என சுட்டிக்காட்டினார்.

நாட்டுக்கு வந்துள்ள எரிபொருள் கப்பல்களிலிருந்து எரிபொருள் இறக்கும் பணி இடம்பெறுவதாகவும் தேவையான அளவு எரிபொருளை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

எனவே, நுகர்வோர்கள் பீதியடைய வேண்டாம் எனவும், வரிசையில் நிற்பதைத் தவிர்த்து எரிபொருளைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போதுமான அளவு டீசல், பெற்றோல், உலை எண்ணெய், ஜெட் எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றைக் கொண்ட கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை புத்தளம் மாவட்டத்தில் சமையல் எரிவாயு இல்லாமல் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். பேக்கரி உரிமையாளர்கள் சிற்றுண்டிசாலை, ஹோட்டல் உரிமையாளர்கள் எனவும் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்திலுள்ள சமையல் எரிவாயு விற்பனை நிலையங்களில் "சமையல் எரிவாயு இல்லை" என்கின்ற பதாதைகளே தொங்கவிடப்பட்டுள்ளதை காண முடிகின்றது.

இதனால், சமையல் எரிவாயு கொள்வனவு செய்வதற்காக முடிந்த சமையல் எரிவாயு சிலிண்டர்களை எடுத்து வரும் மக்கள் ஏமாற்றத்துடனேயே வீடுகளுக்கு திரும்பிச் செல்வதை நேற்று (06) அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, புத்தளம் பகுதிகளுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகம் செய்கின்ற மதுரங்குளி 10ஆம் கட்டை பகுதியில் உள்ள மொத்த விற்பனை நிலையத்தில் 2.3 கிலோ கிராம் மற்றும் 5.0 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மாத்திரம் விநியோகிக்கப்படுவதாகவும் நுகர்வோரான மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால், புத்தளம், கற்பிட்டி, கருவலகஸ்வெவ, முந்தல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சமையல் எரிவாயுவை பெறுவதற்காக முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றில் ஒவ்வொரு நாளும் நேரகாலத்துடன் வருகை தந்து வரிசையில் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

# செக் குடியரசுக்கான இலங்கையின் முழுமையான அதிகாரமுடைய தூதுவராக மஜிந்த ஜயசிங்க நியமனம்




செக் குடியரசுக்கான இலங்கையின் முழுமையான அதிகாரமுடைய மற்றும் அதிவிசேட தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள தூதுவர் மஜிந்த ஜயசிங்க, செக் குடியரசின் ஜனாதிபதியான மிலோஸ் ஜெமனிடம் தனது நற்சான்றிதழ் கடிதங்களை ப்ராக் மாளிகையில் வைத்து அண்மையில் கையளித்தார்.

ப்ராக் கோட்டையின் முதலாவது முற்றத்தில் நற்சான்றிதழ் வைபவம் ஆரம்பமானதுடன், அங்கு செக் குடியரசின் ஆயுதப்படையினரின் அணி வகுப்பு மரியாதையை தூதுவர் மஜிந்த ஜயசிங்க பார்வையிட்டார்.

அங்கோலா, மொசாம்பிக், நமீபியா, பனாமா, பராகுவே மற்றும் கினியா-பிசாவ் குடியரசு ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆறு தூதுவர்களும் அதே நாளில் செக் குடியரசின் ஜனாதிபதியிடம் நற்சான்றிதழ் கடிதங்களை வழங்கியுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மக்களின் வாழ்த்துகளை செக் குடியரசின் ஜனாதிபதி மற்றும் மக்களுக்கு தூதுவர் தெரிவித்தார்.

இதன்போது, இலங்கைத் தூதுவர் பாரம்பரியமாக நெருக்கமான, நட்புறவான, வலுவான மற்றும் இரு நாடுகளுக்கும் இடையே வலுவான மக்கள்-மக்கள் உறவுகள் மூலம் செயல்படுத்தப்பட்ட வளர்ந்து வரும் வர்த்தக, வர்த்தக முதலீடு மற்றும் சுற்றுலா வாய்ப்புகளை நினைவு கூர்ந்தார். புதிய இயல்புநிலையில் இரு நாடுகளினதும் அபிவிருத்தி மற்றும் விரிவாக்கத்தை மேம்படுத்தும் முதலீடு, சுற்றுலா, வர்த்தகம் மற்றும் வர்த்தக வாய்ப்புகளை தொடர்ந்தும் மேம்படுத்துவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது.

தூதுவர் மஜிந்த ஜயசிங்க, 1998இல் இலங்கை வெளிநாட்டுச் சேவையில் இணைந்து கொண்டதுடன், 2020ஆம் ஆண்டு ஒஸ்ரியாவில் நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் தூதுவராகப் பணியாற்றினார். தனது இராஜதந்திர வாழ்க்கையில், பெய்ஜிங், மக்கள் சீனக் குடியரசு ஆகிய இடங்களிலும், ஷாங்காயில் துணைத் தூதுவராகவும், சீன மக்கள் குடியரசு மற்றும் மலேஷியாவில் துணை உயர்ஸ்தானிகராகவும் பணியாற்றியுள்ளார்.

# தீப்பரவலினால் உணவுக் களஞ்சியம் சேதம்!




தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துடன் இணைந்த வகையில் இருந்த தனியார் உணவு களஞ்சியசாலை மற்றும் சில்லறைப் பொருட்களுக்கான மொத்த விற்பனை நிலையத்தில் நேற்று (06) அதிகாலை ஏற்பட்ட திடீர் தீப்பரவலினால் விற்பனை நிலையம் முழுமையாக சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மொத்த விற்பனை நிலையத்தில் ஏற்பட்ட தீயின் காரணமாக ஏனைய விற்பனை நிலையங்களினூடாக தீப் பரவலடையாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தும்புள்ளை மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவு மற்றும் பொலிஸார், பிரதேச மக்கள் இணைந்து தீப் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

# முஸ்லிம் சட்டத்தில் கை வைக்க வேண்டாம்!

## கொழும்பில் கவனயீர்ப்புப் போராட்டம்

(அஷ்ரப் ஏ சமத்)




நாட்டில் முஸ்லிம்களுக்கு மத ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் நீண்டகாலமாக இருந்து வரும் முஸ்லிம் சட்டத்தில் கை வைக்க வேண்டாமென தெரிவித்து அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் இணைந்து நேற்று முன்தினம் (05) கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுத்திருந்தனர்.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெற்று வரும் நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு தமது குரல் சென்றடையும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறி இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அசாத்சாலி, பைசர் முஸ்தபா உள்ளிட்ட அரசியல்வாதிகளும் கலந்து கொண்டனர். முழு இலங்கையிலும் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் விஸ்தரிக்கப்படும் எனவும், சகல முஸ்லிம் நாடுகளின் தூதுவர்களுக்கும் இந்த விடயம் பற்றி தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினார்கள்.

# எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து சிலாபத்தில் தீப்பந்தப் போராட்டம்



(ஜூட் சமந்த)

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்தினம் (05) இரவு சிலாபம் நகரில் இடம்பெற்றது. தேசிய ஐக்கிய சக்தி கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் சிலாபம் நகரைச் சேர்ந்த முச்சக்கரவண்டி சாரதிகளும் இணைந்து கொண்டிருந்தனர்.

தீப் பந்தங்களை ஏந்திய வண்ணம் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தின்பின்னர், ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலாபம் நகரைச் சுற்றி வந்ததையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது.

புத்தளம் மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகர, சிலாபம் நகரசபை தலைவர் துஷான் அபேசேகர ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.



**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் மொழி மூல பிரிவுகளின் ஆலோசகருக்கான நியமனக் கடிதத்தை, கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவிடமிருந்து புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.**





மாத்தளை மாநகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால், எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக வாகனங்கள் வரிசையில் இருந்ததை நேற்று (06) அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (படங்கள்: மாத்தளை நிருபர்)

# வலுசக்தி - சுற்றுலாத் துறையை மேம்படுத்த அமெரிக்கா உதவி

## பிரதமருடனான சந்திப்பின்போது தூதுவர் ஜுலி சங் உறுதி





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவர் ஜுலி ஜே.சங் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று அண்மையில் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜுலி ஜே.சங், பிரதமரை சந்தித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இலங்கையுடன் காணப்படும் அரசியல், சமூக மற்றும் பொருளாதார உறவினை மேலும் பலப்படுத்தி, அந்த உறவை மேம்படுத்துவதற்கு தான் முயற்சிப்பதாக அமெரிக்க தூதுவர் ஜுலி ஜே.சங் இதன்போது தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்று நிலைமைக்கு மத்தியில் இலங்கையின் பொருளாதாரத்தை வலுவாக பேணுவதற்கு உதவுவதாகத் தெரிவித்த அவர் இந்நாட்டின் வலுசக்தி மற்றும் சுற்றுலாத் துறை ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு உதவுவதாகவும் நம்பிக்கை வெளியிட்டார்.

அமெரிக்காவிற்கும், இலங்கைக்குமிடையே காணப்படும் உறவை அவ்வாறே தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, புதிய பதவியில் வெற்றிகரமாக பணியாற்றுவதற்கு ஜுலி ஜே.சங் இற்கு வாழ்த்துகளையும் தெரிவித்தார்.







மறவன்புலவு ஸ்ரீ ஐயப்ப தேவஸ்தானத்தில் நேற்று முன்தினம் (05) சிவலிங்கம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

(படங்கள் - சாவகச்சேரி நிருபர்)

## ஐஸ் போதைப்பொருளுடன் நபரொருவர் கைது

முல்லேரியா பிரதேசத்தில் 33 இலட்சம் ரூபாவுக்கும் அதிகபெறுமதியுடைய ஐஸ் போதைப் பொருளை விற்பனை செய்துகொண்டிருந்த நபரொருவர் விசேட அதிரடிப்படை அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, 435/14, ஹம்புட்டான ஒழுங்கை, முல்லேரியா என்ற முகவரியில் இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது 300 கிராம் ஐஸ் போதைப் பொருள், இலத்திரனியல் தராசு மற்றும் கைபேசியுடன் போதைப்பொருள் வியாபாரத்தால் உழைக்கப்பட்டதாக கருதப்படும்.

ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து 500 ரூபா, வெளிநாட்டில் பயன்படுத்தப்படும் 104 நாணயத்தாள்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

25 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர் மேலதிக விசாரணைகளுக்காக முல்லேரியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# ஹெட்டிமுல்லை புட்சல் விளையாட்டரங்கு திறப்பு விழாவை முன்னிட்டு சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி




## மஹகொட லிட்டில் இங்கிலாந்து அணிக்கு வெற்றி













(பீ.எம். முக்தார்)

பேருவளை ஹெட்டிமுல்லையில் அமைக்கப்பட்டுள்ள புட்சல் விளையாட்டரங்கு திறப்பு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேர்கோ சிடி வெற்றிக்கிண்ணத்திற்காக சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியொன்று நேற்று முன்தினம் (05) நடைபெற்றது.

பேருவளை மஹகொட லிட்டில் இங்கிலாந்து உதைப்பந்தாட்ட அணியும், பாணந்துறை தொட்டவத்தை யங் தொடவத்தை உதைப்பந்தாட்ட அணியும் மோதியபோது இரு அணிகளும் சமநிலையில் கோல்களை பெற்றுக் கொண்டதால் இறுதியில் பெனல்டி முறை கொண்டுவரப்பட்டது.

இதன்போது பேருவளை மஹகொட லிட்டில் இங்கிலாந்து அணி 1 – 0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது. அந்த அணியின் சார்பல் முஹம்மத் அன்சத் கோல் ஒன்றை பெற்றுக்கொடுத்தார். லிட்டில் இங்கிலாந்து அணிக்கு முஹம்மத் ரிப்தியும், யங் தொடவத்தை முஹம்மத் ஆசிக்கும் கெப்டன்களாக தலைமை வகித்து தமது அணியை வழிநடத்தினர். இப்போட்டிக்கு எம்.என்.எம் ரிம்ஸான் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். புட்சல் உரிமையாளர் பாஹிம் தாலிப் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில், இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, பிரதம அதிதியாகவும், பேருவளை நகர பிதா மஸாஹிம் முஹம்மட் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

பேருவளை பிரதேச சபை உறுப்பினர் களான பைஸான் நைஸர், ஹஸீப் மரிக்கார், தர்கா நகர் இஸ்லாமிய நலன்புரிச் சங்கத் தலைவர் ஏ.பீ.எம்.ஸுஹைர் ஹாஜியார் உட்பட பல பிரமுகர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர். போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு பாஹிம் தாலிபின் புதல்வர் மின்ஹாஜ் பாஹிம் வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார்.

## குற்றம் தவிர்

Police Roundup

### போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

#### கண்டி

கன்னொருவ உப தபால் காரியாலயத்துக்கு அருகில் கண்டி பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 125 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டு பேராதனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பிலிமத்தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முன்தினம் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருந்த நிலையில், அவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பில் பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

#### எம்பிலிப்பிட்டிய

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதிய நகர பிரதேசத்தில் எம்பிலிப்பிட்டிய குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 20 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டு, எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### துப்பாக்கிகளுடன் சந்தேக நபர்கள் கைது

#### வெலிகேபொல

வெலிகேபொல பொலிஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்பொத்தாவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெலிகேபொல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். வெலிகேபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

#### லக்கல

லக்கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துன்கலதெனிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் லக்கல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். துன்கலதெனிய பிரதேசத்தைச் சேரந்த 22 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். லக்கல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## மொழிக் கொள்கை தொடர்பில் விசேட கலந்துரையாடல்

(ரஸீன் ரஸ்மின)



புத்தளத்தில் 'மொழியே எங்கள் உறவு, மொழியும் அடிப்படைஉரிமையே" என்னும் தொனிப்பொருளில் பங்குதாரர் களுடனான விசேட கலந்துரையாடலொன்று அண்மையில் புத்தளம் கே.ஏ.பி. ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்றது.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் ஏற்பாட்டில் இந்நிகழ்வு இடம் பெற்றது. விழுது அமைப்பின் கருத்திட்ட அதிகாரி ஆர்.சுகுணாவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற அலி சப்ரி ரஹீம் கலந்துகொண்டார்.

அத்துடன், வண்ணாத்திவில்லு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஸ்ரீயாணி, புத்தளம் தள வைத்தியசாலை அபிவிருத்திக் குழு செயலாளரும், முன்னாள் புத்தளம் நகரசபை நிர்வாக உத்தியோகத்தருமான முஹம்மது சபீக், புத்தளம் பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் தொடர்பிலான அதிகாரி திருமதி ஜெயக்கொடி, இளைஞர் அமைப்பின் உறுப்பினர்கள் மதுவந்தி மற்றும் அதன் உறுப்பினர்கள் அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள், சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள், புத்தளம் மாவட்ட மகளிர் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, புத்தளம் மாவட்டத்தில் தமிழ் பேசும் பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்கள, வைத்தியசாலைகள், பொலிஸ் நிலையங்கள் உள்ளிட்ட மக்கள் அன்றாடத் தேவைக்கு நாடும் அரச நிறுவனங்களில் தமிழ் பேசும் அல்லது தமிழ் தெரிந்த அதிகாரிகளின் பற்றாக்குறை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இவ்வாறு தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையால் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளும், அதனை நிவர்த்திக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் இங்கு விரிவாக ஆராயப்பட்டன.

அத்துடன், புத்தளம் மாவட்டத்தில் கற்பிட்டி, வண்ணாத்திவில்லு, முந்தல் மற்றும் புத்தளம் ஆகிய நான்கு பிரதேச செயலகங்களிலும் மொழிக் கொள்கை தொடர்பில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் மேற்படி கலந்துரையாடலில் பங்குதாரர் களுக்கும், அதிதிகளுக்கும் தெரியப்படுத் தப்பட்டன. புத்தளம் மாவட்டமானது இரு மொழி நிர்வாகப் பிரிவுகளினுள் அடங்குவதனால், எமக்கு பிறப்புச் சான்றிதழ் மற்றும் ஏனைய ஆவணங்கள் தமிழ் மொழியில் பதியப்படாமையால் தமிழ் மொழி மட்டும் பேசும் மக்களின் உரிமை மீறப்படுவதுடன், அரச மொழிக் கொள்கையும் இங்கு மீறப்படுகின்ற ஒரு செயற்பாடாகவே கருதப்படுகிறது.

மேலும், பிறப்பு சான்றிதழானது சிங்கள மொழியில் மட்டும் பதியப்படுவதனால் தமிழ் பேசும் மக்களின் பெயர்கள் பிழையான முறையில் பதியப்படுகின்றன.

இதனால் அந்த மக்கள் எதிர்காலத்தில் உயர் கல்வி நிலையங்கள், வேலை வாய்ப்புகள் என்பனவற்றை நாடிச் செல்லும் போது பெயர் தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

மேலும், பொலிஸ் நிலையங்களில் தமிழ் பேசும் மக்கள் சேவைகளை பெற்றுக்கொள்ள செல்லும்போது, அங்கும் மொழி தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் படுகின்றனர். எனவே, சகல நிர்வாக நீதித்துறைசார் அம்சங்களும், தகவல்களும் மூன்று மொழிகளிலும் இடம்பெற வேண்டும் என்பதுடன், அச்சிடப்பட்ட விண்ணப்ப படிவங்களும் மும்மொழிகளிலும் விநியோகிக்கப்பட வேண்டும்.

அத்துடன், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கடிதங்களுக்கு அந்தந்த மொழியிலேயே பதில் அனுப்பப் பட வேண்டும் அல்லது ஒரு மொழி பெயர்ப்பு இணைக்கப்பட்டிருக்க வேண்டும். பொதுமக்களுக்கான சகல அறிவுறுத்தல்களும், பெயர்ப் பலகைகளும், ஏனைய அறிவிப்புக்களும் மும்மொழிகளிலேயே இடம்பெற வேண்டும்.

அத்தோடு, தமிழ், சிங்கள மொழி பெயர்ப்புக்கான வெற்றிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். எனினும், பதவிகள் இல்லாதவிடத்து ஒப்பந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு அமைப்பிலும் அரச மொழி அமுலாக்கத்திற்கு பொறுப்பாக ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன்

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திராய்க்கேணியில் சலவைத் தொழிலுக்கான நீர் நிறைந்த கேணியை அனுமதியின்றி மண்ணிட்டு மூடிய விவகாரம்

## அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் சமரச கலந்துரையாடல்

திராய்க்கேணி கேணியை மூடிய விவகாரம் தொடர்பாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் சமரச கலந்துரையாடல் ஒன்று பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

திராய்க்கேணி கிராமத்தின் பாரம்பரிய சலவைத்தொழிலுக்கான நீர்நிறைந்த கேணியை எவ்வித அனுமதியும் இல்லாமல் அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் அத்துமீறி மூடிவருவதாக பொதுநல அமைப்புகள் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரிடம் சமர்ப்பித்த முறைப்பாட்டுக்கமைவாக இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவினுள் வருகின்ற திராய்க்கேணி மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இனவன் முறையால் துவம்சம் செய்யப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர். பரம்பரை பரம்பரையாக இக்கேணியில் தமது சலவைத்தொழிலைச் செய்துவருகின்ற இந்நிலையில் அப்பகுதி தவிசாளர் இவ்விதம் அராஜகமாகச் செயற்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பொதுமக்கள் அக்கரைப்பற்றுப் பொலிஸாரிடம் கொடுத்த முறைப்பாட்டையடுத்து அன்றைய தினமே பொலிஸார் ஸ்தலத் துக்கு விரைந்து இம்மண்போட்டு மூடும் செயற்பாட்டை இடைநிறுத்தியதாக கிராமத்தலைவர் சி.கார்த்திகேசு தெரிவித்தார்.

அதேவேளை, திராய்க்கேணி பெரியதம்பிரான் கோயில் பரிபாலன சபையினர் இவ்அத்துமீறி மண்நிரப்பும் செயற்பாடு குறித்து அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தொடக்கம் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் வரை எழுத்துமூலம் முறைப்பாடு தெரிவித்திருந்தனர்.





அதன்படி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி.கார்த்திகேசு மற்றும் செயலாளர் கி.புவனேஸ்வரன், உபதலைவர் ஆகியோர் இணைத்துக்கொள்ளப்பட்டனர். அங்கு பிரதேச செயலாளர், தவிசாளர் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

பிரதேச சபைக்குரிய குறித்தகேணியை மக்களிடம் கேளாமல் அபிவிருத்தி செய்ய முயற்சித்தமை தொடர்பில் தவிசாளர் ஆரம்பத்தில் தனது மனவருத்தத்தை தெரிவித்துக் கொண்டார்.

தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெற்றது. அக்காணியில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கும் அருகிலுள்ள சலவைத்தொழிலாளர் கட்டடத்தை புனரமைத்துத்தரவும் இவ் ஏற்பாட்டை முன்னெடுத்ததாக தவிசாளர் அங்கு கூறினார்.

அதற்கு, திராய்க்கேணி பிரதிநிதிகள் திராய்க்கேணி பாலமுனை 06ஆம் பிரிவுக்குட்பட்ட ஸ்ரீ பெரியதம்பிரான் ஆலய பரிபாலன சபையினரின் கீழ் பராமரிக்கப்பட்டுவந்த சலவைத்தொழிலாளருக்குரிய குளத்தையும் சலவைத்தொட்டி உள்ள கட்டடத்தையும் மாரி காலங்களில் குளத்தில் வேலைசெய்து கோடைகாலத்தில் கட்டடத்தில் வேலைகளை பரம்பரை பரம்பரையாக செய்துகொண்டு வருகின்றனர்.

அங்கு கட்டடம் திருத்தப்படலாம். காணியில் புடவைகள் காயவைக்க களம் அமைக்கலாம். ஆனால் சிறுவர் பூங்கா தேவையில்லை. எனவே எதுவானாலும் நாம் மக்களிடம் கேட்டே சொல்வோம் என்றனர்.

பிரதேச செயலாளர் தரப்பில் அப்படியானால் 03 நாள் அவகாசம் தருகிறோம் மக்களிடம் அபிலாஷைகளைக் கேட்டறிந்து சொல்லுங்கள். அதன்பிறகு இங்கு கூட்டத்தில் அதுபற்றிக்கூறி தீர்மானமெடுப்போம் என்று முடிவெடுக்கப்பட்டது. அதன்படி திராய்க்கேணியில் மக்கள் கருத்துகளை பெறவிருப்பதாக தலைவர் சி.கார்த்திகேசு தெரிவித்தார்.

# மருதமுனையில் வெடித்து சிதறிய கேஸ் அடுப்பு



(பெரியநீலாவணை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் கேஸ் அடுப்பு ஒன்று வெடித்து சிதறிய சம்பவம் நேற்று முன்தினம் (05) பதிவாகியது.

மருதமுனை - பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இமாம் கஸ்ஸாலி வீதியில் வீடு ஒன்றில் சமையல் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, குறித்த வீட்டின் கேஸ் அடுப்பு வெடித்து சிதறியுள்ளது. எனினும் சமையலில் ஈடுபட்டிருந்த நபருக்கே அல்லது வேறு எவருக்கும் எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை.

சம்பவம் குறித்து வீட்டு உரிமையாளர் இவ்வாறு தனது கருத்துகளை வெளியிட்டார். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஓட்டமாவடி மஜ்மா நகரில் ஜனாஸா நல்லடக்கப் பணிகள் நிறைவு

## இதுவரை 3,634 உடல்கள் அடக்கம்






(மீராவோடை நிருபர்)

கொரோனா தொற்றினால் மரணித்த நபர்களை நல்லடக்கம் செய்துவந்த ஓட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடியில் நல்லடக்கப் பணிகள் நிறைவுக்கு வந்துள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் தெரிவித்தார்.

கொரோனா தொற்றினால் மரணிக்கும் நபர்களை மார்ச் 05 முதல் எந்தவொரு மையவாடிகளிலும் அடக்கலாம் எனும் சுகாதார அமைச்சின் சுற்றறிக்கையின்படி, ஓட்டமாவடி மஜ்மா நகரில் மேற்கொள்ளப்பட்டு வந்த நல்லடக்கப் பணிகள் நிறைவுக்கு வந்துள்ளன.

ஓட்டமாவடி - மஜ்மா நகர் மையவாடியில் 2021 மார்ச் 5 முதல் 2022 மார்ச் 5 வரையான ஒரு வருடத்தில் அங்கு அனைத்து இன மக்களினதும் 3,634 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் ஜனாஸா நல்லடக்கப் பணியை எமது பிரதேச சபை மேற்கொள்ள சகல விதங்களிலும் ஒத்துழைப்புகளை வழங்கிய அரசாங்கத்துக்கு நன்றிகளை தெரிவிக்கிறேன் என்றும் தவிசாளர் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலராக நியமிக்கப்பட்ட மன்சூருக்கு பாராட்டு விழா



(நிந்தவூர், மாளிகைக்காடு நிருபர்கள்)

கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளராக (நிர்வாகம்) நியமிக்கப்பட்டுள்ள சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஏ.மன்சூரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது போரத்தின் ஏற்பாட்டில் நேற்று (06) ஞாயிற்றுக்கிழமை அல்-ஹிலால் வித்தியாலய கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தருமான எம்.எம்.உதுமா லெவ்வை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்நிகழ்வுக்கு பொதுச் சேவை ஆணைக் குழுவின் உறுப்பினரும் முன்னாள் சாய்ந்தமருது பிரதேச செயலாளருமான ஏ.எல்.எம்.சலீம், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் சாய்ந்தமருது- மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ.ஹிபத்துல் கரீம், சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் செயலாளர் ஐ.எல்.எம்.மன்ஸூர், சாய்ந்தமருது அல்-அமானா நற்பணி மன்றத்தின் தலைவர் ஏ.எல்.ஏ.பரீட், சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் மற்றும் சாய்ந்தமருது உட்பட அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களின் உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், திணைக்கள உயர் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# திருமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பிரம்மோற்சவம்



(கந்தளாய் நிருபர்)

தெட்ஷணகைலாசம் என்னும் திருகோணமலையில் அருளாட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய பிரமோற்சவம் ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான பிலவ வருடம் மாசி மாதம் 24ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (08) காலை 8.00 மணிக்கு துவஜாரோகணம் எனும் கொடியேற்றம் நிகழத் திருவருள் கூடியுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஒன்பது நாட்கள் திருவிழா இடம்பெற்று 10ஆம் நாள் 17.03.2022 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு இரதோற்சவத் திருவிழாவும், 18.03.2022 வெள்ளிக்கிழமை உதயத்தில் தீர்த்தோற்சவமும் இடம்பெற்று இரவு துவஜ அவரோகணம் எனும் கொடியிறக்கம் இடம்பெறும்.

மறுநாள் 19.03.2022 அன்று சனிக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும். மஹோற்சவ காலங்களில் தினமும் காலை 5.30 மணிக்கு அபிஷேகம், காலை 7.00 மணிக்கு மூலஸ்தான பூஜை, 7.45க்கு தம்ப பூஜை, 8.30 மணிக்கு வசந்த மண்டப பூஜை, பிற்பகல் 2.30 மணிக்கு அபிஷேகம், 3.30 மணிக்கு மூலஸ்தான பூஜை, மாலை 4.15க்கு தம்ப பூஜை, மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை என்பன இடம்பெறும்.

# முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாடு; பிரதம அதிதியாக ஊடக அமைச்சர் டலஸ்

(பொலிவேரியன் நிருபர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 25ஆவது வருடாந்த மாநாடு எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு அல் - ஹிதாயா மகாவித்தியாலய பஹார்தீன் கேட்போர் கூடத்தில் காலை 09 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இரு அமர்வுகளாக நடைபெறும் இந்த மாநாட்டில், முதல் அமர்வில் பிரதம அதிதியாக ஊடக அமைச்சர் டலஸ் அழகப் பெரும கலந்து கொள்ளவுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், இந்திய லோக்சபா நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி கௌரவ அதிதியாகக் கலந்து சிறப்பிப்பதோடு, கலாநிதி எம்.சி.ரஸ்மின், முஸ்லிம்களும் ஊடக எதிர்காலமும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுகிறார்.

இரண்டாவது அமர்வில் வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெறும். புதிய உத்தியோகத்தர்கள் தெரிவும் யாப்புத் திருத்தம் பற்றிய செயற்குழு பிரேரணையும் இதன்போது ஆராயப்படும். சுகாதார வழிமுறைகளை முழுமையாகப் பேணி இம்மாநாடு நடத்தப்படவிருப்பதால் அங்கத்தவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இம்மாநாடு நடைபெறவிருப்பதாக போரத்தின் செயலாளர் என்.ஏ.எம்.ஸாதிக் சிஹான் தெரிவித்தார்.

சகல அங்கத்தவர்களுக்கும் மாநாடு சம்பந்தமாக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடிதம் கிடைக்காதவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயலாளரின் 0773112561 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# வாகரையில் காட்டு யானைகளால் பயன்தரு மரங்கள் துவம்சம்





(கல்குடா நிருபர்)

வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புனாணை கிழக்கு கிராம அதிகாரி பிரிவிலுள்ள குகணேசபுரம் பகுதிக்கு நேற்று (06) அதிகாலை காட்டு யானைகள் புகுந்து பெறுமதியான தென்னை மரங்கள், தோட்டப்பயிர்கள் என்பவற்றை சேதப்படுத்தியுள்ளன.

இப்பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதுடன், பெறுமதியான தென்னை, மா, பலா போன்ற மரங்களும் காய்கறிப் பயிர்கள் உட்பட மரவள்ளி தோட்டமும் சேதப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் அதிகமாக வளர்ந்த தென்னைகள் மற்றும் தோட்டப்பயிர்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன், சுற்றுவேலியும் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பிரதேசத்தில் வதியும் மக்கள் உயிர் அச்சுறுத்தலுடன் வாழ்ந்து வருவதுடன், பாரிய நஷ்டங்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இப்பிரதேசத்துக்குள் நுழையும் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த நிரந்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் தொடர்ச்சியாக இவ்வாறான அழிவுகளைத் தவிர்க்க முடியாத சூழ்நிலை காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இதுதொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நிரந்தரத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் யானை வேலி அமைத்து தருவதுடன், எங்களது உயிர்களையும், பயிர்களையும் பாதுகாக்க உதவ வேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பு அருவி பெண்கள் வலையமைப்பினால் மகளிர் தினத்தையொட்டி போட்டி நிகழ்ச்சிகள்







(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பினால் மகளிர் தினத்தையொட்டி போட்டி நிகழ்வுகள் நேற்று முன்தினம் (05) மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றது.

"பாரபட்சத்தை உடைத்தெறி - பெண் சமத்துவத்தை மதித்திடு" எனும் தொனிப்பொருளில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி குறித்த போட்டி நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சட்டத்தரணி திருமதி.மயூரி ஜனன் தலைமையில் குறித்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய கே.கருணாகரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்த நிகழ்வுக்கு விசேட அதிதியாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பிரதேசமட்ட அணிகள் எல்லே மற்றும் கயிறு இழுத்தல் போட்டிகளில் பங்கேற்பதற்காக கலந்துகொண்டிருந்ததுடன், விளையாட்டு நிகழ்வுகளில் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது மகளிர் தினத்தினை முன்னிட்டு அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான மயூரி ஜனன் அரசாங்க அதிபர் கே.கருணாகரனிடம் மகஜர் ஒன்றை கையளித்தார்.

# ஊடகவியலாளர் தாக்கப்பட்டமையை கண்டித்து மட்டக்களப்பில் போராட்டம்










**(மட்டக்களப்பு, கல்லடி, துறைநீலாவணை, மண்முனை நிருபர்கள்)**

மட்டக்களப்பில் ஊடகவியலாளர் ஒருவர் அண்மையில் தாக்கப்பட்டமையினை கண்டித்தும், ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறையினை கண்டித்தும் நேற்று முன்தினம் (05) காலை 10.00 மணியளவில் மட்டக்களப்பில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபி முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம், மட்டக்களப்பு ஊடகவியலாளர் தொழில் சங்கம் ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து இப்போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

வந்தாறுமூலை சந்தைப் பகுதியில் கடந்த மாதம் 26ஆம் திகதி செய்தி சேகரித்துக் கொண்டிருக்கும்போது ஊடகவியலாளர் தேவ பிரதீபன் மீது அரசியல்வாதியின் ஆதரவாளர்களுடன் வந்த நபர் ஒருவர் கடுமையான தாக்குதல் மேற்கொண்டார்.

இலங்கையில் தொடர்ச்சியாக ஊடகவியலாளர் தாக்கப்படுவதும் அச்சுறுத்தப்படுவதும் இடம்பெற்று வருகின்றது. இது நிறுத்தப்பட வேண்டும் என இந்தப் போராட்டத்தின்போது அரசாங்கத்திடம் அழுத்தம் தெரிவிக்கப்பட்டது.

"ஊடக சுதந்திரத்தை பறிக்காதே, ஊடகவியலாளரை அடக்காதே, வேண்டும் வேண்டும் சுதந்திரம் வேண்டும், அரசே ஊடகவியலாளருக்கு நீதி வழங்கு, ஊடகத்தை அடக்க நினைக்கும் அரசியல்வாதிக்கு துணை போகாதே" போன்ற பல கோசங்களை எழுப்பியவாறு இப் போராட்டத்தினை முன்னெடுத்தனர். இப்போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேந்திரன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான இரா. துரைரெத்தினம், பிரசன்னா இந்திரகுமார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

# தொற்றாநோய்க்கு எதிராக ஒன்றிணைவோம்; மட்டக்களப்பில் விழிப்புணர்வு நடவடிக்கை








**(மட்டக்களப்பு நிருபர்)**

"தொற்றா நோய்க்கு எதிராக ஒன்றிணைவோம்" எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வழிகாட்டலில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மாவட்ட தொற்றா நோய்ப் பிரிவு, அமிர்தகழி சித்தி விநாயகர் வித்தியாலயம், மாமாங்கேஸ்வரா வித்தியாலயம் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து தொற்றாநோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையினை நேற்று முன்தினம் (05) முதல் முன்னெடுத்திருந்தனர்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு முன்பாக ஆரம்பமாகிய துவிச்சக்கரவண்டி பவனி காந்தி பூங்காவை சென்றடைந்ததும் அங்கிருந்து மாணவர்கள் விழிப்புணர்வு பதாதைகளை ஏந்தியவாறு நடைபவனியாக சென்றதுடன், அதனைத் தொடர்ந்து துவிச்சக்கரவண்டி பவனியும் இடம்பெற்று இருதரப்பினரும் தேவநாயகம் மண்டபத்தை சென்றடைந்ததும் பிரதான அரங்க நிகழ்வுகள் தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இவ் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம்.தயாபரன், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதாரப் பிரதிப்பணிப்பாளர் என்.மயூரன், தொற்றாநோய்ப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எஸ். சிவநாதன், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி இளையதம்பி உதயகுமார், தொற்றுநோய்ப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வீ.குணராசசேகரம், தாய்சேய் நலப் பிரிவின் வைத்திய பொறுப்பதிகாரி எம்.அச்சுதன் உள்ளிட்ட மேலும் பலர் அதிதிகளாக கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது சுகாதாரத்துறைசார்ந்த உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு விழிப்புணர்வு செயற்பாட்டில் பங்கேற்றிருந்தனர்.

# காத்தான்குடி மத்திய கல்லூரியின் புதிய அதிபராக சத்தார் கடமைகளை பொறுப்பேற்பு



**(காத்தான்குடி நிருபர்)**

காத்தான்குடி மத்திய கல்லூரியின் புதிய அதிபராக எம்.சி.எம்.ஏ.சத்தார் B.Sc (B.Ad) PGDE பொறுப்பேற்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (04) பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் Dr SMMS உமர் மௌலானா SLEAS கலந்துகொண்டதுடன் சிறப்பு அதிதிகளாக உதவிக் கல்விப் பணிப்பாளர் AGM ஹகீம் SLEAS, காத்தான்குடி பிரதேச கல்விப் பணிப்பாளர் MMM.கலாவுதீன் SLPS ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கடந்த 04.12.2015 தொடக்கம் 04.03.2022 வரை அதிபராகக் கடமை புரிந்து பாடசாலையின் வளர்ச்சியில் முன்னின்று பங்காற்றிய அதிபர் அல்ஹாஜ் SH பிர்தௌஸின் சேவை நலனைப் பாராட்டி பாடசாலை முகாமைத்துவக் குழு, அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு, பழைய மாணவர் சங்கம் என்பவற்றினால் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் பாடசாலையின் வளர்ச்சியில் தொடர்ந்து பணியாற்ற அதிபர் எஸ்.எச்.பிர்தௌஸ் முன்வந்தமை அனைவரது பாராட்டுதல்களையும் பெற்று மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.

இதனைத் தொடர்ந்து அதிபர் காரியாலயத்தில் புதிய அதிபராக சத்தார் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். பதவியேற்பின் இறுதியில் பாடசாலைக்காகவும் அதன் அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை நலன்விரும்பிகள் என்பவருக்கான துஆப் பிரார்த்தனை நிகழ்வும் இடம்பெற்றது.

# ஜெனீவா கூட்டத்தொடர் இடம்பெறும்வேளை கொவிட் ஜனாஸா தொடர்பில் அரசாங்கத்தின் முடிவு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு

**(சம்மாந்துறை நிருபர்)**

அரசாங்கம் ஜெனீவா கூட்டத் தொடர் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் கொவிட் மூலம் மரணிக்கும் ஜனாஸாக்களை அந்தந்தப் பிரதேசத்தில் அடக்கலாம் என்ற முடிவை திடீரென்று அறிவித்தமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாக நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கடந்த வெள்ளிக்கிழமை (04) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



கொவிட்டால் இறந்த உடல்களை அந்தந்த பிரதேசத்தில் அடக்க அனுமதி தருமாறு ஆரம்பத்தில் கேட்டிருந்தோம். உலக சுகாதார அமைப்பு மூலமாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்மூலம் உடல்களை அடக்க முடியும் என்று நாங்கள் சொன்ன சந்தர்ப்பத்தில் உடல்கள் மீது அரசியல் சாயம் பூசி வாக்குத்தேடியவர்களே இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.

இந்த முடிவு ஏதோ ஒரு மாயையை ஏற்படுத்துவது போன்று மக்களால் பார்க்கப்படுகிறது. இத்த அரசாங்கம் மீண்டும் எதை செய்வதற்கு தயாராகிறது என்ற கேள்வியும் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# போதையில்லா மாணவர்களை உருவாக்கும் பயிற்சிப் பட்டறை

## கலந்துகொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிவைப்பு







**(நூருல் ஹுதா உமர், எம்.எஸ்.எம். ஸாஹிர், எம்.என்.எம்.அப்ராஸ்)**

போதையில்லா மாணவர்கள் உருவாக்கம் மற்றும் தலைமைத்துவ முகாமைத்துவ பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கௌரவிப்பும் சி.சி.ஏ.எஸ். கெம்பஸ் தவிசாளரும், அக்கரைப்பற்று கல்வி வலய ஆங்கிலப்பாட இணைப்பாளருமான செய்னுலாப்தீன் நஜ்முதீனின் தலைமையில் நேற்று முன்தினம் (05) சம்மாந்துறை சது/சது/ அல்-அர்ஸாத் தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள சம்மாந்துறை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் கடந்த மூன்று நாட்களாக எடுத்துக்கொண்ட பல்வேறு தலைப்புகளின் கீழான பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்களுக்கே இந்த சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இலங்கை ஜே.ஜே பௌண்டேசன் பணிப்பாளர் கலாநிதி ஐ.வை.எம். ஹனீப், அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் கொழும்பு மாவட்ட தலைவரும், ஸ்டார் ஜெம்ஸ் நிறுவன முதல்வர் அஹமட் சிப்லி, சம்மாந்துறை பொலிஸ் நிலைய சிறுகுற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எம்.எச்.எம்.ஹசீப், சது/சது/ அல்-அர்ஸாத் தேசிய பாடசாலை அதிபர், சி.சி.ஏ.எஸ். கெம்பஸ் பணிப்பாளர் சபையினர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். இதன்போது 113 மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன.



**நிந்தவூர் மர்ஹூம் அமீர் மேர்ஸா பொது நூலகத்துக்கு ஒரு தொகை நுண்ணறிவு (IQ) புத்தகங்கள் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம்.அஷ்ரப் தாஹிரிடம் சபையின் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் கையளிக்கப் பட்டது. (மாவடிப்பள்ளி நிருபர்)**

# ஹொரவப்பொத்தானையில் மின்சாரம் தாக்கி இளைஞர் பலி

**(அப்துல் சலாம் யாசீம்)**

**ஹொரவப்பொத்தானை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட மதவாச்சி சந்தியில் மின்சாரம் தாக்கியதில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

**இச்சம்பவம் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றுள்ளது.**

**இவ்வாறு உயிரிழந்தவர் ஹொரவப்பொத்தானை - கெவல் 20 மதவாச்சி சந்தியில் வசித்துவரும் ரத்னாயக்க துலார சதுல (26 வயது) எனவும் தெரியவருகின்றது.**

**வீட்டில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர் இரைக்கும் இயந்திரம் பழுதடைந்து காணப்பட்டமையால் அதனை பார்வையிட்டுக்கொண்டிருந்தபோது, அதில் பொருத்தப்பட்டிருந்த மின்சாரம் தாக்கியதாக வும் இதனையடுத்து குறித்த இடத்தில் தூக்கிவீசப்பட்ட நிலையில், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளதாகவும் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.**

**உயிரிழந்தவரின் சடலம் தற்போது ஹொரவப்பொத்தானை பிரதேச வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளது.**

**குறித்த சடலத்தை பார்வையிட்டு பிரேத பரிசோதனை முடிவுற்ற பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஹொரவப்பொத்தானை பொலிஸார் தெரிவித்தனர்.**

# சமூக அபிவிருத்தி பணிகளில் ஈடுபடும் இளம் பெண்களை ஊக்குவித்தல்- பங்கேற்பை அதிகரித்தல்

## இளம் தலைவர்களுக்கான ஒருநாள் செயலமர்வு





**(நூருள் ஹுதா உமர், பாறூக் சிஹான், எம்.என்.எம்.அப்ராஸ்)**

"சமூக அபிவிருத்தி பணிகளில் ஈடுபடும் இளம் பெண்களை ஊக்குவித்தலும், பங்கேற்பை அதிகரித்தலும்" எனும் தலைப்பில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டில் இளம் பெண் தலைவர்கள் இணைந்து ஸ்டார் விங்ஸ் அமைப்பின் தலைவி எம்.எஸ். றக்ஸானா பானுவின் தலைமையில் ஒருநாள் செயலமர்வொன்று நற்பிட்டிமுனை தனியார் மண்டபத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை (05) இடம்பெற்றது.

SEARCH FOR COMMON GROUND (சேர்ச் போ கொம்மன் கிரவுண்ட்) அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வளவாளர்களாக சமாதானம் மற்றும் சமூகப்பணி நிறுவன தேசிய இணைப்பாளர் த.தயாபரன், சேர்ச் போ கொம்மன் கிரவுண்ட் கண்காணித்தல் மற்றும் கணக்கீட்டுக்கான பணிப்பாளர் எம்.ஐ.எம்.சதாத் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சிகளை முன்னெடுத்தனர்.

இந்நிகழ்வில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் இணைப்பாளர் யூ. எல்.ஹபீலா, சமூக வசதிப்படுத்துனர் ஆர்.அனுஸ்கா, வழிகாட்டிகளான கல்முனை மாநகர சபை உறுப்பினர், கே.விஜயலக்ஷ்மி, எம்.எம்.ஜே.பர்வின், கல்முனை அஸ்ஸுஹரா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா, பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.ஜெனித்தா அடங்களாக இளம்பெண் தலைவிகளான ஜே.எப்.ஜெஸ்னா, டி.லுக்சிகா, எம்.எஸ்.றக்ஸானா பானு, எஸ்.துவாரகா, ஏ.எச். பசீலா, ஏ.எச்.சசீமா, ஆர்.றொஸானா, ஜே.சிந்துஜா, ஏ.ஆர்.எப். நஜீபா, எல்.கே.சஜானா, ஜே.எப்.ஜெஸ்னி எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# மான் இறைச்சியை எடுத்துச்சென்ற இருவர் கைது



**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பில் சொகுசு காரில் மான் இறைச்சியை கொண்டுசென்ற இருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், மான் இறைச்சியையும் மீட்டுள்ளனர்.

மட்டக்களப்பு ஏறாவூரில் இருந்து காத்தான்குடிக்கு கார் ஒன்றில் மான் இறைச்சியை எடுத்துச் சென்ற கொழும்பு மருதானையைச் சேர்ந்த இருவரையே மட்டக்களப்பு நகர் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (05) பகல் கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து 06 கிலோ மான் இறைச்சியை மீட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து, நேற்று முன்தினம் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் மற்றும் புலனாய்வு பிரிவினர் பொலிஸ் நிலையத்துக்கு முன்னாலுள்ள வீதி சுற்றுவட்டத்துக்கு அருகில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

# ராஜபக்ஷவினரை துரத்துவதற்கான பிரசாரக் கூட்டங்களை மஹிந்தவின் வீட்டுப்பக்கத்தில் இருந்து ஆரம்பித்துள்ளோம்

**சாய்ந்தமருதில் அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு**

(சாய்ந்தமருது நிருபர்)

ராஜபக்ஷவினரை ஆட்சியில் இருந்து துரத்துவதற்கான பிரசாரக் கூட்டங்களை வெதமுலனையில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷவின் வீட்டுக்கு பக்கத்தில் இருந்து ஆரம்பித்துள்ளோம் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

எமது நாட்டில் ஆட்சி அதிகாரத்தை பிடிப்பதற்கும் அதனை தக்கவைத்துக் கொள்வதற்கும் இனவாதம், மதவாதம் தூண்டிவிடப்படுகின்றன. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் கூட ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டதா என்று சந்தேகிக்கின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

'சீரழிந்த நாட்டை கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (04) நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மக்கள் மன்றம் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய மக்கள் சக்தியின் கல்முனைத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஏ.ஆதம்பாவா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், நாட்டின் சமகால அரசியல் குறித்து பேசிய அநுரகுமார திசாநாயக்க மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் சுதந்திரத்துக்குப் பின்னர் மாறி மாறி ஆட்சிக்கு வந்தோர் நாட்டை சூறையாடுவதிலேயே குறியாக இருந்து வந்துள்ளனர். நாட்டின் சொத்துகளையும் மக்களின் வரிப்பணத்தையும் திருடுவதில் அவர்கள் முனைப்புக் காட்டுகின்றனர். அதனால் ஆட்சியாளர்களும் அமைச்சர்களும் பணக்காரர்களாக மாறி விடுகின்றனர். மக்கள் ஏழைகளாக மாற்றப்படுகின்றனர். இதனாலேயே நாட்டின் பொருளாதாரம் சீரழிக்கப்பட்டிருக்கிறது.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஊழல், மோசடிகளை இல்லாதொழித்து, அவர்களை தண்டிப்பதற்காக 2015ஆம் ஆண்டு ராஜபக்ஷ கும்பலை வீட்டுக்கு அனுப்பி விட்டு, மைத்ரி, ரணில் ஆட்சியை ஏற்படுத்தினோம். அவர்கள் ராஜபக்ஷாக்களை தண்டிக்கவில்லை. ஏனென்றால் அவர்களது ஆட்சியிலும் ஊழல், மோசடிகளே அரங்கேறின.

மைத்ரி, ரணில் ஆட்சியை வீழ்த்தி, மீண்டும் ராஜபக்ஷாக்கள் ஆட்சியைப் பிடித்தனர். நல்லாட்சியில் ஊழல் செய்தோரை சிறையில் அடைப்போம் என்றார்கள். ஆனால் எவரும் தண்டிக்கப்படவில்லை. ஏன் என்றால் இரு தரப்பினரும் ஊழல், மோசடிக்காரர்களே. அதனால் எவரும் எவரையும் தண்டிக்க மாட்டார்கள். திருடாத ஒருவனாலேயே திருடுகின்றவனைத் தண்டிக்க முடியும். அவ்வாறாயின் ஊழல், மோசடி இல்லாத தூய்மையான அரசியல் செய்கின்ற எமது தேசிய மக்கள் சக்தியினால் மாத்திரமே திருடர்களை தண்டித்து, ஊழல், மோசடி இல்லாத தூய ஆட்சியை கொண்டுசெல்ல முடியும்.

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவும் அதனைத் தக்க வைத்துக்கொள்வதற்காகவும் ராஜபக்ஷவினர் அப்பாவி மக்கள் மத்தியில் இனவாதத்தையும் மதவாதத்தையும் விதைத்து, தூண்டிவிட்டு, தமது ஆசையை தீர்த்துக்கொள்கின்றனர். அளுத்கம, திகன பகுதிகளில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டது எதற்காக? பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டது எதற்காக? அபாயா பிரச்சினை எதற்காக?

வெவ்வேறு மத, கலாசாரங்களை பின்பற்றுகின்ற போதிலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகின்றோம். ஆட்சியாளர்களே முரண்பாடுகளையும் பிளவுகளையும் ஏற்படுத்தி மக்களை இன, மத ரீதியாக பிரிக்க முற்படுகின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்ற தேர்தலிலும் தெற்கில் இனவாதத்தைத் தூண்டியே ராஜபக்ஷவினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர். தெற்கில் சிங்கள இனவாதம் தலைவிரித்தாடியபோது கிழக்கில் அதற்கு எதிராக முஸ்லிம் கட்சிகள் உங்களிடம் வாக்குகள் கேட்டனர். நீங்கள் சிங்கள இனவாதத்துக்கு எதிராக வாக்களித்தீர்கள், ஆனால் அதன் மூலம் தெரிவான முஸ்லிம் எம்.பி.க்கள் என்ன செய்தார்கள்?

அவர்கள் சிங்கள இனவாதக் கும்பலுடன் கைகோர்த்துக் கொண்டனர். அவர்கள் இருபதாவது திருத்தத்தை ஆதரித்து, சிங்கள இனவாதத்தை மேலும் பலப்படுத்தியுள்ளனர். அதன் மூலம் அவர்கள் ஜனாஸாக்களை எரிப்பதற்கு துணை போனார்கள். இன்னும் அரங்கேறுகின்ற அனைத்து



இனவாத செயற்பாடுகளுக்கும் அவர்கள் முட்டுக்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். நாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று இப்போது நீங்கள் கைசேதப்படுகின்றீர்கள்.

20ஆவது திருத்தத்தை ஆதரிக்க ரிஷாட் பதியுதீனும் தயாராக இருந்தார். நீங்கள் ஆதரித்தால் எங்களுக்கு பிரச்சினை வரும், அதனால் உங்கள் ஆதரவு வேண்டாம், உங்கள் கட்சி எம்.பிக்கள் மட்டும் ஆதரவாக வாக்களிக்கட்டும் என்று பெசில் ராஜபக்ஷ கூறி விட்டார். ஹக்கீமும் ஆதரிக்க முன்வந்தார், வேண்டாம் நீங்கள் எதிர்த்து வாக்களியுங்கள். உங்கள் கட்சி எம்.பிக்கள் மட்டும் ஆதரவாக வாக்களிப்பார்கள் என்று பெசில் கூறியிருந்தார். அதனால் அந்த இரண்டு கட்சிகளினதும் எம்.பி.க்கள் 20ஐ ஆதரிக்க இவர்கள் இருவரும் எதிர்த்து வாக்களித்தனர். இந்த டீல் பற்றி அறிந்து கொண்ட பின்னர் வாக்களித்த மக்களாகிய நீங்கள் இப்போது கவலைப்படுகிறீர்கள்.

உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத் தாக்குதல் யாரால் எதற்காக மேற்கொள்ளப்பட்டது? ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று மெல்கம் ரஞ்சித் ஆண்டகை சந்தேகம் வெளியிட்டிருக்கிறார். நாங்களும் அவ்வாறே சந்தேகிக்கிறோம். இத்தாக்குதலுக்கு பின்னர் என்ன நடந்தது? முஸ்லிம்கள் மீது இனவாத தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. புலிகள் முற்றாக அழித்தொழிக்கப்பட்ட பின்னர் கூட புலி வருது புலி வருது என்று கூறிய ராஜபக்ஷவினர் கடந்த தேர்தலில் என்ன முஸ்லிம் புலி என்ற பிரசாரத்தையே முன்னெடுத்திருந்தனர். அதனையே தமது தேர்தலுக்கான மூலதனமாக பயன்படுத்தியிருந்தனர்.

கருத்தடை கொத்து, கருத்தடை வைத்தியர், கருத்தடை ஆடை என்றெல்லாம் இனவாத பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. இப்போதும் முஸ்லிம்களின் மத, கலாசார விடயங்களில் கை வைக்கப்படுகின்றன. முஸ்லிம்களுக்கு எதிராக அப்பாவி சிங்கள மக்கள் மத்தியில் இனவாதம் தூண்டிவிடப்படுகின்றன.

இனவாதத்தையும் மதவாதத்தையும் திருட்டையும் ஒழித்தால் மாத்திரமே சீரழிந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும். அதனை யாரால் செய்ய முடியும்? இனவாதம், மதவாதம், திருட்டு இல்லாத தேசிய மக்கள் சக்தியினால் மாத்திரமே அதனைச் செய்ய முடியும். அதனால் போலி அரசியலில் இருந்து விடுபட்டு எம்மோடு கைகோர்க்க கிழக்கு மக்கள் முன்வர வேண்டும் - என்றார்.

## சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் டிஜிட்டல் சுகாதாரத் திட்டம் ஆரம்பித்துவைப்பு



(மாவடிப்பள்ளி நிருபர்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் டிஜிட்டல் சுகாதாரத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இவ்வைத்தியசாலையில் சுகாதார சேவைகள் மேம்படுத்தப்படவுள்ளதோடு கால வீண்விரயம் மற்றும் காகிதங்கள் வீண்விரயம் என்பனவும் குறைக்கப்படவுள்ளன. இத்திட்டத்தினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அண்மையில் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் அசாத் எம்.ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சின் சுகாதார தகவல் தொழில்நுட்பப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பாலித கருணாபெரும, இக்டா நிறுவனத்தின் தவிசாளர் ஓசத சேனநாயக மற்றும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.ஆர்.எம்.தௌபீக் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## கிழக்குப் பல்கலையின் 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நிகழ்வு

(மட்டக்களப்பு நிருபர்)

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 12.03.2022 மற்றும் 13.03.2022 ஆகிய திகதிகளில் பல்கலைக்கழக நல்லையா ஞாபகார்த்த கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ள இப்பட்டமளிப்பு விழாவானது பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி வே.விவேகானந்தராஜா தலைமையில் நடைபெறுவதுடன், இவ்விழாவின் 1ஆம் நாள் அமர்வுகளில் விசேட அதிதியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பீ.உடவத்த, 2ஆம் நாள் அமர்வுகளில் விசேட அதிதியாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே.கபில, சீ.கே.பெரேரா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன், விசேட உரையினையும் ஆற்றவுள்ளனர்.

இவ்விழாவில் காலஞ்சென்ற முன்னாள் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத்துக்கு கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டமும், சீனித்தம்பி கோபாலசிங்கத்துக்கு கௌரவ இலக்கிய முதுமாணிப் பட்டமும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

அத்துடன் முதலாவது நாள் இடம்பெறவுள்ள பட்டமளிப்பு நிகழ்வுகள் மூன்று அமர்வுகளாக இடம்பெறவுள்ளதுடன், இதன்போது 883 மாணவர்களும், இரண்டாம் நாள் இடம்பெறவுள்ள மூன்று அமர்வுகளின்போது 1075 மாணவர்களுமாக முதுமாணி, இளமாணிப் பரீட்சைகளில் சித்திபெற்ற 1,958 மாணவர்கள் தங்களுக்கான பட்டங்களை இதன்போது பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## அரசின் 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பனங்காட்டு பாலத்தினூடாக குடிநீர் இணைப்பு



(வி.சுகிர்தகுமார்)

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பனங்காட்டுப் பாலத்தினூடாக குடிநீர் இணைப்பைக் கொண்டு செல்லும் வேலைத்திட்டம் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் நிதி ஒதுக்கீட்டின்கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்துக்காக அரசினால் 100 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், முதற்கட்டமாக 15 கிலோமீற்றர் தூரத்துக்கு குடிநீர் இணைப்பைக் கொண்டு செல்லும் குழாய் பதிக்கும் வேலைகள் நேற்று முன்தினம் வைபவரீதியாக ஆரம்பமானது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அம்பாறை மாவட்ட பிரதம பொறியியலாளர் ரி.சிவராஜ் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன், நீர்வழங்கல் அமைச்சரின் ஆலையடிவேம்பு பிரதேச இணைப்பாளர் பியசேன, கிருத்திகன் மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் யு.கே.முசாதிக், இயக்குதல் மற்றும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பராமரிப்பு பொறியியலாளர் பி.மயூரன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட பொறியியலாளர் ந.லோகிஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

குறித்த நீர்வழங்கல் வேலைத்திட்டத்தினூடாக முதற்கட்டமாக பனங்காடு சின்னப்பனங்காடு மகா சக்திபுரம் உள்ளிட்ட 1200இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடையவுள்ளன.

இதேநேரம், கடந்த பல வருடகாலமாக ஆட்சியில் இருந்த பலரிடமும் குறித்த மக்கள் குடிநீரைப்பெற்றுத்தருமாறு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். இந்நிலையில், பல்வேறு அரசியல்வாதிகளும் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கியிருந்தனர்.

ஆயினும், தற்போது ஆட்சியில் உள்ள பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் மூலமே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய அரசுக்கும் அமைச்சருக்கும் அரசியல் தலைவர்கள், அமைச்சின் செயலாளர் மற்றும் இணைப்பாளர்களுக்கும் இதனை முன்னின்று செயற்படுத்தும் அரச உயர் அதிகாரிகளுக்கும் மக்கள் நன்றி தெரிவித்தனர்.

## கரவெட்டி சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட விவசாய உற்பத்திகள் அறுவடை



(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கரவெட்டி சமுர்த்தி வங்கி வளாகத்தில் சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட விவசாய உற்பத்திகள் அறுவடை செய்யப்பட்டன.

வங்கி முகாமையாளர் பிரியதர்சினி அசோக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மண்முனை மேற்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சுபா சதாரன் கலந்துகொண்டு விளைபொருட்களை அறுவடைசெய்து நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

அரசாங்கத்தின் சௌபாக்கியா வீட்டுத் திட்டத்துடன் இணைந்ததாக மேற்கொள்ளப்படும் இத்தோட்டமானது, கரவெட்டி சமுர்த்தி வங்கி முகாமையாளரின் ஆலோசனைக்கமைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்தோட்டத்துக்கு பயிர்ச்செய்கை தொடர்பான ஆலோசனைகளை கரவெட்டி பிரிவின் விவசாய திணைக்களத்தின் விவசாய போதனாசிரியர் வழங்குகின்றார்.

இரசாயன வளமாக்கிகள் பயன்படுத்தாது வங்கி ஊழியர்கள், கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட சேதனப் பசளையினை மாத்திரம் பயன்படுத்தி மேற்படி விவசாயத் தோட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் கரவெட்டி பிரிவின் போதனாசிரியர் லிங்கேஸ்வரன், சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இத்தோட்டத்தில் கத்தரி, மரவள்ளி, மிளகாய், வற்றாளை, கீரை, பீர்க்கு, பயற்றை, வெண்டி, நாடை, கச்சான் போன்ற மரக்கறிவகைகள் இதன்போது அறுவடை செய்யப்பட்டன.

## பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைக்கு தனியான நீதிமன்றம் வேண்டும்

**கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பிரசாந்தன்**

(மட்டக்களப்பு நிருபர்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு தனியான நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான பூ.பிரசாந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மண்முனை மேற்கு மகளிர் அணியினரால் கடந்த வெள்ளிக்கிழமை (04) ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்ற விழிப்புணர்வு பேரணியில் கலந்துகொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் ஒவ்வொரு ரூபங்களில் அதிகரித்துக்கொண்டு செல்கின்றதே தவிர, குறைந்தபாடில்லை. குடும்ப வன்முறைகள், அலுவலக வன்முறைகள், பொதுவான இடங்களில் இடம்பெறும் வன்முறைகள், போதைப்பொருள் பாவனையால் ஏற்படுகின்ற வன்முறைகள் மற்றும் சட்டவிரோத மதுபான விற்பனை மூலம் ஏற்படுகின்ற வன்முறைகள் என பல்வேறு வன்முறைகள் பெண்கள் மீது சுமத்தப்படுகின்றன. யுத்தம் மற்றும் வறுமை போன்ற பல்வேறு அனர்த்தங்களுக்குள் சிக்கித் தவிக்கின்ற எமது




சமூகம் இவ்வாறான உடல், உள ரீதியாக பல்வேறு பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். இவ்வாறான வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு துரிதமாக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கென மாவட்ட ரீதியாக தனியான நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதுடன், பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்.

அத்துடன் 2020ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் 3,400க்கும் மேற்பட்ட குடும்ப வன்முறைகள் பெண்களுக்கு எதிராக திணிக்கப்பட்டுள்ளது என்பதனையும் அது 2021ஆம் ஆண்டு 3,555ஐ தாண்டியுள்ளன.

மேலும் சட்டவிரோத மதுபாவனை, சட்டவிரோத மது விற்பனை மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அது தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினால் பல பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது வேட்பாளர் பட்டியலில் 25வீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டபோதும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 34வீத இட ஒதுக்கீட்டினை வழங்கியது. அதேபோன்று கட்சிக்கு கிடைத்த பிரதேச சபையின் தவிசாளரையும் பெண்களுக்கென ஒதுக்கி பெண்களை கௌரவித்திருந்ததாகவும் தொடர்ந்துவரும் காலங்களிலும் பெண் தலைமைத்துவம் முன்வர வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனும், அவருடன் இணைந்து கட்சியும் மிக உறுதியாக இருக்கின்றது. பெண்களுக்கான வாழ்வாதாரம் உருவாக்கப்பட வேண்டும். அத்தோடு பெண்கள் கல்வித் துறையிலும் உயர் பதவிகளிலும் முன்நின்று சேவையாற்ற வேண்டும் என்பதிலும் தாம் உறுதியான நிலைப்பாட்டினை கொண்டுள்ளோம். பெண்களுக்கான தலைமைத்துவத்தினை சமூகம் நிலைப்படுத்த முன்வருகின்றபோது பெண்களும் அதற்கு தயாராக இருக்க வேண்டும். தங்களது சுய ஆளுமை விருத்தியில் மிக அக்கறையுடன் பெண்கள் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.

குறித்த நிகழ்வுகளின்போது மண்முனை மேற்கு பிரதேச தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் குழுத்தலைவர் ராமேஸ்வரன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இளங்கேஸ்வரி ஜெயந்தி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# உலக செய்திகள்



## 12 நாட்களை எட்டிய மோதல்

# போரால் சீர்குலையும் உக்ரைன்; தடைகளால் நொறுங்கும் ரஷ்யா

## நெருக்கடிக்குள் உலக நாடுகள்

## போரைத் தொடர்ந்தால் உக்ரைனின் எதிர்காலம் கேள்விக்குறியாகும்

**- புட்டின் எச்சரிக்கை**



உக்ரைன் - ரஷ்யா இடையிலான போரில், சுமார் 11ஆயிரம் ரஷ்ய வீரர்கள் உயிரிழந்ததாக உக்ரைன் தெரிவித்துள்ள நிலையில், அந்நாடு மோதலைத் தொடர்ந்தால் அவர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து புட்டின் மேலும் தெரிவிக்கையில், உக்ரைன் அதிகாரிகள் தற்போதைய நடவடிக்கையைத் தொடர்ந்தால் அந்நாட்டின் நிலைமை மிகவும் மோசமாகி, அது ஒரு நாடாகத் தொடர்வது கூட சிக்கலாகிவிடும் என்றார்.

இதேவேளை, தங்கள் நாட்டு வான்பரப்பில் ரஷ்ய விமானங்கள் பறப்பதை நேட்டோ தடைசெய்யவேண்டும் என உக்ரைன் வலியுறுத்திய நிலையில் அதற்கு பதிலளித்துள்ள புட்டின்,

''ரஷ்யா மீதான மேற்கத்தேய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் போர்ப் பிரகடனத்துக்கு நிகரானவை. அதேவேளை, உக்ரைன் வான்பரப்பில் விமானங்கள் பறக்கத் தடைவிதிக்கும் எந்தவொரு முயற்சியும் உலகிற்கு பேரழிவு தரும் விளைவுகளை ஏற்படுத்தும்'' என எச்சரித்துள்ளார்.

**ஸெலென்ஸ்கி - பைடன் உரையாடல்**

இந்நிலையில் உக்ரைனுக்குக் கூடுதலாக போர் விமானங்களை அனுப்புமாறு அமெரிக்காவிடம் அந்நாட்டு ஜனாதிபதி ஸெலென்ஸ்கி கேட்டுக்கொண்டுள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி நேற்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். அப்போது, உக்ரைனுக்கு பாதுகாப்பு மற்றும் பொருளாதார உதவிகளை செய்யுமாறும், ரஷ்யா மீது தொடர் பொருளாதாரத் தடைகளை விதிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த வாரத்திலேயே இரண்டாவது முறையாக ஸெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் பேசிய பைடன், உக்ரைனுக்கு தேவையான பாதுகாப்பு, மனிதநேய மற்றும் பொருளாதார உதவிகளை செய்ய அமெரிக்கா தயாராக இருப்பதாக உறுதியளித்தார்.

உக்ரைனுக்கு கூடுதலாக போர் விமானங்களை அனுப்புமாறு கேட்டுக் கொண்ட ஸெலென்ஸ்கி, ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் இறக்குமதியை நிறுத்துமாறு வலியுறுத்தினார்.

**12 ஆவது நாளை எட்டிய போர்**

உக்ரைன் - ரஷ்யா இடையிலான போர் நேற்று 12ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், இருதரப்பு மட்டுமின்றி வெளிநாட்டினரும் உயிரிழந்துள்ளனர். ரஷ்யாவின் தாக்குதல் காரணமாக உக்ரைனில் பொருளாதாரம் முற்றாக முடங்கி மனிதாபிமான நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. அதேபோல், மேற்கத்தேய நாடுகள் ரஷ்யா மீது தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதால் ரஷ்ய மக்களும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

இந்த இரு நாடுகளுக்கிடையிலான போரால் ஒட்டுமொத்த உலக நாடுகளின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாக



அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், போரில் ரஷ்ய வீரர்கள் 11 ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளதாக உக்ரைன் இராணுவம் அறிவித்துள்ளது. உக்ரைனின் தெற்கு பகுதியில் கருங்கடலுக்கு அருகேயுள்ள மைகோலைவ் நகரில் ரஷ்யப் படைகள் தீவிர தாக்குதலில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

**ரஷ்யப் படை வசமான உக்ரைனின் மூன்றாவது அணு உலை**

ரஷ்யப் படைகள் உக்ரைனின் மூன்றாவது அணுமின் நிலையத்தைக் கைப்பற்றயுள்ளனர் என அந்நாட்டு ஜனாதிபதி ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இருநாடுகளிடையே தற்காலிக போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே ரஷ்யப் படைகள் மாரியுபோல், வோல்னோவாகா ஆகிய இரண்டு நகரங்களை கடும் தாக்குதல் மூலம் கைப்பற்றியதைத் தொடர்ந்து போர் நிறுத்தம் காலாவதியானது. மீண்டும் உக்கிரமான போர் நீடித்து வருகிறது.

**கெர்சன் இராணுவ தளத்தை கைப்பற்றியதாக ரஷ்யா அறிவிப்பு**

உக்ரைனின் கெர்சன் நகரிலுள்ள இராணுவ தளத்தை கைப்பற்றிவிட்டதாக ரஷ்யா





தெரிவித்துள்ளது.

ரஷ்யப் படைகள் தலைநகர் கீவ்வின் அண்டை நகரான கெர்சனில் தொடர் தாக்குதல் நடத்தி நகரைக் கைப்பற்றின. இந்நிலையில், கெர்சனிலுள்ள உக்ரைன் இராணுவ தளத்தை கைப்பற்றியதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது. அதேநேரம் நகரைச் சுற்றி நிற்கும் ரஷ்யப் படைகளை கண்டித்து உக்ரைன் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

முக்கிய வீதிகளில் திரண்ட நூற்றுக்கணக்கான மக்கள் உக்ரைன் கொடியை ஏந்திக் கொண்டு ரஷ்யாவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

**தற்காலிகப் போர் நிறுத்தம்**

உக்ரைனில் முற்றுகையிட்ட நகரங்களிலிருந்து மக்கள் வெளியேறுவதற்காக நேற்று முன்தினம் ரஷ்யா தற்காலிகப் போர் நிறுத்தத்தை அறிவித்தது.

உக்ரைன் மீது ரஷ்ய இராணுவம் கடந்த பெப்ரவரி 24 முதல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இத்தாக்குதலில் 500க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை ஏவித் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதுடன், பீரங்கிப் படைகளும் தாக்குதல் நடத்தின. இதில் உக்ரைனின் வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதியிலுள்ள நகரங்கள், இராணுவத் தளங்கள், அரசு கட்டடங்கள் என்பன கடும் சேதமடைந்துள்ளன.





வடக்கில் ரஷ்ய எல்லையையொட்டிய கார்கீவ் நகரில் நேற்று முன்தினம் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அசோவ் கடலையொட்டிய துறைமுக நகரான மரியுபோலிலிருந்து மக்கள் வெளியேறுவதற்காகப் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல் உக்ரைனின் கட்டுப்பாட்டிலுள்ள வால்னோவாக்கா நகரிலிருந்து மக்கள் வெளியேறிச் செல்லவும் ரஷ்யப் படையினர் அனுமதித்தனர்.

**மனிதாபிமான வழித்தடம் அமைக்க வேண்டும்**

அதேபோல், தற்காலிகப் போர் நிறுத்தம் நேற்று முடிந்த நிலையில், துறைமுக நகரான மரியுபோலிலும் ரஷ்யப் படைகள் குண்டுகளை வீசித் தாக்கின. அந்நாட்டில் முக்கிய நகரங்களில் போர் தீவிரமடைந்துள்ள நிலையில், அங்கு சிக்கியுள்ள மக்களை பாதுகாப்பாக வெளியேற்றும் வகையில் மனிதாபிமான வழித்தடம் அமைக்க வேண்டும் என உலக நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த போரில், பொதுமக்கள் மீது தங்கள் இராணுவம் குறி வைப்பதில்லை என ரஷ்ய அரசு தெரிவித்து வரும் நிலையில், பல்லாயிரக்கணக்கான மக்கள் போர்ச் சூழலில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**15 இலட்சம் பேர் வெளியேற்றம்**

அப்பகுதிகளில் நீர், உணவின்றி ஏராளமானோர் தவித்து வரும் நிலையில், மக்களை வெளியேற விடாமல் உக்ரைன் இராணுவம் தடுப்பதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. மேலும், போரிலிருந்து தங்களை தற்காத்துக்கொள்ள இதுவரை 15 இலட்சம் பேர் உக்ரைனை விட்டு வெளியேறியுள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

**அப்பாவிகள் 351 பேர் பலி**

உக்ரைனில் ரஷ்யப் படையெடுப்பின் காரணமாக பொதுமக்களில் 351 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க...

# தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 450 கிலோ கஞ்சா, 550 கிலோ ஏலம் பறிமுதல்

தூத்துக்குடி அருகே இலங்கைக்குக் கடத்த முயன்ற 450 கிலோ கஞ்சாவுடன் 07 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தூத்துக்குடி கடற்கரைப் பகுதியிலிருந்து படகு மூலம் இலங்கைக்கு கஞ்சா, மஞ்சள், ஏலக்காய், பீடி இலை உள்ளிட்ட பொருட்கள் கடத்தி செல்லப்படுவதை தடுக்கும் வகையில் இந்திய கியூ பிரிவு பொலிஸார் கடற்கரைப் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் நேற்று அதிகாலையில் தூத்துக்குடி அருகேயுள்ள வெள்ளப்பட்டி கடற்கரையிலிருந்து இலங்கைக்கு படகு மூலம் கஞ்சா கடத்தப்படுவதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.






இதையடுத்து வெள்ளப்பட்டி கடற்கரைக்கு விரைந்த கியூ பிரிவு பொலிஸார் அங்கு படகொன்றில் கஞ்சா மறைத்து வைத்திருந்ததை கண்டுபிடித்தனர். இதைத்தொடர்ந்து படகில் இருந்த 450 கிலோ கஞ்சா கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறி, மூன்று பைக்குகள் மற்றும் 09 செல்போன்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர். மேலும் இதில் தொடர்புடைய 07 பேரை கைது செய்து கியூ பிரிவு பொலிஸார் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேபோன்று தூத்துக்குடி தாளமுத்து நகர் அருகே உள்ள விவேகானந்தா காலனி கடற்கரையில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டிருந்த 02 படகுகளில் சோதனையிட்டபோது மொத்தம் 14 மூடைகளில் 550 கிலோ ஏலம் இருப்பதை கண்டுபிடித்தனர்.

இந்த ஏலக்காய் மூடைகளை சந்தேக நபர்கள் இலங்கைக்கு கடத்த முயன்றமை தெரியவந்துள்ளது. அவர்களை கியூ பிரிவு பொலிஸார் தேடி வருகின்றனர். 10 இலட்சம் ரூபா மதிப்பிலான ஏலக்காய் மூடைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட இரண்டு படகுகளையும் கியூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.




***14ஆம் பக்கத் தொடர்ச்சி...***

இது தொடர்பான அறிக்கையில், பெப்ரவரி 24ஆம் திகதி ரஷ்ய துருப்புகள் படையெடுத்ததிலிருந்து உக்ரைனில் குறைந்தது 351 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 707 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் உண்மையான எண்ணிக்கை கணிசமான அளவு அதிகமாக இருக்கலாம் என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பொதுமக்கள் கனரக பீரங்கிகள், ஏவுகணைகள் மற்றும் வான்வழித் தாக்குதல் மூலம் கொல்லப்பட்டுள்ளதாகவும் ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உக்ரைனின் எல்லைப் பகுதிகளைக் கைப்பற்றிய ரஷ்யா**

உக்ரைனில் பெப்ரவரி 24 முதல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யப் படையினர் தெற்கு, கிழக்கு, வடக்கு எல்லைப் புறங்களில் பல பகுதிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்த கிரிமியாவை 2014ஆம் ஆண்டிலேயே ரஷ்யா கைப்பற்றியது. இப்போதைய போரில் தெற்கில் கெர்சோன், மரியுபோல் துறைமுக நகரங்களைக் கைப்பற்றியுள்ளது.

டோனட்ஸ்க், லுகான்ஸ்க் நகரங்கள் உள்ளிட்ட கிழக்குப் பகுதியை ஏற்கெனவே ரஷ்ய ஆதரவுபெற்ற கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றிவிட்டனர். வடக்கில் கார்கிவ் நகரையொட்டிய எல்லைப்புறப் பகுதிகள் ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலுள்ளன.

தலைநகர் கீவ்வுக்கு வடக்கே பெலாரஸை ஒட்டிய எல்லைப்புறப் பகுதிகளையும் ரஷ்யப் படையினர் கைப்பற்றியுள்ளனர். வடக்குப் போர்முனையில் மார்ச் 03 நிலைவரப்படி ரஷ்யப் படையினர் கீவ் புறநகர்ப் பகுதி வரை முன்னேறி இருந்ததாகப் போர் குறித்த ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ரஷ்யப் படையினர் கைப்பற்றிய பகுதிகளில் பொதுமக்களுக்கு குடிநீர், மின்சாரம், குளிருக்கு வெதுவெதுப்பூட்டும் வசதி ஆகியவற்றை வழங்க மறுப்பதாகக் கூறப்படுகிறது.

**புட்டினை சந்தித்த இஸ்ரேலியப் பிரதமர்**

போருக்கு நடுவே இஸ்ரேலியப் பிரதமர் ரஷ்ய ஜனாதிபதியை நேரில் சந்தித்துப் பேசியுள்ளார்.


கிரெம்ளின் மாளிகையில் இஸ்ரேலிய பிரதமர் நஃப்தலி பென்னட்டும், புட்டினும் சந்தித்துப் பேசியதாகக் கூறப்படுகிறது. இந்தப் பேச்சுவார்த்தை சுமார் 03 மணி நேரம் நீடித்ததாக இஸ்ரேலிய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனுடன் போர் தொடங்கியதிலிருந்து புட்டினைச் சந்தித்த இரண்டாவது தலைவர் பென்னட் என்பது குறிப்பிடத்தக்கது.

**பேரழிவை ஏற்படுத்தும்**

''ரஷ்யா மீதான மேற்கத்தேய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் போர் பிரகடனத்துக்கு நிகரானவை. அதேவேளை, உக்ரைன் வான்பரப்பில் விமானங்கள் பறக்கத் தடை விதிக்கும் எந்தவொரு முயற்சியும் உலகுக்கு பேரழிவுகளை ஏற்படுத்தும்'' என புட்டின் எச்சரித்துள்ளார்.

இதேவேளை உக்ரைன் மீது தங்கள் நாட்டு விமானங்கள் பறப்பதற்கு மேலைநாடுகள் தடை விதிப்பது, தற்போது அங்கு நடைபெற்றுவரும் போரில் அந்த நாடுகள் இணைந்துகொள்வதற்கு சமமானது என புட்டின் தெரிவித்துள்ளார்.



**தடைவிதிக்க வலியுறுத்தும் உக்ரைன்**

உக்ரைன் மீது ரஷ்ய விமானங்கள் பறப்பதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்று நேட்டோ அமைப்பிடம் உக்ரைன் வலியுறுத்தி வருகிறது. அத்தகைய நடவடிக்கையை எந்த நாடு எடுத்தாலும், அந்த நாடு உக்ரைன் போரில் நேரடியாகப் பங்கேற்பதாக அர்த்தமாகும்.

ஒரு நாட்டின் வான் எல்லையில் விமானங்கள் பறக்கத் தடை விதிப்பதாக (நோ ஃப்ளை ஸோன்) அறிவிப்பது, எதிரி நாட்டு போர் விமானங்கள் அந்த நாட்டில் தாக்குதல் நடத்துவதைத் தடுத்து நிறுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கையாகும். அவ்வாறு அறிவிக்கப்பட்ட பின்னர் அந்தப் பகுதியில் விமானங்கள் பறந்தால், அந்த விமானங்களை தடை விதித்துள்ள நாடு இடைமறித்து தாக்கி அழிக்கவேண்டும். விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொண்டோ, தாக்குதல் விமானங்களைக் கொண்டே இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிலையில், தங்கள் நாட்டின் மீது விமானங்கள் பறக்கத் தடை விதிப்பதாக நேட்டோ நாடுகள் அறிவிக்கவேண்டும் என்று உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி கோரிக்கை விடுத்து வருகிறார்.

**உக்ரைனின் கோரிக்கையை மறுத்த நேட்டோ**

அவ்வாறு நேட்டோ நாடுகள் அறிவித்தால், உக்ரைன் மீது தாக்குதல் நடத்த ரஷ்ய ஹெலிகொப்டர்கள் மற்றும் விமானங்கள் வரும்போது நேட்டோ படைகள் அவற்றை தாக்கி அழிக்க வேண்டியிருக்கும்.

அவ்வாறு தாக்கினால், ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்குமான தற்போதைய போர் ரஷ்யாவுக்கும் நேட்டோ அமைப்பின் நாடுகளுக்கும் இடையிலான போராக உருவெடுக்கும். அணு ஆயுதங்களை வைத்திருக்கும் இரு தரப்புக்கும் போர் வெடித்தால், அது பேரழிவை ஏற்படுத்தும் அணு ஆயுதப் போராக மாறும் அபாயமுள்ளது.

இந்தக் காரணங்களால், தங்கள் நாட்டின் மீது விமானங்கள் பறக்கத் தடை விதிப்பதாக அறிவிக்க வேண்டும் என்ற உக்ரைனின் கோரிக்கையை நேட்டோ அமைப்பு நிராகரித்தது.

இதற்கு ஸெலென்ஸ்கி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

**உயிரிழப்புக்கு நேட்டோவின் பலவீனமே காரணம் - ஸெலென்ஸ்கி**

''உக்ரைனில் ஏற்படும் ஒவ்வொரு உயிரிழப்புக்கும் சேதங்களுக்கும் நேட்டோவின் பலவீனமும் ஒற்றுமையின்மையும் தான் காரணமாக இருக்கும் என அந்நாட்டு ஜனாதிபதி ஸெலென்ஸ்கி விமர்சித்துள்ளார்.

தனது கோரிக்கையை நிராகரித்ததன் மூலம் உக்ரைன் மீது மேலும் குண்டு மழை பொழிய நேட்டோ அனுமதித்துள்ளது. தற்போதைய போரில் உக்ரைன் தாக்குப்பிடிக்காவிட்டால் பிற ஐரோப்பிய நாடுகளும் நிலைத்திருக்க முடியாத நிலை ஏற்படும் என ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

**நேட்டோ விளக்கம்**

இந்நிலையில் ஸெலென்ஸ்கியின் கோரிக்கையை ஏற்றால் ஐரோப்பா முழுவதும் போர் பரவும் நிலை ஏற்படும் என்பதால் அதை நிராகரித்ததாக நேட்டோ தலைவர் ஸ்டால்டன்பர்க் விளக்கமளித்துள்ளார்.

**ரஷ்யாவில் சேவையை நிறுத்திய விசா - மாஸ்டர் கார்ட்**

ரஷ்யாவில் கிரடிட் மற்றும் டெபிட் கார்டுகளில் பெரும்பங்கு வகிக்கும் விசா கார்ட் மற்றும் மாஸ்டர் கார்டுகளின் சேவை நிறுத்தப்பட்டுள்ளன.

ரஷ்யாவிலுள்ள தனது வாடிக்கையாளர்களின் பரிவர்த்தனைகளை வரும் நாட்களில் முடிவுக்கு கொண்டுவர இருப்பதாக விசா நிறுவனம் தெரிவித்துள்ளது. இனி விசா அட்டைகள் மூலம் ரஷ்யாவுக்கு உள்ளும், வெளியேயும் எந்த பரிவர்த்தனையும் நடைபெறாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் ரஷ்ய வங்கிகளால் வழங்கப்படும் கார்டுகளை ஆதரிக்கப் போவதில்லை என மாஸ்டர் கார்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் வெளிநாடுகளில் ரஷ்ய ஏ.டி.எம்களில் மாஸ்டர் கார்ட் பலனளிக்காது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**உலகளாவிய பொருளாதாரம் கடும் சரிவு**

உலகளாவிய பொருளாதாரம் ஏற்கனவே சரிந்துவரும் நிலையில், உக்ரைனில் நாளுக்கு நாள் போர் தொடர்வது பெரியளவிலான பொருளாதார சரிவை ஏற்படுத்தும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கையை கண்டித்து பல்வேறு நாடுகள் அறிவித்த பொருளாதாரத் தடைகளின் விளைவே ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்யின் விலை 120 அமெரிக்க டொலரை நெருங்கியதாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே கொரோனா பரவலால் சீரழிவை சந்தித்த உலக பொருளாதாரம், அதிலிருந்து மீண்டு வரும் நிலையில் போரால் உலகளவிலான பணவீக்கம் அதிகரிப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.



உக்ரைனுக்கு வழங்குவதாக அறிவித்த 140 கோடி அமெரிக்க டொலர் மனிதாபிமான உதவிகளை அடுத்த வாரம் நிர்வாகக் குழுவின் ஒப்புதல் பெற்று முதற்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

**பாரிய நெருக்கடிக்குள் ரஷ்யா**

உக்ரைன் மீதான போரால் ரஷ்ய மக்களும் கடும் பாதிப்பை சந்தித்துள்ளனர். இதற்கு முன்னர் பெற்ற பலன்களை அந்நாட்டு மக்கள் இழந்துள்ளனர்.

உக்ரைன் மீதான போரால் பொருளாதார விளைவுகளை ரஷ்யா எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது. டொலருக்கு நிகரான ரஷ்ய பணமான 'ரூபிள்' மதிப்பு மிகவும் குறைந்துள்ளது.

ரஷ்ய வங்கிகள் மீதான பொருளாதாரத் தடைகளால் அந்நாட்டு நிதிச் சந்தைகளில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. ரஷ்ய சந்தையில் கடந்த வாரத்தில் பெரிய மற்றும் சிறிய நிறுவனங்களின் வெளியேற்றம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக சாதாரண ரஷ்ய குடிமக்கள் போருக்கு முன் அனுபவித்து வந்த பயன்களை இப்போது இழக்கத் தொடங்கியுள்ளனர். நாடு முழுவதும் ஏராளமான ரஷ்யர்கள் கூகுள் பே மற்றும் அப்பிள் பே பயன்படுத்துகின்றனர். அன்றாட தேவைகளுக்கு அவர்கள் தங்கள் ஸ்மார்ட்போன் வழியாக பயன்படுத்தும் இணையவழி பரிவர்த்தனைகளை பயன்படுத்த முடியாத சூழல் உருவாகியுள்ளது.

ரஷ்ய மக்களுடைய விசா - மாஸ்டர் கார்ட் போன்ற ஏ.டி.எம். கார்டுகள் செயலற்று போயின. கூகுள், பேஸ்புக் மற்றும் யூடியூப் உடன் இணைந்து ரஷ்ய அரசு ஊடகங்கள் அதன் தளங்களில் பணம் சம்பாதிப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துள்ளன. போர் பதற்றம் தொடங்கியதிலிருந்தே ஏ.டி.எம். மையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து பணம் எடுத்தனர். ஆனால், நிர்ணயிக்கப்பட்ட அளவிலான தொகையை மட்டுமே ஒருவர் எடுத்துக்கொள்ள முடியும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதால் அத்தியாவசிய பணத்தேவைக்கு கூட சிரமப்பட்டு வருகின்றனர்.

வெளிநாட்டுக்கு சுற்றுலா சென்ற ரஷ்யவாசிகள் இப்போது உலக நாடுகள் ரஷ்யாவுக்கு விமானம் இயக்கத் தடை செய்யப்பட்டுள்ளதால் திக்கற்ற நிலையில் உள்ளனர். சுமார் ஒன்றரை இலட்சம் ரஷ்யர்கள் வெளிநாடுகளிலுள்ளனர். அவர்கள் தங்கள் தாயகம் திரும்ப வழியின்றி திண்டாடி வருகின்றனர். இன்டெல் கொர்ப்பரேஷன், ஹெச். பி. நிறுவனம், அப்பிள் மற்றும் மைக்ரோசொப்ட் நிறுவனங்கள் வரிசையில் சம்சுங் எலக்ட்ரோனிக்ஸ் கோர்ப்பரேஷன் நிறுவனமும் ரஷ்யாவில் தங்கள் நிறுவன பொருட்கள் விற்பனையை நிறுத்துவதாக அறிவித்துள்ளன. இதன் காரணமாக அந்நிறுவன பொருட்களை வாங்க முடியாத சூழல் உருவாகியுள்ளது.

பிரபல சினிமா பட நிறுவனங்களான யூனிவர்சல் பிக்சர்ஸ், சோனி, பாராமவுண்ட் பிக்சர்ஸ், வால்ட் டிஸ்னி கம்பனி போன்ற ஹொலிவூட் நிறுவனங்கள் ரஷ்யாவில் தங்கள் சேவைகளை தடை செய்துள்ளன. இதனால் மக்கள் தாங்கள் விரும்பும் படங்களை பார்க்க முடியாத சூழலுள்ளது.

**பணயக் கைதிகளாக சிக்கிய 670 நோயாளிகள்**

உக்ரைனின் கீவ்விலுள்ள மனநல வைத்தியசாலையொன்றை ரஷ்யப் படைகள் கைப்பற்றியுள்ளன.

இதில் 670 நோயாளிகள் பணயக் கைதிகளாக சிக்கியுள்ளதாக மாகாண ஆளுநர் குலேபா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், நோயாளிகளை அங்கிருந்து எப்படி வெளியேற்றுவது என்று தெரியவில்லை. வைத்தியசாலையில் மருந்துகள், குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சில நோயாளிகள் பல ஆண்டுகளாக படுக்கையிலிருந்து எழ முடியாதவர்கள், தனி கவனம் தேவைப்படுகின்றவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே ரஷ்யப் படைகள் கீவ் தலைநகரைக் கைப்பற்ற அக்கம் பக்கமுள்ள சிறிய நகரங்களைக் கைப்பற்றி வருகின்றன. கார்க்கீவ், நிக்கோலேவ், செர்னிவ், சுமி ஆகிய நகரங்களில் ரஷ்யப் படைகள் வளைத்து விட்டன.

***04ஆம் பக்கத் தொடர்ச்சி...***

**உக்ரைன் ஜனாதிபதி காரணமா?**

உக்ரைனின் மேற்குப் பகுதியில் உக்ரைனியர்களும் கிழக்குப் பகுதியில் ரஷ்ய ஆதரவு மக்களும் இருந்தனர். கிழக்குப் பகுதியில் ரஷ்யர்கள் அதிகமுள்ள டோனட்ஸ்க், லுஹான்ஸ்க் ஆகிய பிராந்தியங்கள் 2014இல் குடியரசுகளாக அறிவிக்கப்பட்டன. ரஷ்யா அந்த பகுதி மக்களிடையே கிளர்ச்சியை ஏற்படுத்தி இதைச் செய்ததாக கூறப்பட்டது. ஆனால், பின்னர் ரஷ்யா இதனை மறுத்தது.

அதுபோல, 2014இல் ரஷ்யர்கள் அதிகமுள்ள கிரிமியா பகுதியையும் கிளர்ச்சியின் பேரில் ரஷ்யா தன் நாட்டுடன் இணைத்துக்கொண்டது. ஆனால், பிற நாடுகள் இன்னும் இதனை அங்கீகரிக்கவில்லை.

உக்ரைனின் கிழக்குப் பகுதியான டொடன்ஸ்க், லுஹான்ஸ் பிராந்தியங்கள் தனிக் குடியரசாக அறிவிக்கப்பட்டதற்குக் காரணம் 2014 -15இல் போடப்பட்ட மின்ஸ்க் ஒப்பந்தங்கள்.

நேட்டோவில் இணைய உக்ரைன் விருப்பம் தெரிவித்தபோது அதற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்தது. ஏனெனில் கிழக்கு உக்ரைனில் ரஷ்யர்கள் அதிகம் இருந்தனர். இதையடுத்தே, உக்ரைனில் டோனட்ஸ்க், லுஹான்ஸ்க் பகுதிகளுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டும், இந்த பகுதிகளுக்கு தங்களின் அனுமதியுடன் தேர்தல் நடத்த வேண்டும் என ரஷ்யா கூறியதன்பேரில் ஒப்பந்தத்தின்படி உக்ரைனும் ஒப்புக் கொண்டது. இவை உக்ரைனின் பகுதிகளாக இருந்தாலும் ரஷ்யாவின் ஆதரவாகவே பார்க்கப்பட்டன. அதுபோல, உக்ரைனை நேட்டோவில் இணைப்பதை ரஷ்யா ஒப்புக்கொள்ளவில்லை.

சோவியத் ஒன்றியத்தில் இருந்து உக்ரைன் தனிநாடாக பிரிந்த பிறகு, உக்ரைனின் ஜனாதிபதிகளாக இருந்தவர்கள் ரஷ்யாவின் கொள்கைகளுக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்தவர்களே. இந்த சூழ்நிலையில்தான் 2019இல் உக்ரைன் ஜனாதிபதியானார் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி. இவர்களது பெற்றோர்கள் யூத இனத்தைச் சேர்ந்தவர்கள்.

ஸெலென்ஸ்கி ஜனாதிபதியானவுடன் உக்ரைனை நேட்டோவில் இணைக்க முயற்சித்து வந்தார். மேலும், முன்னதாக ரஷ்யாவுடன் போடப்பட்ட மின்ஸ்க் ஒப்பந்தங்களை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. டோனட்ஸ்க், லுஹான்ஸ்க் பகுதிகள் சுதந்திரமாக இயங்கும் என்று அறிவித்தார். ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகள்தான் புட்டினை கோபமடையச் செய்தன.

இதனால் ரஷ்யா, நேட்டோவில் சேரக்கூடாது என உக்ரைனுக்கும், உக்ரைனை சேர்க்கக்கூடாது என்று அமெரிக்காவுக்கும் எச்சரிக்கை விடுத்தது. 1997க்கு பிறகு நேட்டோவில் சேர்ந்த நாடுகளை அமைப்பில் இருந்து விலக்க வேண்டும் என்றும் அமெரிக்காவிடம் ரஷ்யா கூறியது. இதன் காரணமாகவே நேட்டோவில் உக்ரைனை சேர்க்க அமெரிக்கா தயக்கம் காட்டி வந்தது.

உக்ரைன் மக்களின் ஒரு பகுதியினர் ஐரோப்பிய யூனியனுடன் சேர விருப்பம் தெரிவிக்கின்றனர். ஆனால், ரஷ்யாவுக்கு இது பாதுகாப்பு அச்சுறுத்தலாக இருக்கிறது.

உக்ரைன் நேட்டோவில் இணையும் பட்சத்தில் ரஷ்ய எல்லையை நேட்டோ படைகள் சுற்றிவளைக்க வாய்ப்புள்ளது. ரஷ்யாவின் வணிகப் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்படலாம்.

மனிதாபிமான அடிப்படையில் ரஷ்யா, உக்ரைன் மீது போர் தொடுத்தது தவறு என்றாலும், ரஷ்யாவின் அனைத்துவித பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் என்று எண்ணியே ரஷ்யா, உக்ரைன் மீது தாக்குதலை மேற்கொள்ள முடிவெடுத்திருக்க வேண்டும்.

ஆப்கான் போர் தோல்வியினால் அமெரிக்கா சற்று தொய்வடைந்த நிலையில் இது சரியான தருணம் என்று நினைத்து புட்டின் இந்த முடிவை எடுத்திருக்கிறார்.

ஒருபக்கம், தன்னை அமைப்பில் இணைத்துக்கொள்வதாகக் கூறிய நேட்டோ படைகள், தங்களுக்கு உதவும் என்ற எண்ணத்தில் உக்ரைன் இந்த போரை எதிர்கொண்டிருக்கும். விளைவு? உக்ரைன் நாடு சிதறடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. உக்ரைனை முழுவதுமாக ரஷ்யா கைப்பற்ற வாய்ப்பு அதிகம் உள்ளது.

ஒருவேளை, உக்ரைனை முழுவதுமாக ரஷ்யா கைப்பற்றினாலும் எதிர்காலத்தில் உக்ரைன் மக்கள் கிளர்ச்சியால் ரஷ்யாவிடம் இருந்து உக்ரைன் விடுபடவும் வாய்ப்புள்ளது.

**மூன்றாம் உலகப் போர் உருவாகுமா?**

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு தீவிரமடைந்து வரும் நிலையில், மூன்றாம் உலகப் போர் மிகுந்த அழிவை ஏற்படுத்தும் என்று ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் எச்சரித்துள்ளார். அமெரிக்காவின் உத்தரவின்பேரில் உக்ரைன் அமைதிப் பேச்சுவார்த்தையை தாமதப்படுத்துவதாகவும் லாவ்ரோவ் குற்றம்சாட்டியுள்ளார். உக்ரைன் அணு ஆயுதங்களைப் பெறுவதைத் தடுப்பதே இந்தப் படையெடுப்பின் நோக்கம் என்றும் எச்சரித்தார்.

தற்போது ரஷ்யா - உக்ரைன் இடையே மட்டுமே போர் நடந்து வருகிறது. அமெரிக்கா, உக்ரைனுக்கு நிதியுதவி, இராணுவ உதவியை மட்டுமே வழங்கி வருகிறது. படைகளை அனுப்பத் தயாராக இல்லை. அவ்வாறு ஒருவேளை நேட்டோ படைகள் உக்ரைனுக்கு ஆதரவாக இறங்கினால் இது உலகப்போராக மாற வாய்ப்புள்ளது. ஆனால், உலக அமைதி கருதி அமெரிக்கா இதனைச் செய்ய முற்படாது. ஆனால், உக்ரைனுக்கு பிற நாடுகள் அனைத்து வகையான உதவிகளையும் வழங்க வாய்ப்புள்ளது. எனினும், போர்க்களத்தில் உக்ரைன் தனித்துதான் விடப்பட்டிருக்கிறது. இதனை ஜனாதிபதி ஸெலென்ஸ்கி முன்கூட்டியே எதிர்பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது.

மற்றொரு பக்கம், அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட உலக நாடுகளும் ரஷ்யா மீது முழுமையாக பொருளாதாரத் தடைகளை விதிக்கவில்லை. பகுதியாகவே தடைகளை விதித்து வருகின்றன. ஏனெனில் வணிக, பொருளாதார ரீதியாக ரஷ்யாவை சார்ந்து பல நாடுகள் உள்ளன. உதாரணமாக மசகு எண்ணெய் அதிகம் ஏற்றுமதி செய்யும் நாடு ரஷ்யா. மசகு எண்ணெய் விலை 100 டொலரை எட்டியுள்ளதற்கு காரணம் உக்ரைன் போரே.

உலக நாடுகள் ஒட்டுமொத்தமாக ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதிக்கும்பட்சத்தில் ரஷ்யா தாக்குதலை தீவிரப்படுத்தலாம். ஆனால், இந்த இரண்டுக்குமே இப்போது வாய்ப்பு குறைவு என்பதால் மூன்றாம் உலகப் போர் உருவாக வாய்ப்பு குறைவு என கூறப்படுகிறது.

எனினும், போர்ச் சூழலில் எதையும் கணிக்க முடியாது, புட்டினின் நடவடிக்கைகளும் கணிக்க முடியாதவை என்பதால் எதையும் சந்திக்க உலக நாடுகள் தயாராக இருக்க வேண்டும்.

**• எம்.முத்துமாரி**

# இந்தியாவின் சுழலில் சின்னாபின்னமான இலங்கை அணி
# மூன்றே நாட்களில் டெஸ்ட்டை வென்றது இந்தியா




சுற்றுலா இலங்கை அணிக்கும், இந்திய அணிக்கும் இடையிலான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணியை மூன்றே நாட்களில் வீழ்த்தியது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடர் மற்றும் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இருபதுக்கு 20 சர்வதேச தொடரை இலங்கை அணி 0-3 என்ற அடிப்படையில் முழுமையாக இழந்த நிலையில், அடுத்த தொடரான டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை மொஹாலியில் ஆரம்பமானது.

போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி தனது முதலில் 574 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில் ரவீந்திர ஜடேஜா ஆட்டமிழக்காமல் மிக அபாரமாக 175 ஓட்டங்களைக் குவித்தார். பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு பெத்தும் நிசங்க மாத்திரம் நிலைத்து நின்று அரைச்சதம் கடக்க, ஏனைய வீரர்கள் அனைவரும் சொதப்ப இலங்கை அணி 174 ஓட்டங்களுக்கு சுருண்டு போனது.

இதனால் பலோ ஓன் அடிப்படையில் மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு நிரோஷன் டிக்வெல்ல அரைச்சதம் கடக்க 178 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு என இரு துறைகளிலும் அசத்திய ரவீந்திர ஜடேஜா போட்டியின் ஆட்டநாயகனாக தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி 1-0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது. இரண்டாவதும், இறுதியுமான போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பெங்களூரில் பகலிரவு டெஸ்ட் போட்டியாக நடைபெறுகிறது.

## ஐ.பி.எல். முதல் ஆட்டத்தில் சி.எஸ்.கே. – கே.கே.ஆர். மோதல்

10 அணிகள் பங்கேற்கும் 15ஆவது ஐ.பி.எல். தொடரின் லீக் போட்டிகளுக்கான முழுமையான போட்டி அட்டவணை பி.சி.சி.ஐயினால் நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. அதனடிப்படையில் எதிர்வரும் 26ஆம் திகதி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெறும் முதல் போட்டியில் நடப்பு சம்பியன் சி.எஸ்.கே. – கே.கே.ஆர். அணியை எதிர்த்தாடுகிறது.

மும்பை வான்கடே மைதானம், புனே எம்.சி.ஏ. மைதானம், மும்பை டி.வை.பட்டில் மைதானம் மற்றும் மும்பை பிராபோர்ன் சி.சி.ஐ. ஆகிய 4 மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன. மொத்தம் 65 நாட்கள் நடைபெறும் தொடரில் 70 லீக் போட்டிகள் மற்றும் 4 பிளேஓஃப் ஆட்டங்கள் விளையாடப்படும். இறுதிப் போட்டிக்கான அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முழுமையான போட்டி அட்டவணையை 7ஆம் பக்கத்தில் பார்க்கவும்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# மறைந்த ஜாம்பவான் வோர்னின் வாழ்க்கையில் நிகழ்ந்த முக்கிய சர்ச்சைகள்






கிரிக்கெட் உலகின் முன்னாள் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான ஷேன் வோர்ன் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திடீர் மாரடைப்பு காரணமாக தாய்லாந்தில் தனது 52ஆவது வயதில் உலகை விட்டுப் பிரிந்தார். 145 டெஸ்ட் போட்டிகளில் 702 விக்கெட்களை வீழ்த்தி ஒரு ஜாம்பவானாகத் திகழ்ந்த ஷேன் வோர்ன், கிரிக்கெட் உலகில் பல சாதனைகளைப் படைத்ததற்கு நிகராக, அதிகமான சர்ச்சைகளிலும் சிக்கியுள்ளார். அதில் அவரது வாழ்க்கையைப் புரட்டிப்போட்ட மூன்று முக்கிய சர்ச்சைகள் குறித்து காண்போம்.

### ஒரு வருட தடை

2003ஆம் ஆண்டு ஐ.சி.சி. உலகக்கிண்ண தொடர் ஆரம்பமாகவிருந்த சமயத்தில், அவரின் உடற்தகுதி பெரிய பிரச்சினையாகப் பார்க்கப்பட்டது. அவர் சரியாக உடற்பயிற்சி செய்யவில்லையென்றும், உடற்தகுதி இல்லையென்றும் கூறி அணியிலிருந்து நீக்கப்பட வாய்ப்பு அதிகமாக இருந்தது. அந்த சமயத்தில் உடலை குறுகிய காலத்திற்குள் கட்டுக்கோப்பாக மாற்ற, சில தடைசெய்யப்பட்ட மருந்துகளை எடுத்துக்கொண்டார். இந்த உண்மை வெளிச்சத்திற்கு வந்த நிலையில், அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையால் ஒரு வருடம் தடைக்குள்ளானார்.

அந்த சமயத்தில் அவர் கிரிக்கெட் வர்ணனை செய்யும் பணியில் ஈடுபட்டு வந்தார். அவரின் கிரிக்கெட் வர்ணனை ரசிகர்களுக்குப் பிடித்துப் போனதால், அதன்பிறகு 2007வரை கிரிக்கெட் விளையாடிக் கொண்டே வர்ணனை பணியிலும் ஈடுபட்டு வந்தார். அடுத்து கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு அதனை முழுநேரப் பணியாக மாற்றிக்கொண்டார்.

### அணித்தலைவருடன் மோதல்

ஷேன் வோர்ன் 1999ஆம் ஆண்டு காலகட்டத்தில் உலக கிரிக்கெட்டில் தவிர்க்க முடியாத வீரராகத் திகழ்ந்து வந்தார். இவரது பந்தை எதிர்கொள்ள அனைத்து முன்னணி துடுப்பாட்ட வீரர்களும் தடுமாறி வந்தனர். அந்த சமயத்தில் மேற்கிந்திய தீவுகளுக்கு சென்று அவுஸ்திரேலிய அணி கிரிக்கெட் தொடரில் பங்கேற்றது. அப்போது மூன்றாவது டெஸ்ட் போட்டியின்போது அவுஸ்திரேலிய கேப்டன் ஸ்டீவ் வோக், வோர்னை அணியிலிருந்து நீக்கினார். அதற்கான காரணத்தையும் ஸ்டீவ் வோக் விளக்கவில்லை.

இதனால் அதிருப்தியிலிருந்த ஷேன் வோர்ன், தொடர்ந்து ஸ்டீவ் வோக்குடன் மோதல் போக்கிலிருந்து வந்தார். இதுகுறித்து 2016ஆம் ஆண்டில் கிரிக்கெட் வர்ணனை செய்தபோது பேசிய வோர்ன், "ஸ்டீவ் வோக் ஒரு சுயநலம் பிடித்த கிரிக்கெட்டர்" எனக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

### பாலியல் குற்றச்சாட்டு

2000ஆம் ஆண்டில் ஷேன் வோர்ன் மீது ஒரு பாலியல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த தாதி ஒருவர், "எனக்கு வோர்ன் தொடர்ந்து பாலியல் ரீதியான குறுஞ்செய்திகளை அனுப்பிக்கொண்டிருக்கிறார்" என பகிரங்கமாக அறிவித்து ஆதாரத்தையும் வெளியிட்டார். அப்போது வோர்னுக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகளும் இருந்தன.

இந்த செய்தி குறித்து விளக்கமளித்த வோர்ன், "போதையில் இருந்தபோது அப்படி அனுப்பியிருக்கலாம்" என்று தெரிவித்தார். இதனால் அதிருப்தியடைந்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, வோர்னின் துணைத் தலைவர் பதவியைப் பறித்தது. அதன்பிறகு ஒரு வீரராக மட்டுமே அணியில் அவர் இடம்பிடித்து வந்தார்.

# கலவர பூமியாக மாறிய உதைபந்து மைதானம்; 22 பேர் காயம் – இருவர் கவலைக்கிடம்






2022 கிளாசுரா உதைபந்தாட்டத் தொடரின் 9ஆவது சுற்றுப் போட்டிகள் மெக்சிகோவில் நடைபெற்றுவரும் நிலையில், நேற்று முன்தினம் குரேடாரோ நகரிலுள்ள லா கொரேகிடோரா மைதானத்தில், குரேடாரோ - அட்லஸ் அணிகளுக்கிடையேயான போட்டி நடைபெற்றது.

இதன்போது திடீரென கலவரம் ஏற்பட்டது. போட்டியின் 63ஆவது நிமிடத்தில் ரசிகர்களுக்கிடையே சண்டை மூண்டது. பார்வையாளர்கள் அரங்கில் அமர்ந்திருந்த ரசிகர்கள், தங்களுக்குள் ஒருவரையொருவர் மாறி மாறி கடுமையாக தாக்கிக் கொண்டனர். இதனையடுத்து ரசிகர்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்காக பாதுகாவலர்கள் மைதானத்தின் கதவுகளைத் திறந்தனர்.

ஆனால், சிலர் வெளியேறுவதற்கு பதிலாக தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டனர். அதில் 22 பேர் காயமடைந்தனர். இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. இதனால் மைதானம் முழுவதும் கலவர பூமியாகக் காட்சியளித்தது.

இதனையடுத்து போட்டி பாதியிலேயே நிறுத்தப்பட்டது. வீரர்கள் பாதுகாப்பாக அவர்கள் தங்கும் அறைகளுக்கு அனுப்பப்பட்டனர். இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

# 35 வருட இந்திய சாதனையை முறியடித்த ஜடேஜா



இலங்கை அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்களைக் குவித்த இந்திய அணியின் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா இந்திய முன்னாள் தலைவர் கபில்தேவ் நிகழ்த்தியிருந்த 35 வருட சாதனையை முறியடித்தார்.

இலங்கைக்கு எதிராக மொஹாலியில் நடைபெற்றுவரும் முதல் டெஸ்ட் போட்டியில், இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட்கள் இழப்பிற்கு 574 ஓட்டங்களைக் குவித்த நிலையில், இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டது. இதில் சகலதுறை வீரர் ரவீந்திர ஜடேஜா ஆட்டமிழக்காமல் 175 ஓட்டங்களைக் குவித்தார்.

7ஆவது வீரராக அல்லது அதற்குக் கீழ் களமிறங்கி அதிக ஓட்டங்களைக் குவித்த இந்திய வீரர் என்ற சாதனை 35 வருடங்களாக கபில்தேவ் வசம் இருந்துவந்தது. 1986ஆம் ஆண்டு கான்பூரில் நடைபெற்ற இலங்கை அணிக்கு எதிரான போட்டியில், 7ஆவது வீரராகக் களமிறங்கி கபில்தேவ் 163 ஓட்டங்களைக் குவித்ததே இதுவரை சாதனையாக இருந்து வந்தது. தற்போது 175 ஓட்டங்களைக் குவித்து ஜடேஜா அதனைக் கடந்துள்ளார்.

# சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் அபார வெற்றி



(எஸ். அஷ்ரப்கான்)

சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் 3 0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் அபார வெற்றி பெற்றது.

சாய்ந்தமருது பௌஸி ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில், நிந்தவூர் சவுண்டர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது.

இப்போட்டியில் பிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு வழங்கப்பட்ட தண்டனை உதையைப் பயன்படுத்தி அக்கழகத்தின் முஹம்மட் அப்றாஸ் முதலாவது கோலினை பெற்றுக் கொடுத்தார். பின்னர், முஹம்மட் முப்ரீஸ் இரு கோல்களைப் பெற இறுதியில் 3 0 என்ற கோல்கள் வித்தியாசத்தில் சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. இப்போட்டிக்கு நடுவர்களாக அம்பாறை கச்சேரியின் விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எம்.றிஷாட், முஹம்மட் ஹாதி மற்றும் முஹம்மட் அஷ்ரப் ஆகியோர் கடமையாற்றினர்.

# தெற்கை வீழ்த்தி சம்பியனான வட மாகாண அணி

(ஏ. அகீல் சிஹாப்)




இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாகாண அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப்போட்டியில் தென் மாகாண அணியை 3-1 என்ற அடிப்படையில் வீழ்த்திய வட மாகாண அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதிப்போட்டியின் முதல் பாதி ஆட்ட நேர முடிவில் வட மாகாண அணி 2-0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது. மீண்டும் இரண்டாம் பாதி ஆரம்பமாகி வட மாகாண அணியினர் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த நிலையில் போட்டியின் மூன்றாவது கோலும் அவர்களுக்குக் கிடைத்தது.

வட மாகாண அணித்தலைவர் நிதர்சன் தனது அணியின் மூன்றாவது கோலை அடித்தார். இந்த கோலுடன், சுதந்திரக் கிண்ணத் தொடரில் தனது 7ஆவது கோலை பதிவுசெய்த நிதர்சன் தொடரில் அதிக கோல்களைப் பெற்ற வீரராக மாறினார். இறுதியில் 3-1 என்ற கோல்கள் அடிப்படையில் வட மாகாண அணி சம்பியனானது.

### தொடரின் விருதுகள்

★ தங்கப் பாதணி – மரியதாஸ் நிதர்சன் (வட மாகாணம்)

★ தங்கக் கையுறை – மொஹமட் முர்ஷீத் (கிழக்கு மாகாணம்)

★ தங்கப் பந்து – மரியதாஸ் நிதர்சன் (வட மாகாணம்)

★வளர்ந்து வரும் வீரர் – மொஹமட் முன்ஷிப் (கிழக்கு மாகாணம்)

★ சிறந்த விளையாட்டு விழுமியங்களைக் கொண்ட அணி – கிழக்கு மாகாணம்

குறித்த சுதந்திரக் கிண்ண உதைபந்து தொடரில் தமிழ்பேசும் வீரர்கள் சாதித்துள்ளார்கள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. வட மாகாண அணி சம்பியன் கிண்ணத்தை வென்ற நிலையில், கிழக்கு மாகாண அணி அரையிறுதி வரை முன்னேறியிருந்தது. இதற்கு அப்பால் ஏனைய மாகாண அணிகளில் சாதித்த வீரர்களில் பெரும்பாலானோர் தமிழ்பேசும் வீரர்களாகவே காணப்பட்டனர்.

இதனடிப்படையில் குறித்த உதைபந்து தொடரானது தமிழ்பேசும் வீரர்களுக்கு தேசிய அணியில் இடம்பிடிக்க சிறந்த களமாக அமைந்திருந்தது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7